Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்


அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 சித்திரை 05 வெள்ளிக்கிழமை (18.04.2014) பக்கங்கள் 20 ...ச – 199

## கே.பி. ஆபத்தானவர் அல்ல இன்ரர்போல் சான்றுரைக்கிறது



(கொழும்பு)

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் சர்வதேச தலைவராக இருந்த கே.பி என்றழைக்கப்படும் குமரன் பத்மநாதன் மீது சர்வதேச பொலிஸாரான இன்டர்போலினால் விடுக்கப்பட்டிருந்த அபாய அறிவிப்பு நீக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

2009ஆம் ஆண்டின் பின்னர் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை என்பதாலேயே கே.பி. மீதான அபாய அறிவிப்பு நீக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார்.

## ஆபத்தான 96 இலங்கையர்கள் வலை வீசுகிறது இன்ரர்போல்





விடுதலைப் புலிகள் என்று சந்தேகிக்கப்படும் நாற்பது பேர் உட்பட 96 இலங்கையரைக் கைது செய்வதற்காக சர்வதேச பொலிஸ் (இன்ரர் போல்) ஊடாக சிவப்பு முன்னறிவிப்பு விடுக்கப்பட்டிருப்பதாகப் பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹண தெரிவித்தார். இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டவர்களுள் ஒருவர் விடுதலைப் புலிகளின் இயக்கத்தின் நெடியவன் என்றும் அவர் சொன்னார். பல விடுதலைப் புலிகள் வெளிநாட்டில் இன்னும் இயங்கி வருகின்றனர். அவர்களைக் கைது செய்யவே இந்த நடவடிக்கை என்றார் அவர்.



# நல்லிணக்கம் உருவாகினால் மீண்டும் இராணுவ உறவு

## இது அமெரிக்காவின் பிந்திய நிலைப்பாடு

வடக்கில் இடம்பெற்ற யுத்தத்துக்குப்பின் மீள்நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் ஆகிய விடயங்களில் இலங்கை முன்னேற்றம் காட்டினால் அந்த நாட்டுடன் விசாலமான, பரந்த இராணுவ உறவுகளை மீளவும் ஆரம்பிக்க அமெரிக்கா காத்திருக்கின்றது. அமெரிக்காவின் தெற்கு மற்றும் ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான உதவிச் செயலாளர் நிஷா பிஷ்வால் இவ்வாறு தெரிவித்தார் ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலின் கடந்த மார்ச் மாத அமர்வில் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைத் தொடர்ந்து இலங்கையில் பொறுப்புக் கூறல் மற்றும் நீதியை நிலைநாட்டுவதற்கு நம்பகரமான நடவடிக்கையை முன்னெடுக்குமாறு அமெரிக்கா தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றது என்றார் அவர். இலங்கை சிவில் யுத்தத்தை அதிஷ்டவசமாக வெற்றிகரமாக முடித்துவிட்டது. ஆனால் அங்கு மீள்நல்லிணக்கம் என்பது சவாலுக்குரியதாகவே இருக்கின்றது என்றார் அவர். "அமெரிக்காவின தென்னாசியா தொடர்பான வெளிநாட்டுக் கொள்கை - சுபீட்சத்துக்கும் பாதுகாப்புக்குமான தொலைநோக்கு" என்ற தலைப்பில் ஹவார்ட் பல்கலைக்கழகத்தில் ஒரு நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

## யாழ். தேர்தல் மாவட்டத்தில் இனி ஆறு எம்.பி. ஆசனங்கள்

யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மூன்று குறைக்கப்பட உள்ளது. யாழ். மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை ஒன்பதாகும். எனினும், அடுத்த பொதுத் தேர்தலின் போது இந்த எண்ணிக்கை ஆறாக குறைக்கப்பட உள்ளது.

இதேபோல் மாத்தறை மாவடத்தின் நாடாளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கையும் குறைக்கப்பட உள்ளது. எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ற எண்ணிக்கை

19 ஆம் பக்கம் பார்க்க

## அமெரிக்கா கேட்பது போல் ஒரே இரவில் நல்லிணக்கம் வராது



### இராணுவப்பேச்சாளர் சொல்கிறார்

(கொழும்பு)

முப்பது ஆண்டுகாலம் யுத்தம் இடம்பெற்ற இந்த நாட்டில் அமெரிக்கா கேட்பது போல் நினைத்தவுடன் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது என்றும் அமெரிக்கா கூறுவது போல் இனங்களுக்கிடையிலான நல்லிணக்க செயற்பாடுகளை ஒரே இரவில் மேற்கொள்ள முடியாது எனவும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறினார்.

பயங்கரவாதம் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட பின்னர் 12 ஆயிரம் பேருக்கு புனர்வாழ்வுப் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

இவர்களில் மூன்று பேர் மீண்டும் ஆயுதப் போராட்டத்திற்கு தயாராகினர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இறுதிக்கட்டப் போரில் இந்திய இராணுவம் சம்பந்தப்பட்டதா என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த இராணுப் பேச்சாளர், அந்த விடயம் தற்போது நீதிமன்ற செயற்பாட்டில் இருப்பதால் அது பற்றி கருத்து வெளியிடுவது பொருத்தமற்றது என்றார்.

## வடக்கில் இந்திய இராணுவம்; புதுடில்லி வழக்கு தள்ளுபடி

இலங்கையின் வடக்கில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தில் இலங்கைப்படைகளுடன் சேர்ந்து இந்திய இராணுவமும் நேரடியாகப் பங்குபற்றியது எனத் தெரிவித்து. அது குறித்து சிறப்பு புலனாய்வுக்குழு மூலம் விசாரிக்க உத்தரவிட வேண்டும் என்று கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை இந்திய உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்ய நேற்று உத்தரவிட்டது. இலங்கையில் நடந்த போர்க்குற்றம் குறித்து சிறப்பு புலனாய்வுக்குழு அமைத்து

19 ஆம் பக்கம் பார்க்க

## தேவாலயங்களில் பணிசெய்ய பெண் துறவிகள் வேண்டும்

### யாழ். ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.கத்தோலிக்க தேவாலயங்களில் பெண் துறவிகள் வழிபாடுகளை நடத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்ற கோரிக்கை யாழ்.பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்கூட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது.

யாழ். பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் நேற்று யாழ். பிரதேச செயலகத்தில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது அங்கு கருத்துத்தெரிவித்த பெண் ஒருவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

இனிவரும் காலங்களில் கிறிஸ்தவ தேவாலயங்களில் கோவில் பணிகளில் வயது முதிந்தோர்களையும்

19 ஆம் பக்கம் பார்க்க



ஜயவருட
பொதுப்பலன்கள்
உள்ளே

உள்ளே
க.பொ.த. [சா/த] மாணவருக்கான
தமிழ் இலக்கணம் பயிற்சி

## குருநகர் யுவதி மரணம் விசாரணையைத் துரிதப்படுத்துங்கள்

### பொலிஸாருக்கு அமைச்சர் பணிப்பு

குருநகரில் அண்மையில் கிணற்றில் வீழ்ந்து மரணமடைந்த யுவதியின் மரணம் தொடர்பில் உடனடியாக ஆராய்ந்து நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விசேட பணிப்புரை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாண பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் அமைச்சர் தலைமையில் நேற்று இடம்பெற்ற போதே இப்பணிப்புரை விடுக்கப்பட்டது.

இதன்போது மின்சாரம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டபோது குருநகர் ஐந்து மாடிக் கட்டடத் தொகுதியில் வாழும் குடும்பங்களில் 62 குடும்பங்களுக்கு வடக்கின் வசந்தம் திட்டத்தினூடாக மின்னிணைப்பை வழங்குமாறு கேட்டுக்கொண்ட அமைச்சர், முஸ்லிம் மையவாடியில் இரண்டு கற்தூண்களை நிறுவி மின்விளக்கினை இணைகுமாறும் கேட்டுக்கொண்டார்.



அத்துடன் ஏனைய மின் தேவைகள் குறித்து மக்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பிலும் கவனம் செலுததப்பட்டது.

அடுத்து பொதுமக்கள் பாதுகாப்பு சம்பந்தமாக ஆராயப்பட்டபோது யாழ். மாவட்டச்

19 ஆம் பக்கம் பார்க்க

# வடமராட்சி வடக்கு கடற்பரப்பில் வான் அகழ்வுக்கு ஏற்பாடு

(வடமராட்சி)

பொலிகண்டி மேற்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க எல்லைக்குட்பட்ட கடற்பரப்பில் வான் அகழ்வுப் பணிகளுக்கான முன்னேற்பாடுகள் நடைபெற்று வருவதாக பொலிகண்டி மேற்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க செயலாளர் வைரமுத்து பரமானந்தராசா தெரிவித்துள்ளார்.

வடமராட்சி வடக்கு கடற்பரப்பின் வான் அகழ்வுப் பணிக்காக பொலிகண்டி மேற்கு உட்பட சுப்பர்மடம், இன்பருட்டி, தும்பளை கிழக்கு, பருத்தித்துறை முனை போன்ற ஐந்து கடற்றொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் இச்செயற்றிட்டத்திற்கு முன்வந்துள்ளன.

குறிப்பாக சுனாமிக் காலம் தொட்டு இரண்டு தடவைகள் அரசாங்கத்தினால் தொண்டைமானாறு தொடக்கம் தும்பளை கிழக்கு வரையான வடமராட்சி வடக்கு கடற்பரப்பில் கடற்றொழிலாளர் சங்கங்கள் ஊடாக வான் அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

எனினும், அண்மையில் கடல் கொந்தளிப்பினால் வான்கள் சிதறுண்டு மீன்பிடிப் படகுகள் செல்ல முடியாத நிலையில் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனைக் கருத்தில் கொண்டே பொலிகண்டி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தம் நிதியைக் கொண்டே வான் அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

இதற்கான அனுமதியினை யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல் வள திணைக்களத்தினூடாக சுற்றுச் சூழல் அதிகார சபையிடம் மகஜர் மூலம் கோரியுள்ளதாகவும் அனுமதி கிடைக்கப்பெறும் பட்சத்தில் பொலிகண்டி மேற்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க நிதி மூலம் பொலிகண்டி மேற்கு கடற்பரப்பில் வான் அகழ்வு துரிதப்படுத்தப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (116)

## பேச்சுத்திறன் போட்டி

(மானிப்பாய்)

மானிப்பாய் மருதடி விநாயகர் அறநெறிப் பாடசாலையின் பேச்சுத்திறன் போட்டி இன்று காலை 9.00 மணி முதல் மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய அறநெறிப் பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

போட்டிகளில் பங்குபற்றும், மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (48)

## யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நூல் விற்பனை நடமாடும் சேவை

வடமாகாணத்தில் கல்வியை மேம்படுத்துவதற்காகவும் பிள்ளைகளின் இடையே வாசிப்புப் பழக்கத்தை விருத்தி செய்வதற்காகவும் எதிர்வரும் 23 ஆம் திகதி முற்பகல் 8.00 மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் குறைந்த விலை யில் புத்தகங்களை விற்பதற்காக நடமாடும் சேவை ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ள பெறுமதிமிக்க நூல்கள் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்பு இதன் மூலம் கிடைத்துள்ளது.

மேலும் பாடசாலை நூல் நிலையத்தின் பாவிப்புக்காக மேலதிக புத்தகங்கள் அதிபர்களுக்கு இலவசமாக விநியோகிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வடமாகாண பிள்ளைகளுக்காக ஒழுங்குபடுத்தப்பட்ட இந்நிகழ்வில் பங்குபற்றுமாறு வலயங்களுக்குரிய சகல அதிபர்களுக்கும், மாணவர்களுக்கும் கல்வி வெளியீட்டுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

## பொதுக்கூட்டம்

(வேலணை)

வேலணை மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணியளவில் கல்லூரியின் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் சி.கிருபாகரன் தலைமையில் நடைபெறவுள்ள வருடாந்த பொதுக்கூட்டத்தில் கல்லூரியினது எதிர்கால வளர்ச்சி பற்றி பழைய மாணவர்களுடனான கலந்துரையாடல் ஒன்றும் இடம் பெறவிருப்பதுடன், புதிய ஆண்டுக்கான நிர்வாகிகள் தெரிவும் இடம்பெறவுள்ளது. (05)

## வல்வை இந்துமயான அபிவிருத்தி முன்னெடுப்பு

(கரணவாய்)

வல்வை இந்து மயான அபிவிருத்திச் சபையினரின் முன்னெடுப்பில் மக்கள் பங்களிப்புடன் இந்து மயானத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதன்படி இமையாணன் மேற்கு ஜே/359, இமையாணன் ஜே/358, உடுப்பிட்டி தெற்கு ஜே/354, உடுப்பிட்டி ஜே/352, கரணவாய் மேற்கு ஜே/349, கரணவாய் ஜே/350 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள மயானத்துடன் தொடர்புடைய மக்கள் பங்களிப்புடன் அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதன்படி இம்மயானத்தில் சிரமதானம், சுற்றுமதில் அமைத்தல், எல்லைப்படுத்தல் போன்ற வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு இதுவரை 6 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா வேலைகளைப் பூர்த்தி செய்துள்ளதாக சபையினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இதுவரையான புனரமைப்பு நடவடிக்கைகளுக்கு எந்தவித அரச அரசசார்பற்ற நிறுவனங்களோ உதவி செய்யவில்லை எனவும், மேலும் மண்ணடித்தல், கிணறு ஆழமாக்குதல், இளைப்பாற்று மண்டபம் அமைத்தல், களஞ்சிய அறை அமைத்தல், கேற் அமைத்தல் போன்ற வேலைகள் முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ள நிலையில் இத்திட்டத்திற்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் உதவிகளை வழங்க முன்வர வேண்டும் என அபிவிருத்திச் சபையினர் கேட்டுள்ளனர். (18)


## சிறுவிளம்பரங்கள்

**டயானா பிளாஸ்ரிக்**

*ரீசைக்கிள் (மீள் சுழற்சி)*

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
021 222 8680,
077 592 5088.

(C/3651)


## தென்இந்திய இசைக்குழுவின் பிரமாண்ட இசை நிகழ்வு

யாழ்ப்பாணம் கொக்குவிலில் இயங்கி வருகின்ற தொழில்நுட்பக் கல்லூரியினது அனுசரணையுடன் நடத்தப்படவிருக்கின்ற கோடைத் திருவிழாவை முன்னிட்டுமாபெரும் தென்னிந்திய இசைக் குழுவினரின் பிரமாண்ட இசை நிகழ்ச்சி மற்றும் கண்காட்சி என்பன நாளையும், நாளை மறுதினமும் தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில் நடைபெறவுள்ளது.

தொழில் நுட்பக் கல்லூரியினது பணிப்பாளர் கலாநிதி ந. யோகராசாவின் ஏற்பாட்டில் இந்நிகழ்வு [illegible]ம்பெறவுள்ளது. கோடைத் திருவிழாவில் இசை நிகழ்ச்சி மற்றும் கண்காட்சி, அழகுராணிப் போட்டி மற்றும் சிறுவர், சிறுமிகளினது விளையாட்டு என்பன இடம்பெறவுள்ளன.

அத்துடன் சமய சமூக சேவைகளை ஆற்றி வருகின்ற சேவையாளர்கள் தொழில்நுட்ப துறை சார்ந்தோர், கல்வியியலாளர், ஊடகவியலாளர்கள், வைத்தியர்கள், விரிவுரையாயாளர்கள், அதிபர்கள், பணிப்பாளர்கள் எனப் பல்துறை சார்ந்த பலருக்கு அன்றைய தினம் விழாவில் வைத்து பாராட்டிக் கௌரவித்து சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளது.

அத்துடன் படித்து வேலையற்று இருக்கின்ற இளைஞர், யுவதிகளுக்கான வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான ஆலோசனைகளும், அறிவுரைகளும் வழங்கப்படவுள்ளன.

இரண்டு நாட்களிலும் நடைபெறவிருக்கின்ற இந்த விழாவில் பலவிதமான சாகச விநோதமான விளையாட்டுக்களும் காண்பிக்கப்படவுள்ளன. இவ்விழாவினை இலவசமாகக் கண்டுகளிக்குமாறு விழா ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.(05)

## மதுப்போத்தலுடன் வைத்தியசாலைக்குள் நுழைய முற்பட்டவர் சிக்கினார்

மதுப்போத்தலுடன் யாழ். வைத்தியசாலைக்குள் அத்துமீறி நுழைய முற்பட்ட முதியவர் ஒருவரைப் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மடக்கிப் பிடித்தனர்.

நேற்று நண்பகல் 12.00 மணிக்கு நோயாளர்களைப் பார்வையிட வருவோரை உள்ளே அனுமதித்த வேளையில் மதுபோதையில் உள்நுழைந்த முதியவரில் சந்தேகம் கொண்ட பாதுகாப்பு ஊழியர்கள் அவரைச் சோதனையிட்ட போது மதுப்போத்தல் மறைத்து வைக்கப்பட்டு வைத்தியசாலைக்குள் எடுத்துச் செல்லப்பட்டமை கண்டு பிடிக்கப்பட்டது.

இதன்போது முதியவரின் அநாகரிக வார்த்தைப் பிரயோகத்தைத் தொடர்ந்து அப்பகுதியில் பெருமளவானோர் திரண்டனர்.

எனினும் பாதுகாப்பு ஊழியர்களையும் மீறி வைத்தியசாலை வளாகத்தினுள் முதியவர் நுழைய முற்பட்டபோது பாதுகாப்பு ஊழியர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டார். (இ)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

வெளிவாரிப்பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகு

**வெளிவாரிப் பரீட்சைகள் - 2011**

**கலைமாணித் தேர்வு பகுதி - I - 2011 (வெளிவாரி)**

மேற்படி பரீட்சையை 05.05.2014 (திங்கட்கிழமை) தொடக்கம் 24.05.2014 (சனிக்கிழமை) வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும், வவுனியா வளாகத்திலும் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகளையும், பரீட்சை அனுமதி அட்டைகளையும் 30.04.2014 (புதன்கிழமை) தொடக்கம் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகிலும், வவுனியா வளாகத்திலும் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு 021-222-3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்
17.04.2014

(C/3650)


## பொலிகண்டி மாதா கோவிலடியில் கலாசார சீர்கேடுகள் அதிகரிப்பு

(வடமராட்சி)

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவுக்குட் பட்ட பொலிகண்டி மேற்கு ஜே/393 கிராம அலுவலர் பிரிவில் உள்ள மாதா கோவிலடிப் பகுதியில் கலாசார சீரழிவுகளும், திருட்டுச் சம்பவங்களும் அதிகளவில் இடம்பெற்று வருவதாக பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கடந்த கால யுத்த அனர்த்தங்களினால் குறித்த பகுதியிலிருந்து மக்கள் இடம் பெயர்ந்து வாழ்ந்து வருகின்ற நிலையில் இங்கு காணி மற்றும் வீடுகள், கூரைகள் இல்லாமலும், பற்றைகளால் சூழ்ந்த நிலையிலும் பயன்தரு மரங்களின் பயன்பாட்டைப் பெற்றுக் கொள்ள முடியாமலும் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் சுனாமிக் காலப்பகுதியில் அரச சார்பற்ற நிறுவனங்களால் கட்டப்பட்ட சில புதிய வீடுகளில் மக்கள் மீள்குடியமராமல் அநாதரவான நிலையில் காணப்படுகின்றன.

இந்நிலையில், இவ்வாறு மக்கள் நடமாட்டமற்ற இப்பகுதியில் கலாசாரச் சீரழிவுகள், மதுபாவனை மற்றும் திருட்டுக்களும் தொடர்ச்சியாக இரவு வேளைகளில் இடம்பெறுவதாகவும், இதனால் அயலூர் மக்கள் பதற்றத்துடனேயே வாழ வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இச்செயற்பாடுகளை தடுக்க முயற்சிக்குகம் அயல் பிரதேச மக்கள் பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளதாகவும், குறித்த பகுதி வீடு மற்றும் காணி உரிமையாளர்கள் இத்தகைய சமூக விரோதச் செயல்களுக்கு களமமைத்துக் கொடுக்காமல் தத்தமது உரிமங்களுடன் பராமரிப்பில் ஈடுபட வேண்டும் எனவும் அல்லது உரிய அதிகாரிகளூடாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அயல் பிரதேச மக்கள் கோரிக்கை விடுகிக்கின்றனர். (116)


**சிறுநீரகம் தேவை**

$B^+$ குருதி வகையைச் சேர்ந்த சிறுநீரகம் உடனடியாகத் தேவை.

தொடர்பு : 0750979195

(C/3399)

# சைவப்புலவர் பரீட்சை இன்றுமுதல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தின் சைவப் புலவர் பரீட்சைகள் இன்றும், நாளையும், நாளை மறுதினமும் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு, லண்டன் ஆகிய ஐந்து இடங்களில் நடைபெறவுள்ளதாக அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தலைவர் சைவப்புலவர் மு.திருஞானசம்பந்தப்பிள்ளை தெரிவித்துள்ளார்.

அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தினால் வருடாந்தம் ஏப்ரல் மாதத்தில் நடாத்தப்படுகின்ற இளஞ் சைவப்புலவர், சைவப் புலவர் பரீட்சைகள் இவ்வாண்டு யாழ்ப்பாணம் வண்ணை நாவலர் மகாவித்தியாலயம், மட்டக்களப்பு ஆனைப்பந்தி பெண்கள் கல்லூரி, திருகோணமலை கோணேஸ்வரா இந்துக்கல்லூரி, கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி மற்றும் லண்டனில் சைவ முன்னேற்ற சங்கம் ஆகிய இடங்களில் இடம்பெறவுள்ளது.


இப்பரீட்சைக்கு மொத்தம் 165 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளார்கள். யாழ்ப்பாணத்தில் 61 பரீட்சார்த்திகளும் மட்டக்களப்பில் 69 பரீட்சார்த்திகளும் திருகோணமலையில் 14 பரீட்சார்த்திகளும் கொழும்பில் 18 பரீட்சார்த்திகளும் பிரித்தானியாவில் 3 பரீட்சார்த்திகளும் பரீட்சைக்குத் தோற்றவுள்ளார்கள் எனத் தெரிவித்தார்.

மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களுக்குரிய அனுமதி அட்டைகள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இதுவரையில் அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாதவர்கள் நேரில் பரீட்சை நிலையங்களுக்குச் சென்று அனுமதி அட்டையின் பிரதியைப் பெற்று பரீட்சை எழுத முடியும். தினமும் காலை 8.30 இற்கு முன்னதாக மேற்படி பரீட்சை நிலையங்களில் சமூகமளிக்கும்படியும் மேலதிக விபரங்களுக்கு தேர்வுச் செயலாளர் சைவப்புலவர் சு.செல்லத்துரையுடன் 0777497100 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு விபரங்களை அறிந்து கொள்ளமுடியும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. (63)

# மதுவுக்கு அடிமையானவர் நஞ்சருந்தி உயிரிழப்பு

மதுவுக்கு அடிமையான குடும்பஸ்தர் நஞ்சருந்தி உயிரிழந்த சம்பவம் நேற்று முன்தினம் செம்மணிப்பகுதியில் இடம்பெற்றுள்ளது. இயக்கச்சி பளையைச் சேர்ந்த நாகேந்திரம் விக்னேஸ்வரன் (வயது 38) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மதுவுக்கு அடிமையாகி ஈரல் பாதிக்கப்பட்ட நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்றுமுன்தினம் வைத்தியசாலையில் இருந்து வெளியேறிய அவர் வீடு செல்லாது செம்மணிப்பகுதிக்குச் சென்று நஞ்சருந்தி விட்டு வீட்டாருக்கு தகவலை வெளிப்படுத்திய பின்னர் உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் குறித்து கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன், பிரேத பரிசோதனையின் பின் சடலம் நேற்று உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (இ)



வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்ற சித்திரைப் புத்தாண்டு நிகழ்வின் போது மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 5 வயதுச் சிறுமியின் சத்திர சிகிச்சைக்காக அவரின் பெற்றோரிடம் 3 இலட்சம் ரூபாவுக்கான காசோலையை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியுடன் இணைந்து வழங்குவதைக் காணலாம். (பா)

# அனுமதிப் பத்திரத்தில் குறிப்பிட்டதைவிட ஏனைய பொருட்களும் விற்பனை

(திருநெல்வேலி)

உள்ளூராட்சி மன்றங்களினால் வியாபார நிலையங்களுக்கு வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களை விட அவ் வியாபார நிலையங்களில் வேறு விதமான பொருட்களும் விற்பனை செய்யப்படுவதாகப் பலராலும் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பழக்கடை என்றால் பழங்கள் மட்டுமே என்பதும், மருந்தகம் என்றால் மருந்துப் பொருட்கள் எனவும், நகைக் கடை என்றால் நகைகள் மட்டுமே எனவும் விற்பனை செய்யப்பட வேண்டும் என்பது விதிமுறையாகும்.

ஆனால் பல வர்த்தக நிலையங்களில் இது மாறுபட்டதாக உள்ளது. உணவகம் ஒன்றில் சவர்க்காரம், சலவைப்பவுடர், வாசனைத் திரவியங்கள் எனப் பல பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன. பழக்கடையில் பீடி, சிகரெட், புகையிலை என விற்பனையாகின்றன. பலசரக்குக் கடையில் எரிபொருட்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. மருந்தகத்தில் அழகுசாதனப் பொருட்கள் காணப்படுகின்றன. தேநீர் கடையொன்றில் புடவைகள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

தாம் அனுமதிப்பத்திரம் வழங்கிய வியாபார நிலையங்கள் தம்மால் அனுமதி வழங்கப்பட்ட பொருட்களை மட்டுமே வியாபாரம் செய்கின்றனவா, என்பதைக் கண்டறியும் பொறுப்பு அந்தப் பகுதி உள்ளூராட்சி மன்றங்களுக்கே உள்ளது. இந் நடைமுறைகளை மீறிச் செயற்படும் வர்த்தக நிலையத்தின் அனுமதியை இரத்துச் செய்யும் உரிமை உள்ளூராட்சி மன்றங்களுக்கே உரியது எனத் தெரியவருகிறது.

பொதுமக்களின் நன்மை கருதி இவ்விடயத்தில் உள்ளூராட்சி மன்றங்கள் கவனம் செலுத்தல் வேண்டும் எனப் பல பொதுமக்களினால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (137)




# காணாமற் போனவைகளின் தேசமும் பேய்கள் பிசாசுகளுக்கான வாசலும்...

காணாமற்போன விடயங்களின் பட்டியலில் இலங்கையில் கன விசயங்கள் சேர்ந்து கொண்டிருப்பது வரலாறு.

இந்த வரலாறு சிலருக்குச் சுவையாது. சிலருக்குச் சோகமானது. வரலாற்றின் விசித்திர குணமே அதுதான். அது சிலருக்குச் சுவையாக இருக்கும். சிலருக்குச் சோகமாக இருக்கும்.

இப்படியான ஒரு வரலாற்றில்தான், 1983 இல் நடந்த இனவன்முறையையும் வெலிக்கடைச் சிறைச்சாலைப் படுகொலையையும் விசாரிக்க எண்டு நியமிக்கப்பட்ட விசாரணைக்குழு காணாமற் போனது.

மூதூரில் 2007 இல் 'அக்ஸன் பெய்ம்' தொண்டு நிறுவனப்பணியாளர்கள் 17 பேரின் கொலை தொடர்பாக விசாரிக்க எண்டு நியமிக்கப்பட்ட விசாரணைக்குழுவும் காணாமற் போய்விட்டது.

இடையில், சர்வகட்சிகள் கூட்டம், வட்டமேசை மாநாடு என்று இனப்பிரச்சினையின் தீர்வுக்கு என உருவாக்கப்பட்ட அமைப்புகளும் எடுக்கப் பட்ட முயற்சிகளும் காணாமற்போய் விட்டன.

இப்பொழுது பேராசிரியர் திஸ்ஸ விதாரண தலைமையிலான நாடாளுமன்றத் தெரிவுக்குழு 'சேடமிழுத்து, சேடமிழுத்தபடி இன்னும் உயிரோடிருக்கிறது. இதுவும் எப்ப மண்டையைப்போடும், எப்ப காணாமற்போகும் எண்டு தெரியேல்ல.

இறுதியாக உருவாக்கப்பட்ட நல்லிணக்க முயற்சிகளுக்கான குழுவும் மீளிணக்க முயற்சிகளும் கூட இன்னும் கொஞ்சக் காலத்தில் காணாமற்போயிடும்.

ஆனால், ஒரேயொரு விசயம் மட்டும் காணாமற்போகாது. அது தேயவோ மறையவோ கூட மாட்டாது. ஏனெண்டால், அதுக்கு இலங்கையில் உள்ள பல தரப்புகளும் நல்லாத் தண்ணி வார்த்து, உயிரூட்டிக்கொண்டேயிருக்கிறார்கள். தங்கள் தங்கள் வீடுகளில் மட்டுமல்ல, அதை அவர்கள் தங்கள் மனதிலேயே வளர்த்துப் போசித்து வருகிறார்கள். படித்தவர்கள் இன்னும் அதற்கு ஊட்டச்சத்து வேறு கொடுக்கிறார்கள். அது அவ்வளவு கெதியாக அழிந்து விடக்கூடாது என்பதில் அவர்கள் எல்லாம் வலு கவனமாக இருக்கிறார்கள். சிலர் அதுக்கு நன்றாகச் சோப்புப் போட்டுக் குளிப்பாட்டி, அலங்காரம் வேறு செய்கிறார்கள். பத்திரிகைகள் மற்றும் ஊடகங்கள், ஊடகவியலாளர்க்ள் எல்லாம் அதை உறங்கவிடாமல் விளம்பரப்படுத்திக் கொண்டேயிருக்கிறார்கள்.

அதுதான் இனப்பிரச்சினையும் தீர்வு காணப்படாத தீர்வு முயற்சியும். மன்னிக்கவும், இதைக் கொஞ்சம் திருத்திச் சரியாகச் சொல்கிறேன். இனவாதமும் அதைச் சவப்பெட்டிக்குள் கொண்டு போக முடியாத தீர்வு காணக்கூடாது எண்ட முயற்சிகளும்.

சுதந்திர இலங்கையில் தமிழர்களும் சிங்களவர்களும் சிங்களவர்களும் சிங்களவர்களும் தமிழர்களும் தமிழர்களும் தமிழர்களும் முஸ்லிம்களும் சிங்களவர்களும் முஸ்லிம்களும் என்று ஆளுக்காள் மாறிமாறி அடிபட்டுக் குத்துப்பட்டுச் செத்த தொகை, இலங்கையின் சுதந்திரத்துக்காக 1505 இலிருந்து 1948 வரை போராடிச் செத்ததையும் விடப் பல மடங்கு அதிகம்.

வரலாற்றின் சுவை எப்படியிருக்கிறது பார்த்தீர்களா?

இப்படி முட்டாள்கள், மூடர்கள், இன வெறியர்கள், சொல்வழி கேளாதவர்களினால் மேய்க்கப்படுகின்றன – ஆட்சிசெய்யப்படுகின்றன – இலங்கைச் சமூகங்கள்.

இல்லையென்றால், போர் வெறியும் பகையுணர்ச்சியும் ஆளையாள் எதிர்க்கின்ற வியாதியும் சந்தேகப் புத்தியுமாக இன்னும் இருப்பார்களா?

இத்தனைக்குப் பின்னும் இதை மாற்றி அமைக்க வேணும், பல்லாயிரம் உயிர்களைப் பலியெடுத்த, பல கோடிக்கணக்கான சொத்துக்களையும் இயற்கை வளங்களையும் தொழிற்துறைகளையும் பல்லாயிரக்கணக்கானவர்களின் எதிர்காலத்தையும் அழித்த இனவாதத்தை இல்லாதொழிக்க வேணும் என்று இதுவரையில் எந்தப் பயலாவது முயன்று பார்த்திருக்கிறானா? அல்லது முயன்று பார்த்திருக்கிறாளா? இங்கே பயல் என்று நான் குறிப்பிடுவது, உருப்படியான அரசியற்தலைவர்கள், மதத்தலைவர்கள், புத்திஜீவிகள், நியாயமான ஊடகவியலாளர்கள், பொறுப்பான சமூகச் செயற்பாட்டாளர்கள்... போன்றோரைக் குறிக்கும்.

உண்மையில் – விசுவாசமாக சிலர் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும். இந்த இனவாதப்பேயை விரட்டியடிக்க வேண்டும் என்று கடுமையாக முயற்சித்திருக்கிறார்கள்.

ஆனால், அவர்களை இந்த இனவாதப்பேய்கள் விரட்டியடித்துக் கொண்டிருக்கின்றன. என்றபடியால்தான் அவர்கள் எல்லாம் தேர்தல்களில் தோல்வியையும் மக்களிடத்தில் செல்வாக்கில்லாத நிலையையும் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

இனப்பேயைத் தங்கள் தங்கள் பாயோடு வைத்து ஒண்டாகப் படுத்து எழும்பிக்கொண்டிருக்கும் மக்களுக்கு வெள்ளைத் தேவதையாக வரும் அமைதியும் நல்வாழ்க்கையும் சமாதானமும் பிடிக்காது. பிடிக்கவே பிடிக்காது.

முன்னைப் பின்னை அமைதியின் ருசியை, சமாதானத்தின் வாசனையை, நல்வாழ்க்கையின் சுவையைப் பற்றி எப்படித் தெரியும்? என்று ஒரு அன்பர் கேட்பதிலும் நியாயமுண்டு.

அப்படியென்றால் இது பேய்ச்சமூகங்களின் தேசமா? சந்தேகமேயில்லை, இனப்பேய்கள், இனவாதப்பிசாசுகளின் தேசமேதான்.

இப்படி இனப்பேய்களின் தேசமாக இருப்பதால்தான் இந்த நாட்டில் அமைதி காணாமற்போனது. நிம்மதி காணாமற்போனது. செல்வச் செழிப்புக் காணாமற்போனது. வளங்கள் காணாமற்போனது. நல்வாழ்க்கை காணாமற்போனது. நல்ல தெரிவுகளும் நல்ல தலைவர்களும் காணாமற்போனார்கள். உங்கள் பிள்ளைகளும் கணவன்களும் அப்படித்தான் காணாமற்போனார்கள்.

இப்படி இனப்பேய்கள் வாழ்கின்ற தேசமாக இருப்பதால்தான் இந்த நாட்டில் அந்நியப் பிசாசுகள் – வல்லரசுகள் எல்லாம் மிகச் சுலபமாகத் தங்கள் கையையும் காலையும் விட்டு நம் கண்ணையும் பல்லையும் எலும்பையும் பிடுங்கப்பார்க்கின்றன. எங்கள் இரத்தத்தை உறிஞ்சிக் குடிக்கப்பார்க்கின்றன.

இறுதியில் காணாமற்போவது எங்கள் உடலும் உயிருமாகவே இருக்கப்போகிறது. அதாவது, நாங்களாகவே இருக்கப்போகிறது.

ஆமாம், இது காணாமற்போனவர்களின் – காணாமற்போனவைகளின் தேசமேதான். மிஞ்சியிருப்பது இனப்பேயும் அந்நியப் பிசாசுகளுக்கான வாசலுமே....

உற்சாகம்தான் மனிதனைத் தூண்டி வெற்றிப் பாதைக்கு அழைத்துச் செல்கிறது. - ஹில்.

தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## தன் சமூகத்தைத் தானே அழித்தல்!

கடந்த வெள்ளிக்கிழமை, நெடுங்கேணி வெடிவைச்சகல் காட்டுப் பகுதியொன்றில், அதுவரை தேடப்பட்டுவந்த மூவர் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் அம்மூவரில் தேவியன் என்பவர் 2007 ஏப்ரலில் கொலன்னாவ எண்ணெய் குதங்கள் மீதும் ஒக்டோபரில் அநுராதபுரம் விமானப்படை தளத்தின் மீதும் தாக்குதல் நடத்திய புலிவிமானிகளில் ஒருவர் என்றும் பொலிஸார் கூறியுள்ளனர்.

அதேவேளை கடந்த இரண்டு மாதங்களாக புலிகள் அமைப்புக்காக பிரசார வேலைகளில் ஈடுபட்டதாகவும், வெளிநாடுகளிலிருந்து நிதி பெற்றுக் கொண்டதாகவும் குற்றஞ்சாட்டி வடபகுதியில் 60 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண கடந்த வியாழனன்று கூறியிருந்தார்.

புலிகள் அமைப்பிற்கு வெளிநாடுகளில் தலைமை தாங்குவதாகக் கூறப்படும் நெடியவனின் இரண்டு முக்கிய சகாக்களில் ஒருவரான நந்தகோபன் எனப்படும் கபிலன் கைது செய்யப்பட்டு மார்ச் 6ஆம் திகதி இலங்கைக்கு கொண்டுவரப்பட்டதாகவும் பாதுகாப்புத் தரப்பு தெரிவித்துள்ளது.

மீண்டும் புலிகள் அமைப்பைக் கட்டுவதற்கு முயற்சிக்கப்படுவதாகக் கூறும் அரசாங்கத்தின் குற்றச்சாட்டிற்கு, நமது தமிழ்த் தலைவர்களும் தமிழ் ஊடகங்களும் செய்த பிரதிபலிப்பு, இவையெல்லாம் அரசாங்கத்தினதும் பாதுகாப்புத் தரப்பினதும் திட்டமிட்ட நாடகங்கள் என்பதே!

இந்த வங்குரோத்துத் தமிழ் அரசியலின் விளைவாக நடந்தது என்ன? நெடுங்கேணியில் மூவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தைக் கண்டிக்கவும் முடியவில்லை அதுபோன்று இனியும் நிகழாதிருக்க என்ன செய்யப்பட வேண்டும் என்று பேசவும் முடியவில்லை.

(மூவரும் தேடப்பட்டதே நாடகம் என்றால், இல்லாதவர்கள் இறந்ததை எப்படி ஒப்புக்கொள்வது என்ற குழப்பம் இவர்களுக்கு? பிரபாகரன் இறந்ததை ஒப்புக்கொள்ளாமல் மறுத்துவிட்டு, அவருக்கு அஞ்சலி செலுத்தக்கூட முடியாமல் முழிபிதுங்கும் "வெறுவாய்கெட்ட" அரசியல் தந்திரங்கள்தானே தமிழர்க்கு வாய்த்த சாபக்கேடு!)

அத்துடன் இதுபோல இளைஞர்களைக் காவுகொடுப்பதெல்லாம் இவர்களுக்கு ஒரு பொருட்டுமல்லவே. வன்முறைக்குத் தூண்டும் விதமாக தமிழ் இளைஞர்களை உசுப்பி விடுவதும், பின்னர் அவர்களது வன்முறையை நியாயப்படுத்தி அரசுக்குச் சவால் விட்டுப் பேசுவதும், பிறகு அவர்கள் கொல்லப்படும் போது வாளாவிருந்து, அந்தக் கொலைகளையும் அழிவுகளையும் தமது பதவி அரசியலுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதையும் தானே இவர்கள் காலம் காலமாகச் செய்துவருகிறார்கள்?

அதேபோன்றுதான் மீண்டும் வன்முறையை இங்கு உருவாக்கி, வெளிநாட்டில் பழையபடி நிதிச் சேகரிப்பை அதிகப்படுத்த முயற்சி நடக்கிறது என்றும் அதற்காக நாட்டிற்குள் சிலர் வந்திருக்கிறார்கள் என்று தேடுதல் நடந்த போது, ஜெனிவாவுக்காக இங்கே நாடகம் நடக்கிறது என்று அறிவித்ததோடு இவர்களது சமூக அக்கறை முடிந்துவிட்டது.

மூவர் சுட்டுக்கொல்லப்பட்ட போது அவர்கள் புலிகள் அல்ல என்று கூற இதுவரை எவரும் முன்வரவில்லை. கைது செய்து விடுவிக்கப்பட்ட கோபியின் தாயாரைப் பற்றி எவரும் பரிந்து பேசவும் இல்லை. கோபிக்கும் நெடியவனுக்கும் இடையே தொடர்பு இருந்ததாக கூறப்படுவதை இதுவரை நெடியவனோ வேறு எவருமோ மறுக்கவும் இல்லை.

இவ்வாறு இளைஞர்கள் வன்முறையின் பக்கம் போகும்போது, என்ன ஏதென்று ஆராயாது உணர்ச்சிகரமாக அரசை எதிர்த்துப் பேசுவதன் மூலம் மறைமுகமாக அவர்களைத் தூண்டிவிடுவதும், அதனால் விளையும் பாதிப்புகளைத் தடுப்பதற்கு எந்தவொரு வகையும் செய்யாமல், அதைத் தங்கள் வாக்கு வேட்டைக்கு லாபமாக்கிக் கொள்வதும்தான் நடக்கிறது.

தன் சமூகத்தைத் தானே அழிக்கும் வங்குரோத்து அரசியல் தானே இது? இதைத்தானே இவர்கள் தொடர்ச்சியாகச் செய்து வருகிறார்கள்!

- ஆசிரியர்

# இணைசுகாதார பட்டப்படிப்பிற்கான காலஎல்லை குறைப்பிற்கு கண்டனம்

(கொழும்பு)

இணை சுகாதார் விஞ்ஞான பட்டப்படிப்புக்கான கால எல்லை மூன்று வருடங்களாக குறைக்கப்பட்டமைக்கு உயர் கல்வி அமைச்சும், அரச வைத்திய அதிகாரிகள் சங்கமும் பொறுப்புக்கூற வேண்டும் என பல்கலைக்கழக மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

மாணவர்களின் இந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பில் உயர் கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன தெரிவிக்கையில், உயர்நீதிமன்றத் தீர்ப்புக்கு அமையவே பாடநெறிக்கான கால எல்லை குறைக்கப்பட்டுள்ளது.

இணை சுகாதார விஞ்ஞானப் பட்டப்படிப்பை மூன்று வருடங்களில் பூர்த்தி செய்வதற்கான சந்தர்ப்பம் மாணவர்களுக்கு கிட்டியுள்ளதாக குறிப்பிட்ட அவர், அதிக புள்ளிகளைப் பெறும் மாணவர்களுக்கு ஒருவருட பயிற்சியும் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவித்தார்.

அத்துடன் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் பரிந்துரைகளையும் கவனத்திற்கொண்டே பட்டப்படிப்புக்கான கால எல்லை குறைக்கப்பட்டதாக உயர் கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

இதேவேளை, இணை சுகாதார விஞ்ஞான பட்டப்படிப்பு தொடர்பில் எத்தகைய எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும் கொள்கைகளில் மாற்றம் ஏற்படாது என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் எழுந்த பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் குழுவொன்று அமைக்கப்பட்டதாகவும் அந்தக் குழுவிடம் தமது சங்கம் பரிந்துரைகளை சமர்ப்பித்ததாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் டாக்டர் நவீன் டி சொய்சா குறிப்பிட்டுள்ளார்.

இணை சுகாதார விஞ்ஞான பட்டப் படிப்பிற்கான கால எல்லையை குறைக்க வேண்டாம் என வலியுறுத்தி நாடளாவிய ரீதி யில் மாணவர்கள் தற்போது உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பொதுபலசேனாவிற்கு ஆதரவளிப்பது அரசாங்கமே

## ஐ.தே.க. குற்றச்சாட்டு

(கொழும்பு)

பொதுபலசேனா இயக்கத்திற்கு அரசாங்கமே ஆதரவளிக்கின்றது என ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

பௌத்த மதத்திற்கு களங்கம் விளைவிக்க சர்வதேச சக்திகள் பொதுபலசேனா இயக்கத்தைப் பயன்படுத்தி வரு நாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஆளும் கட்சிக்குள் அங்கம் வகிக்கும் சில தரப்பினர் பொதுபலசேனாவை தூண்டிவி[illegible]தாகத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு பொதுபலசேனாவை தூண்டிவிடுவதன் மூலம் மக்களின் வாழ்க்கைச் செலவு பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை திசை திருப்ப முயற்சிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஆளும் கட்சியின் மிக முக்கியமானவர்கள் பொதுபலசேனாவிற்கு பக்கபலமாக செயற்பட்டு வருகின்றனர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொதுபலசேனா மற்றும் ஏனைய கடும்போக்குடைய இயக்கங்கள் உள்நாட்டில் உருவானவை எனவும், சர்வதேச சக்திகளுக்கு தொடர்பில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிறுபான்மை மக்களை மூன்றாம் தரப் பிரஜைகளாக நடாத்தும் இந்த அரசாங்கத்தில் தொடர்ந்தும் அங்கம் வகிப்பதா இல்லையா என்பதனை ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் தீர்மானிக்க வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# ஓய்வை அண்மிக்கும் அரச ஊழியருக்கு சமூகசேவைகள் அமைச்சு செயலமர்வு

(கொழும்பு)

ஓய்வுபெறும் வயதை அண்மிக்கும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு சமூக சேவைகள் அமைச்சினால் செயலமர்வு நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக சமூக சேவைகள் அமைச்சின் முதியோர்களுக்கான தேசிய செயலகப் பணிப்பாளர் சுவிந்த எஸ். சிங்கப்புலி தெரிவித்தார். இதற்காக 25 மாவட்டங்களிலுமுள்ள மாவட்டச் செயலர்களுக்கு தலா 60,000 ரூபா படி நிதி அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்நிதியை பிரதேச செயலகங்களுக்கு மாவட்டச் செயலர்கள் பகிர்ந்தளித்து செயலமர்வை நடத்தவுள்ளனர். தங்கள் பிரதேச செயலக சமூக சேவைகள் அலுவலர்கள், முதியோர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்கள் ஊடாக இச் செயலமர்வை நடத்தவுள்ளதாகவும் அவர் கூறினார். அரச உத்தியோகத்தர்கள் ஓய்வு பெற்ற பின்னர் பலவித உளப் பாதிப்புக்களை எதிர்நோக்கி நோய் வாய்ப்படும் நிலைக்கு உள்ளாகின்றனர்.

இதனால், நாட்டின் முதியோர் சனத்தொகை ஆரோக்கியமற்ற நிலையை அடைந்துள்ளது. இவ்வாறான பல நிலைகளை தடுக்கும் நோக்குடன் இச்செயலமர்வுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர கூறினார்.

# இராணுவத்தின் தியாகமே விக்கி முதல்வராக காரணம்

## அமைச்சர் சுசில் தெரிவிப்பு

(கொழும்பு)

இராணுவத்தினர் தமது உயிர்களை தியாகம் செய்ததன் காரணமாகவே வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு அந்தப் பதவி நாற்காலி கிடைத்ததாக அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

கடுவெல பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் பேசும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாண முதலமைச்சர் தற்போது ஒவ்வொரு கதைகளைக் கூறி வருகிறார்.

முதலமைச்சர், நீதிமன்றத்தில் பணியாற்றிய காலத்தில் வவுனியாவை தாண்டி யாழ்ப்பாணத்திற்குச்சென்றதில்லை. வவுனியாவை தாண்டிச் செல்ல முடியாத சூழ்நிலை காணப்பட்டது. எமது இராணுவத்தினர் உயிர்களை தியாகம் செய்த காரணத்தினாலேயே விக்னேஸ்வரனுக்கு முதலமைச்சர் பதவி கிடைத்தது.

அதேவேளை யுத்தம் முடிவுக்கு வந்ததன் காரணமாகவே மக்களுக்கு சகல பிரதிபலன்களும் கிடைத்து வருகிறது. இதனால் அரசாங்கத்தின் மீது குற்றம் சுமத்த எதிர்க்கட்சிகளிடம் காரணங்கள் இல்லை.

விரும்பிய இடத்தில் வாழ, விரும்பிய இடத்திற்குச்செல்ல மக்களுக்கு சுதந்திரம் கிடைத்துள்ளது எனவும் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# இலங்கையின் மாகாணசபைகளை ஆற்றலுள்ளவைகளாக ஆக்குவதற்கு ஏதாவது வழியுண்டா!

முன்னாள் முதலமைச்சர் அ. வரதராஜப்பெருமாள் கட்டுரையிலிருந்து

வடக்கு மாகாண சபைக்கான தேர்தற் பிரசாரத்தின் போது திரு. விக்கினேஸ்வரன் உட்பட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கிளப்பிய பிரச்சினைகளும் அதன்மூலம் தமக்குத்தாமே ஏற்படுத்திக் கொண்ட சவால்களையும் நாம் மீட்டுப் பார்ப்போமாயின் அவற்றில் பிரதானமாக முதன்மைப்படுத்தப்பட்டவை

1) இராணுவ அதிகாரியான ஒருவர் வடக்கின் ஆளுநராக இருப்பதை கொழும்பு அரசாங்கம் மாற்றியே ஆக வேண்டும்!

2) வடக்கில் உள்ள இராணுவத்தை அரசாங்கம் மீளப்பெற வேண்டும், குறைந்தபட்சம் வடக்கு கிழக்கில் அவற்றின் எண்ணிக்கையைக் குறைப்பதோடு அவற்றை முகாம்களுக்குள் முடக்க வேண்டும்!

மாகாண சபைக்கான தேர்தற் பிரசாரத்தின் போது மக்கள் தங்களுக்கு மாகாண சபைத் தேர்தலில் ஆணை தந்தால் இந்த இரண்டு பிரச்சினைகளையும் தங்களால் சாதித்துக் காட்ட முடியும் என்பது போலவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வீரமுழக்கங்களை - வெற்றி முழக்கங்களை உரத்த குரல்களில் மேற்கொண்டனர். இவ்விடயத்தில் திரு மாவை சேனாதிராஜா மற்றும் கூட்டமைப்பின் தேசியக் குரல் திரு சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோரோடு அப்போது திரு. விக்கினேஸ்வரன். அவர்களும் எந்தவகையிலும் குறைந்தவராக இல்லாமல் மேடை தோறும் முழங்கினார்.



மக்களுக்கு என்ன தேவை! அவற்றை எப்படிச் சாதிப்பது! என்பவை அவர்களுக்குப் பிரதான விடயங்களே அல்ல. மக்களுக்கான அபிலாஷைகளை எப்படி வென்றெடுப்பது என்பதில் தங்களது நேரத்தையும் சக்திகளையும் செலவழித்தால் தங்களுக்கு தனிப்பட்ட ரீதியாக பிரயோசனம் எதுவும் ஏற்படாது என்பது மட்டுமல்ல தங்களுக்கு தனிப்பட்டரீதியில் நட்டங்கள் கஷ்டங்கள் ஏற்படுவதற்கே வாய்ப்புக்கள் அதிகமென்பதால் மிகக் கவனமாகவே அவற்றை நழுவவிட்டு விடுகிறார்கள். எனவேதான் அந்த விடயங்களில் மக்களை தோற்றுப் போக விட்டுவிடுகிறார்கள்.

ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் அந்த இராணுவ எதிர்ப்புப் பிரசாரங்களே மாகாண சபைக்கான தேர்தலில் அவர்கள் மகாவெற்றியைப் பெற்ற பின்னர் "தன் வினை தன்னைச் சுடும்": "நுணலும் தன் வாயால் கெடும்" என்பது போல அவர்களையே நெருக்கடிகளுக்கு உள்ளாக்கும் வகையில் தவிர்க்க முடியாதபடி சுயமரியாதைப் பிரச்சினையாக ஆகிவிட்டது.

தெரிவு செய்யப்பட்ட மாகாணசபை உறுப்பினர்களிற் பெரும்பாலானோர் தாங்கள் முன்னாள் இராணுவ அதிகாரியான ஆளுநருக்கு முன்னால் சத்தியப்பிரமாணம் செய்யத் தயாராக இல்லையென தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு உள்ளேயே கலகம் செய்யும் நிலைக்கு வழிவகுத்தது. அதுமட்டுமல்லாமல் வடக்கு கிழக்கில் இராணுவத்தை மீளப்பெறாத - இராணுவத்தின் பிரசன்னங்களை உடனடியாகக் குறைக்காத ஜனாதிபதிக்கு முன்னால் தமிழ் முதலமைச்சர் சத்தியப்பிரமாணம் செய்வது இனத் துரோகம் என தமது முதலமைச்சருக்கு எதிராக வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சியினரே அரசியற் குழப்பம் விளைவித்தனர்.

இந்த விநோதம் நிகழ்வதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தேர்தல் மேடைகளில் மேற்கொண்ட வீர முழக்கங்களே காரணமாகும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் அரசியல் எப்படி இருக்கிறது என்றால், எதிரிக்குச் சகுனம் பிழைக்கும் வேலையைச் செய்யப் போய் தங்களது மூக்கைத் தாங்களே அறுத்துக் கொள்ளும் வேலையைச் செய்வது போலவே அவர்களின் சாதனைகளும் அமைகின்றன.

இதையெல்லாம் நான் கூறுகிற போது ஏதோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அரசியல் விடயங்களையும் விளைவுகளையும் தெரியாமல் - புரியாமல் இருக்கிறார்கள் - செயற்படுகிறார்கள் என நான் கூறுவதாக நீங்கள் கருதிக் கொள்ள வேண்டாம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் மிகத் தெளிவானவர்கள், மிக நுட்பமான ஆற்றல்கள் கொண்டவர்கள் என்பதில் நாம் சந்தேகப்பட இடமேயில்லை.

மக்களுக்கு என்ன தேவை! அவற்றை எப்படிச் சாதிப்பது! என்பவை அவர்களுக்குப் பிரதான விடயங்களே அல்ல. மக்களுக்கான அபிலாஷைகளை எப்படி வென்றெடுப்பது என்பதில் தங்களது நேரத்தையும் சக்திகளையும் செலவழித்தால் தங்களுக்கு தனிப் பட்ட ரீதியாக பிரயோசனம் எதுவும் ஏற்படாது என்பது மட்டுமல்ல தங் களுக்கு தனிப்பட்டரீதியில் நட்டங்கள் கஷ்டங்கள் ஏற்படுவதற்கே வாய்ப்புக்கள் அதிகமென்பதால் மிகக் கவனமாகவே அவற்றை நழுவவிட்டு விடுகிறார்கள். எனவேதான் அந்த விடயங்களில் மக்களை தோற்றுப் போக விட்டு விடுகிறார்கள்.

சிங்களவர்கள் மீது வெறுப்போடும், அரச படைகளுக்கு எதிரான உச்சகட்ட கோபத்தோடும், அரசாங்கத்துக்கு எதிரான தீராத ஆத்திரத்தோடும் எப்போதும் மக்களை எப்படி உணர்ச்சி விளிம்பில் வைத்திருப்பது, அவ்வாறாக மக்கள் உணர்ச்சியில் மிதந்து கொண்டிருக்கும் மக்களிடமிருந்து எவ்வாறு அவ்வப்போது வரும் தேர்தல்களின் போது வாக்குகளை அதிகப்படியாக கறந்து கொள்வது என்பதில் அவர்கள் மகா நிபுணர்களாக இருப்பதிலிருந்தே அவர்களின் அரசியற் திறமைகளை நாம் அளவிட முடியும்.

பக்கத்து வீட்டுக்காரனோடு முற்றத்தில் நின்று புஜத்தையும் தொடையையும் தட்டி வீராவேசமாகக் கர்ஜ்ஜிக்கும் இவர்கள் அதே பக்கத்து வீட்டுக்காரனிடமிருந்து பின்கதவுகள் வழியாக தமது வீட்டுக்கு வேண்டிய கறிபுளியையெல்லாம் தவறாது வேண்டிக்கொள்வதை எல்லோரும் தெரிந்து கொண்டுதானே இருக்கிறார்கள்! இவர்கள் தமக்கு தனிப்பட்டரீதியில் தேவையானவற்றை - கிடைக்க வேண்டியவற்றை எவ்வளவு கெட்டித்தனமாக தமிழர்களின் எதிரிகள் என்று சொல்லப்படுபவர்களிடமிருந்து தவறாது கேட்டுப் பெற்றுக் கொள்கிறார்கள் என்பதை நீங்களும் தானே பார்க்கிறீர்கள்!

பக்கத்து வீட்டுக்காரனோடு முற்றத்தில் நின்று புஜத்தையும் தொடையையும் தட்டி வீராவேசமாகக் கர்ஜ்ஜிக்கும் இவர்கள் அதே பக்கத்து வீட்டுக்காரனிடமிருந்து பின்கதவுகள் வழியாக தமது வீட்டுக்கு வேண்டிய கறி புளியையெல்லாம் தவறாது வேண்டிக்கொள்வதை எல்லோரும் தெரிந்து கொண்டுதானே இருக்கிறார்கள்! இவர்கள் தமக்கு தனிப்பட்டரீதியில் தேவையானவற்றை – கிடைக்க வேண்டியவற்றை எவ்வளவு கெட்டித்தனமாக தமிழர்களின் எதிரிகள் என்று சொல்லப்படுபவர்களிடமிருந்து தவறாது கேட்டுப் பெற்றுக் கொள்கிறார்கள் என்பதை நீங்களும் தானே பார்க்கிறீர்கள்!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் உள்ளார்ந்த ஆற்றல்கள் பற்றிய விடயம் ஒருபுறமிருக்கட்டும். முன்னாள் இராணுவ அதிகாரியான ஆளுநரை மாற்றாமல் தமிழர்களுக்கு வாழ்வு இல்லை என்று நிற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் நிலைப்பாட்டை இங்கு சற்று கேள்விக்குள்ளாக்கி பரிசீலிப்போம்.

மகிந்த அரசாங்கம், அரச இராணுவம் ஆகியவை மீது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமது ஆத்திரங்களை கொட்டித் தீர்ப்பதற்கு பல காரணங்கள் உள்ளன என்றே வைத்துக் கொள்வோம். அது தொடர்பான வீரவசனங்களும் உரத்த கோரிக்கைகளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு - அவர்களது வாக்கு வேட்டைகளுக்கு வசதியாக - தமிழர்களின் உணர்ச்சிகளை உசுப்பும் அவர்களது அரசியல் மேடைகளுக்கு அவசியமானவை என்பதையும் புரிந்து கொள்வோம். ஆனால் இங்கு எனது பிரதானமான கேள்வி என்னவென்றால், ஆளுநர் யாராக இருக்க வேண்டும் - எப்படிப்பட்டவராக இருக்க வேண்டும் என்பது ஒரு மாகாணசபை சிறப்பாக அமைவதற்கு அவ்வளவு பிரதானமானதா? என்பதே!

ஓர் இராணுவ அதிகாரியாக இருந்தவர் ஆளுநராக இல்லாமல் ஒரு சிவில் நிர்வாகியாக இருந்த சிங்களவர் ஒருவர் ஆளுநராக நியமிக்கப்படுவதால் மட்டும் மாகாண சபை நிர்வாகங்கள் நிச்சயமாக சிறப்பாகச் செயற்படும் என்று கருத ஏதாவது அடிப்படையான நியாயம் உண்டா? முன்னாள் இராணுவ அதிகாரியே இந்த ஆளுநர் என்பதன் காரணமாக உள்ள கோபத்தினால் ஏற்பட்டுள்ள கோரிக்கையா? அல்லது இலங்கை இராணுவத்தில் முன்னாள் அதிகாரியாக இருந்த எவருமே - ஜெனரல் சரத் பொன்சேகா உட்பட எவராயினும் - ஆளுநராக எப்பவும் இருக்கக் கூடாதா?

இங்கு முக்கியமாக அவதானிக்கப்பட வேண்டிய விடயம் என்னவெனில், ஆளுநராக நியமிக்கப்பட்டவர் - நியமிக்கப்படும் ஒருவர் எவராக இருந்தாலும், முன்னர் அவர் எந்தத் துறையில் சேவை செய்தவராக இருந்தாலும், ஆளுநரானவர் ஜனாதிபதியினதும் மத்திய ஆட்சியில் உள்ள அமைச்சர்களினதும் செல்வாக்குக்கும் கட்டளைகளுக்கும் உட்பட்டவராகவே இருப்பார்.

இராணுவ அதிகாரிகளை விட அதி கூடிய சிங்கள மேலாதிக்க எண்ணம் கொண்ட நிறையப்பேர் இலங்கையின் அரச சிவில் நிர்வாகத்தில் இருந்திருக்கிறார்கள் - இப்போதும் அப்படிப்பட்டவர்கள் நிறையப் பேர் இருக்கிறார்கள். ஜெனரல் சந்திரசிறி அவர்களை நீக்கிவிட்டு இனவாத இரத்தம் ஓடும் சிவில் நிர்வாகி ஒருவரை ஜனாதிபதி ஆளுநராக நியமித்திருந்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மட்டுமல்ல, அவர்களின் வீராவேச மேடை உரைகளைக் கேட்டு மயக்க நிலையில் இருக்கும் தமிழ் மக்களும் அவ்விடயத்தில் வாய் பேச முடியாதபடி தோற்றுப் போயிருப்பார்கள் அல்லவா?

வடக்கு கிழக்கு மாகாண சபைக்கான ஆளுநர் பற்றிய விடயம் வந்தபோது என் முன்னாலும் இதேமாதிரியான ஒரு பிரச்சினை வந்ததையும் அதில் எனது அணுகுமுறை எவ்வாறு அமைந்தது என்பதையும் பல தோழர்கள் அறிவார்கள். அது பற்றி இப்போது இங்கே பகிரங்கப்படுத்துவது பொருத்தமானது எனக் கருதுகிறேன்.

1988 நவம்பரில் தேர்தல் முடிவுகள் வெளிவந்த சில நாட்களுக்குள்ளேயே வடக்கு கிழக்கு மாகாண சபைக்கான ஆளுநராக யாரை ஜனாதிபதி நியமிக்கப் போகிறார் என பல ஊகங்கள் அடிபடத் தொடங்கி விட்டன. அதில் திரு சார்ள்ஸ் அபயசேகரா, முன்னாள் இராணுவ தளபதி ஜெனரல் நளின் செனிவிரத்ன மற்றும் திரு நேசையா போன்றவர்களின் பெயர்களும் இருந்தன.

நான் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவை அவரது அழைப்பிற்கிணங்க சந்தித்த போது அவர் என்னிடம் கேட்ட முதற்கேள்வி "நீங்கள் எங்கே மாகாண சபையின் தலைமைச்செயலகத்தை மையமாகக் கொண்டு செயற்படப் போகிறீர்கள்" என்பதுதான். நாங்கள் திருகோணமலையில் அதற்கான தயார் வேலைகளை ஏற்கனவே செய்து கொண்டிருக்கிறோம் என்பதை அவர் அறிந்தே இருப்பார். அவரது கேள்விக்கு நான் "திருகோணமலையை மையமாகக் கொண்டே செயற்பட முடிவு செய்துள்ளோம்" என்றேன்.

(18ஆம் பக்கம் பார்க்க)

# கடும் போக்குவாத செயற்பாடு நாட்டை தனிமைப்படுத்தும்

## பிரதியமைச்சர் முஸ்தபா எச்சரிக்கை

(கொழும்பு)

**கடும்போக்குவாதம் நாட்டை சர்வதேச ரீதியில் தனிமைப் படுத்தும் என முதலீட்டு ஊக்குவிப்பு பிரதியமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.**



நாட்டில் மத முரண்பாடுகளைத் தூண்டும் வகையில் எவரேனும் செயற்பட்டால் அது நாட்டை சர்வதேச அரங்கில் தனிமைப்ப டுத்த வழியமைக்கும் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பொதுபல சேனாவின் நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதி சரியான தீர்மானம் எடுப்பார் என்பதில் நம்பிக்கை இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உள்நாட்டு சர்வதேச முஸ்லிம்களின் நண்பன் என அவர் குறிப் பிட்டுள்ளார். பலஸ்தீன முஸ்லிம்களுக்கு ஜனாதிபதி தைரியமாக ஆதரவளித்திருந்தார் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஏனைய மதங்களுக்கும் இனங்களுக்கும் மதிப்பளிக்க வேண்டியதன் அவசியம் பௌத்த மதத்தில் ஏனைய மதங்களை விடவும் வலியுறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இனவாத மதவாத கருத்துக்களை பிரசாரம் செய்வதனை ஊடகங்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

முஸ்லிம் மக்கள் நாட்டில் ஒரு அங்குலத்தையேனும் கோரவில்லை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.


கண்டி இராச்சிய காலம் முதல் நாட்டின் இறைமையை பாதுகாத்துக்கொள்ள முஸ்லிம்கள் போராடியிருப்பதாகத் தெரிவித் துள்ளார்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவில் கடமையாற்றுவோரில் பெரும்பான்மையானவர்கள் முஸ் லிம்கள் என்பதனை நினைவில் நிறுத்திக்கொள்ள வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

ஹலால் பிரச்சினையை சிலர் அரசியலாக்க முயற்சிக்கின்றனர்.

உலகின் எந்தவொரு நாட்டிலும் ஹலால் சின்னத்திற்கு எதிராக சர்ச்சைகள் எழவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்

# பறந்து சென்ற கிளிகளில் மூன்று பிடிக்கப்பட்டன



(கொழும்பு)

கோட்டை ஜனாதிபதி மாளிகையில் இருந்து பறந்து சென்ற நான்கு வர்ணக் கிளிகளில் மூன்று வர்ணக் கிளிகள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

கொழும்பு பாதுகாப்பு கல்லூரிக்கு அருகில் இருந்து இரண்டு வர்ணக் கிளிகளும் கொழும்பு நகருக்கு உள்ளே மற்றுமொரு கிளியும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக் கப்பட்டுள்ளது.

பறந்து சென்ற கிளிகள் தொடர்பில் தகவல் அறிந்தால், 0777 - 535377 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு தெரிவிக்கு மாறு ஜனாதிபதியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித் திருந்தார்.

இந்த நிலையில் பொது மக்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து இந்த 3 கிளிகள் மீட்கப்பட்டுள்ளன.

எனினும் ஒரு கிளி இன்னும் கண்டு பிடிக்கப்படவில்லை.

# வாழ்க்கைச் செலவு அதிகரிப்பால் புத்தாண்டு மரபை பின்பற்றாத மக்கள்

## என்கிறார் கரு எம்.பி

குற்றச் செயல்களுக்கு அரச அனுசரணை வழங்கப்படும் வரையில் நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்த முடியாது என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவ பேரவையின் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகளினால் மக்களினால தமிழ் சிங்கள புத்தாண்டு மரபுகளைப் பின்பற்ற முடியவில்லை.

மக்களின் பண்புகளில் பாரியளவில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

சூதாட்டம், போதைப் பொருள் மதுபான பயன்பாட்டுக்கு அரசாங்கம் அனுசரணை வழங்குகின்றது. இந்த நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்த வேண்டும்.

நாட்டின் ஜனாதிபதியும் தலைக்கு எண்ணெய் வைக்கும் நிகழ்வின் போது பச்சை நிற ஆடை அணிந்திருந்தார்

பச்சை நிறமென்பது ஐக்கிய தேசியக் கட்சியின் நிறமாகும். இதன் மூலம் நாட்டின் எதிர்காலம் சுபமானது என்பது உணர்த்தப் பட்டுள்ளமை மகிழ்ச்சி அளிக்கின்றது என அவர் குறிப்பிட் டுள்ளார்.

எம்பிலிப்பிட்டியவில் நடைபெற்ற தலைக்கு எண்ணெய் வைக்கும் நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது அவர் இதனைக் குறிப் பிட்டுள்ளார்.

# ஜனநாயக முகத்துடன் தொடர்ந்தும் புலிகளின் அமைப்புகள் பிரசாரம்

## இது நாட்டிற்கு அச்சுறுத்தல் என்கிறார் கோத்தா



இலங்கையில் தற்போது தீவிரவாதம் இல்லையென்றாலும், உலகளாவிய தீவிரவாத வலையமைப்பு தொடர்ந்தும தடையின்றிச் செயற்பட்டு வருவதாக பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ச தெரிவித் துள்ளார்.

மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில், நடைபெறும் 14ஆவது பாதுகாப்புச் சேவைகள் மாநாட்டில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் வலையமைப்புகள், தமது முன்னணி அமைப்புகளின் ஊடாக, ஜனநாயக முகத்துடன் தொடர்ந்தும் இலங்கைக்கு எதிராக, அனைத்துலக அளவில் பரப்புரைகளை மேற் கொண்டு வருகின்றன.

அரசியல், ஆதரவு அல்லது மனிதாபிமான உதவிகளுக்காக இந்த முன்னணி அமைப்புகள் குறித்து சில நாடுகள் கண்டு கொள்ளாமல் உள்ளன. அதே நேரம், இந்த வலையமைப்பை இயக்குவோரில் பெரும்பாலானவர்கள் பயிற்றப்பட்ட தீவிரவாதிகள். இன்னமும் சட்டவிரோத செயற்பாடுகளில் தொடர்பு பட்டுள்ளவர்கள்.

அத்துடன் இன்னமும் இலங்கையில் தீவிரவாதத்தை புதுப்பிக்க இவர்கள் முனை கின்றனர். அரசல்லாத உலகளாவியவலைப பின்னல், இறைமையுள்ள அரசுகளுக்கு நேரடியான அச்சுறுத்தலாகவும் உருவெடுத்துள்ளது. இதனை இலகுவாக எடுத்துக கொள்ளக் கூடாது. என்றும் அவர் தெரிவித்துள்ளார்

# மருந்துப் பொருள் கொள்வனவு இணையத்தினூடாக வேண்டாம்

## அறிவுறுத்தும் சுகாதார அமைச்சு

இணையத்தின் ஊடாக மருந்துப் பொருட்களை கொள்வனவு செய்வதனை தவிர்த்துக் கொள்ளுமாறு சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இணையத்தின் ஊடாக கொள்வனவு செய்யப்படும் மருந்துப் பொருட்கள் உரிய தரத்தைக் கொண்டிருப்பதில்லை என தேசிய ஔடதங்கள் அதிகார சபையின் பணிப்பாளர் டாக்டர் ஹேமந்த பெனரகம தெரிவித்தார்

உரிய தரத்தினைக் கொண்டிராத மருந்துப் பொருட்களை இணையத்தின் ஊடாக கொள்வனவு செய்து, பயன்படுத்திய சிலர் உயிரிழந்த சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக அவர் கூறினார்.

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளை இலக்காகக்கொண்டு, இந்த விற்பனை நடவடிக்கைகள் இடம்பெற்றுவருவதாக தேசிய ஔடதங்கள் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

வைத்தியர்கள் பரிந்துரை செய்யாமல் பயன்படுத்தும் மருந்துப் பொருட்களால் உடலுக்கு தீங்கு ஏற்படுவதாகவும் தேசிய ஔடதங்கள் அதிகார சபையின் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

# இறுதிப் போரில் இந்திய இராணுவமா? அடியோடு மறுக்கிறார் பொன்சேகா



(கொழும்பு)

இலங்கையில் நடைபெற்ற இறுதிக்கட்டப் போரின் போது, இந்திய இராணுவம் களத்தில் போரிட்டதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் எந்தவித உண்மையுமில்லை என முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

எந்த நாட்டு இராணுவமும் இலங்கை இராணுவத்துடன் இணைந்து போரிடவில்லை.

2009 ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற இறுதிக் கட்டப் போரில், இந்திய இராணுவம் நேரடியாக விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் ஈடுபட்டதாக இந்திய உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு தொடர்பில் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இது குறித்து சரத் பொன்சேகா மேலும் தெரிவிக்கையில்,

உலகில் பல நாடுகளிடம் இருந்து இலங்கை இராணுவத்திற்குத் தேவையான புலனாய்வுத தகவல்கள் கிடைத்தன. சில நாடுகள் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரை ஏற்றுக் கொண்டன.

இலங்கையில் நடைபெற்ற போர் தொடர்பாக இந்தியாவினால் தடைகள் எதுவும் ஏற்படுத்தப்படவில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவன் வணிகசூரிய இது குறித்து கருத்துத் தெரிவிக்கையில்,

இந்திய மற்றும் இலங்கைப் படையினருக்கு இடையில் நேற்று இன்று உறவுகள் ஆரம்பமாகவில்லை.

40 வருடங்களாக இரண்டு நாடுகளுக்கும் இடையில் பாதுகாப்பு உறவுகள் நிலவுகின்றன. அதுவொரு இரகசியம் அல்ல. பயங்கரவாதத்தை ஒழிக்க அவர்களது ஒத்துழைப்பு எமக்கு தொடர்ந்து கிடைத்தது. பயிற்சிகள் கிடைத்தன.

எம்முடன் இருந்து ஒத்துழைப்புக்களை வழங்கினர். அவ்வாறு பல்வேறு உதவிகள் கிடைத்தன. அவை ஒன்றும் சட்டவிரோதமானவை அல்ல என்றார்.

# பிம்சவிய காணி திட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டும்

## வலியுறுத்தும் அஸ்கிரிய மகாநாயக்கர்

(கொழும்பு)

அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பிம்சவிய காணிப் பதிவு சட்டமூலத்தில் திருத்தம் கொண்டுவரப்பட வேண்டும் என அஸ்கிரிய பிரிவு மகாநாயக்க உடுகம சிறி புத்தரக்கித்த தேரர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சட்ட மூலம் நிறைவேற்றப்பட்டால் வழிபாட்டுத் தலங்களுக்குரிய காணி தொடர்பில் பாரிய பிரச்சினை ஏற்படும் என தேரர் குறிப்பிட்டுள்ளார்.

பிம்சவிய சட்டமூலத்தில் திருத்தம் கொண்டுவருமாறு பல முறை அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்ட போதும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என அவர் குறிப்பிட்டார்.

மகாநாயக்க தேரரை சந்தித்து ஆசி பெறச் சென்ற நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீமிடம் உடுகம சிறி புத்தரக்கித்த தேரர் இவ்வாறு கூறியுள்ளார்.

குறித்த சட்டமூலம் திருத்தம் செய்யப்படாவிட்டால் எதிர்காலத்தில் வீதியில் இறங்கிப் போராட்டம் செய்வதை விட மாற்று வழியில்லை என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.



# ஒட்டுசுட்டானில் 1204 குடும்பங்களுக்கு வீடுகள் அமைக்கும் பணி நடைமுறை

## பிரதேச செயலர் குருபரன் தெரிவிப்பு

(ஒட்டுசுட்டான்)

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் மீள் குடியேறியவர்களில் 2,069 குடும்பங்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளதுடன், 1,204 குடும்பங்களுக்கு வீடுகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதாக ஒட்டுசுட்டான பிரதேச செயலர் எஸ்.குருபரன் தெரிவித்தார்.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் இதுவரையில் 5600 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீளக்குடியேறியுள்ளனர். இவர்களுக்கான வீட்டுத் திட்டங்கள் கட்டம் கட்டமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதனடிப்படையில் இவர்களில் 3,273 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களில் 2,069 குடும்பங்களிற்கு வீடுகள் அமைதது்க் கொடுக்கப்பட்டுள்ளன. அத்துடன், 1,204 குடும்பங்களுக்கு வீடுகள் அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன என்று அவர் தெரிவித்தார்.

அதன்படி அரச சார்பற்ற நிதியுதவியின் மூலம் 1,648 வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. அத்துடன், இந்திய அரசாங்கத்தின் வீட்டுத்திட்டம் கட்டம் கட்டமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதன்படி, முதலாம் கட்டமாக கற்சிலைமடு கிராமத்தில் 140 வீடுகள் அமைக்கப்பட்டன. இரண்டாம் கட்டமாக பழம்பாசி கிராமத்தில் 150 வீடுகளும் ஒட்டுசுட்டானில் 51 வீடுகளும் மணவாளன் பட்டமுறிப்பு கிராமத்தில் 80 வீடுகளுமாக மொத்தம் 281 வீடுகள் அமைக்கப்பட்டன. மூன்றாம் கட்டமாக முத்தையன் கட்டு கிராமத்தில் 91 வீடுகள், அம்பகாமத்தில் 58 வீடுகளும் திருமுறிகண்டி இந்துபுரம் கிராமத்தில் 127 வீடுகளும் காதலியார் சமணன் குளத்தில் 143 வீடுகளுமாக மொத்தம் 419 வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

நான்காம் கட்டத்தில் ஒலுமடுவில் 74 வீடுகளும், மாங்குளத்தில் 173 வீடுகளும், பனிக்கன் குளத்தில் 24 வீடுகளும், திருமுறிகண்டியில் 191 வீடுகளுமாக மொத்தம் 462 வீடுகளுக்குரிய பயனாளிகள் தெரிவு இடம் பெற்று ஆவணங்கள் கோவைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. தற்போது, இந்திய அரசின் ஐந்தாம் கட்டத்தின் மூலம் முத்துவிநாயகபுரத்தில் 35 வீடுகளும், கருவேலன்கண்டலில் 37 வீடுகளும், தட்டையமலையில் 59 வீடுகளும், கனகரட்ணபுரத்தில் 55 வீடுகளும், வித்தியாபுரத்தில் 137 வீடுகளுமாக மொத்தம் 323 வீடுகளுக்குரிய பயனாளிகள் தெரிவு இடம்பெற்று ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டு வருகின்றன.

இவற்றினை விட பகுதியளவு சேதமடைந்த 346 வீடுகளில் 287 வீடுகளே திருத்தி அமைப்பதற்கு அனுமதி கிடைத்த நிலையில் அவற்றில் 239 வீடுகள் யு.என். கபிராற் நிறுவனத்தின் நிதியுதவியில் திருத்தம் செய்யப்பட்டு இருப்பதாகவும் செயலாளர் தெரிவித்தார். இவற்றினைவிட ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவில் தனிநபர் மற்றும் இருநபர் கொண்ட குடும்பங்கள் தவிர்ந்த 800 இற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு வீடுகள் தேவையாகவிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்

## முரசின் இன்றைய பலன்

(18.04.2014 வெள்ளிக்கிழமை)



ஐய வருஷம் சித்திரை மாதம் 05 ஆம் திகதி.
மரணயோகம் / திருதியை.
நட்சத்திரம் அனுஷம். மு.இ. 10.34 வரை. பின் கேட்டை.
இராகு காலம் 10.33 - 12.03 வரை. சுபநேரம் 06.03 - 07.33 வரை.

**ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.**

| | |
|---|---|
| மேடம் | கல்வியைத் தொடர நடவழக்கை எடுக்கும்படி வற்புறுத்திய தந்தையுடன் ரகளை ஏற்படல், அதிகாரத்தை பயன்படுத்தியமையினால் ஊழியர்களுடன் வாக்குவாதம. |
| ரிஷபம் | சமாந்தரப் பிரயாணத்தினால் காவலரால் பிழக்கப்பட்டு தண்டம், மனைவியின் அபிப்பிராயத்தைக் கைக் கொண்டதால் துயர் விலகுதல். |
| மிதுனம் | காணாமற் போன வளர்ப்புப் பிராணிகிடைப்பதால் சந்தோஷம் மேலிடல், திருமணம் நிறைவேற்ற சம்மதம் தெரிவித்தல். |
| கடகம் | எச்சரிக்கையைப் பொருட்படுத்தாமையினால் அங்கப்பழுது ஏற்படும், அனர்த்தம் விளைதல், தாயாரின் நோய்பற்றிய மனக்கவலையில் மூழ்குதல். |
| சிம்மம் | சமரசம் செய்ய வெளிக்கிட்டதால் பிரச்சினை சுமுகமான முழவினைக்கொண்டுவரல், அநாமதேய பேர் வழியின் தொலைபேசிச் செய்தியால் அச்ச நிலை தோன்றல். |
| கன்னி | போலி நகையை உண்மை என்று நம்பியதால் மோசடி ஏற்படல், தங்காலிகமாக இடமாற்றம் நிறுத்தாமை கண்டு ஆறுதல் அடைதல். |
| துலாம் | பரீட்சைச் சித்தியினால் உயர்கல்விகற்க வாய்ப்புக் கிட்டியமை கண்டு பரவசமடைதல், அரசியல் விமர்சனத்தினால் கைகலப்பும் நட்புக்கெடுதலும் ஏற்படும். |
| விருச்சிகம் | வியாழகோசரம் கெடுதலாக இருப்பதை எண்ணி பயணத்தை மேற்கொள்ளத் தயங்குதல், பதவிகள் கைக்கெட்ட பிரமுகரினால் சிபார்சு செய்யப்படல். |
| தனுசு | மாற்றுப் பயிர்ச் செய்கையில் ஈடுபட முன்வருதல், நீரிழிவு நோய் உணவுக்கட்டுப்பாட்டினால் குணமடைவதை எண்ணி மகிழ்தல். |
| மகரம் | பிரயாணத்தின்போது அருகில் நின்றவரால் உடைமை திருடப்படும் அபாய நிலைதோன்றல், அசாதாரண வேகத்தினால் ஏற்பட்ட விபத்தினால் அங்கப்பழுது தோன்றல். |
| கும்பம் | இரத்த உறவினர் வெளிநாட்டிலிருந்து வருகை தருதலினால் குதூகலம் ஏற்படல், பொறுப்பின்றிக் கொடுத்த பணத்தை வசூலிக்க முறைப்பாடு செய்தல். |
| மீனம் | மக்களின் உயர்வுகண்டு பெருமையும் மதிப்பும் ஏற்படல், எதிர்பாராது ஏற்பட்ட சுப நிகழ்வுகளினால் கடன்படும் நிலைக்கு நண்பரை நாடல். |

## வைக்கோல்கள் எரிந்து நாசம்

(அராலி)

புல்லுக்கு மூட்டிய தீயினால் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான வைக்கோல் எரிந்து நாசமானது.

இச்சம்பவம் அராலி வடகில் இடம்பெற்றது. சம்பவதினம் அராலி வடக்கைச் சேர்ந்த விவசாயி கூலியாட்களை பயன்படுத்தி புல்லுக்கு நெருப்பு வைத்து விட்டுச் சென்றுள்ளார்.

தீ வயலில் தொடர்ந்து பிடித்து அருகில் உள்ள 8 கட்டு வைக்கோல்கள் எரிந்து நாசமானது.

இதனால் அதிர்ச்சியடைந்த விவசாயி அராலி வட்டு விவசாய சம்மேளனத் தலைவர் ஜயலிங்கம் ஊடாக நஷ்டஈடு கோரியுள்ளதாக பெரும்போக அலுவலர் தெரிவித்துள்ளார்.

தற்போது நஷ்ட ஈடு மத்தியஸ்தம் மூலம் இரு விவசாயிகளும் பாதிக்காத வகையில் வழங்கப்படவுள்ளது. (92)

## பொதுக்கூட்டம்

(கொடிகாமம்)

வரணி மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத்தெரிவும் பாடசாலை அதிபர் க.மங்களேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்நிகழ்விற்கு பழைய மாணவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு செயலாளர் அறிவித்துள்ளார். (130)

## மிதுனம் — ஜய வருட பொதுபலன்கள்



(மிருகசீரிடம் 3,4 ஆம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதம்)

**புதனை ஆட்சி வீடாகக் கொண்ட மிதுனராசிக்காரர்களே!**

உங்களின் யோகாதிபதியான சுக்கிரன் 9ஆம் வீட்டில் நிற்கும்போது இந்தப் புத்தாண்டு பிறப்பதால் உங்களின் நிர்வாகத்திறன் பன்மடங்கு பெருகும். புதிய வேலைக்கு முயற்சி செய்ததற்கெல்லாம் நல்ல பலன்கள் கிட்டும். சலசலப்போடு இருந்த குடும்பம் அமைதிப் பூங்காவாக மாறும். இந்த ஜய வருடம் உங்கள் ராசிக்கு சுகஸ்தானத்தில் பிறப்பதால் மாதக் கணக்கில் தள்ளிப்போன காரியங்களெல்லாம் விரைந்து முடிவடையும்.

தாயாரின் ஆரோக்கியம் மேம்படும். சொத்து வாங்குவதற்காக திட்டமிட்டீர்களே! இப்போது அதற்கான முற்பணத்தைத் தருவீர்கள். பழுதாகிக் கிடந்த வாகனத்தை மாற்றி புதியதாக வாங்குவீர்கள். தாய்வழி உறவினர்களுடன் இருந்த மோதல்கள் விலகும். ஜூன் 12 வரை உங்கள் ராசியிலேயே குரு அமர்ந்து ஜென்ம குருவாக தொடர்வதால் ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுங்கள்.

ஜூன் 13ஆம் திகதி முதல் குரு 2ஆம் வீட்டில் சென்று அமர்வதால் தினந்தோறும் எதிர்பார்த்து ஏமாந்த தொகை கைக்கு வரும். தடைப்பட்டிருந்த சுப நிகழ்ச்சிகளெல்லாம் அடுத்தடுத்து நடந்தேறும். கைமாற்றாகவும், கடனாகவும் வாங்கியிருந்த பணத்தையும் திருப்பித்தருவீர்கள். குடும்பத்தில் இருந்து வந்த கூச்சல், குழப்பம் விலகும். பிரிந்திருந்தவர்கள் ஒன்று சேருவீர்கள்.

வழக்கால் இருந்த நெருக்கடிகள் வந்து நீங்கும். மழலை பாக்கியம் கிடைக்கும். வீண் பழியிலிருந்து விடுபடுவீர்கள். சொத்துச் சேர்க்கையும் உண்டு. நீங்கள் சொல்லாததையும் சொன்னதாக நினைத்துக் கொண்டு விலகியிருந்த சொந்தபந்தங்களெல்லாம் வலிய வந்து பேசுவார்கள். பழைய பிரச்சினைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வு காண்பீர்கள். சொந்த ஊர் பொதுக் காரியங்களையெல்லாம் முன்னின்று நடத்தி வைப்பீர்கள். விலை உயர்ந்த ஆடை, ஆபரணம் வாங்குவீர்கள். மூத்த சகோதர வகையில் உதவிகள் உண்டு.

ஜூன் 20ஆம் திகதி வரை கேது இலாப வீட்டில் நிற்பதால் உங்களின் புகழ், கௌரவம் ஒருபடி உயரும். அரைகுறையாக நின்ற வீடு கட்டும் பணியைத் தொடங்குவீர்கள். புதிய பதவிக்கு உங்களுடைய பெயர் பரிசீலனை செய்யப்படும். ஜூன் 21 முதல் கேது உங்கள் ராசிக்கு 10இல் நுழைவதால் வேலைச்சுமை அதிகரிக்கும். அவசரப்பட்டு வாக்குறுதிகள் தந்து விட்டு அதை நிறைவேற்ற முடியாமல் திணற வேண்டாம்.

உத்தியோகத்தில் விரும்பத்தகாத இடமாற்றம் வரும். கௌரவக் குறைவான சம்பவங்கள் நிகழக் கூடும். ஜூன் 20 ஆம் திகதி வரை ராகு 5 இல் நிற்பதால் பிள்ளைகளால் அலைச்சல், செலவுகள் வந்துபோகும். பூர்வீகச் சொத்துப் பிரச்சினையில் மூக்கை நுழைக்காதீர்கள். 21ஆம்திகதி முதல் ராகு 4 ஆம் வீட்டில் நுழைவதால் தாயாரின் ஆரோக்கியம் பாதிக்கும்.

வீடு, மனை வாங்கும் போது தாய்ப்பத்திரம், வில்லங்க சான்றிதழ்களையெல்லாம் சரி பார்த்து வாங்குங்கள். தாய்வழி உறவினர்களுடன் மனஸ்தாபம் வந்து நீங்கும். டிசம்பர் 15 ஆம் திகதிவரை சனிபகவான் 5 ஆம் வீட்டில் தொடர்வதால் பிள்ளைகளை உயர்கல்வி, உத்தியோகத்தின் பொருட்டு பிரிய வேண்டிய சூழ்நிலை உருவாகும். மகளின் திருமண விடயத்தில் அவசரம் வேண்டாம். வரன் வீட்டாரைப் பற்றி விசாரித்து கல்யாணம் முடிப்பது நல்லது.

மகனின் நட்பு வட்டத்தை கண்காணியுங்கள். பாதை மாற வாய்ப்பிருக்கிறது. சொத்து சம்பந்தப்பட்ட வழக்கில் வழக்கறிஞரிடம் கலந்தாலோசித்து முடிவெடுக்கப் பாருங்கள். டிசம்பர் 16 முதல் சனிபகவான் 6ஆம் வீட்டில் நுழைவதால் எதிர்த்தவர்கள் நண்பர்களாவார்கள். வேற்றுமொழி பேசுபவர்களால் உதவிகள் உண்டு. நீண்ட நாட்களாக எதிர்பார்த்து காத்திருந்த விசா கிடைக்கும். அண்டை மாநிலம், வெளிநாட்டிலிருப்பவர்கள் நண்பர்களாக அறிமுகமாவார்கள்.

வியாபாரத்தில் தள்ளுபடி விற்பனை மூலமாக இலாபம் ஈட்டுவீர்கள். ஆவணி, புரட்டாதி மாதங்களில் தள்ளிப்போன ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும்.

ஜூன் 12 ஆம் திகதி வரை ஜென்ம குரு தொடர்வதால் ஓய்வெடுக்க முடியாதபடி வேலைகள் இருந்து கொண்டேயிருக்கும். 13 ஆம் திகதி முதல் உங்கள் ராசியை விட்டு குரு விலகுவதால் அலுவலகத்தில் நிம்மதி உண்டு. உயரதிகாரிகள் உங்களின் கடின உழைப்பை புரிந்து கொள்வார்கள். தொந்தரவு தந்த அதிகாரி வேறு இடத்திற்கு மாற்றப்படுவார். மாசி, பங்குனி மாதங்களில் எதிர்பார்த்த சம்பள உயர்வு, பதவி உயர்வு கிடைக்கும். கேது ஜூன் 21 ஆம் திகதி முதல் 10 இல் அமர்வதால் சக ஊழியர்கள் மத்தியில் உயரதிகாரிகளை விமர்சிக்க வேண்டாம். உங்கள் மீது சிலர் வீண்பழி சுமத்துவார்கள்.

**கலைத்துறையினருக்கு** - வீண் வதந்திகள், கிசு கிசுக்களிலிருந்து விடுபடுவீர்கள். உதாசீனப்படுத்திய நிறுவனங்களிலிருந்து நல்ல வாய்ப்புகள் வரும். சம்பள மிகுதி கைக்கு வரும்.

**மாணவர்களுக்கு** - அறிவாற்றல், நினைவாற்றல் கூடும். அதிக மதிப்பெண் பெறுவீர்கள். ஆசிரியர்களின் அன்பும், பாராட்டும் கிடைக்கும். விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் பெறுவீர்கள்.

**கன்னிப் பெண்களுக்கு** - சருமத்தில் ஒவ்வாமை வந்து நீங்கும். அழகும் கூடும். நல்ல நிறுவனத்தில் வேலை கிடைக்கும். காதல் விவகாரத்தில் எச்சரிக்கையாக இருங்கள். சிலர் உயர்கல்விக்காக வெளிநாட்டிற்குச் சென்று வருவீர்கள். எதிர்பார்த்தபடி நல்ல வரன் அமையும். (தொடரும்)

INDIAN PREMIER LEAGUE 2014


# இன்றைய ஆட்டம்

**சென்னை எதிர் பஞ்சாப்**

**இடம்: அபுதாபி. நேரம்: மாலை 4 மணி**

**ஹைதராபாத் எதிர் ராஜஸ்தான்**

**இடம்: அபுதாபி. நேரம்: இரவு 8 மணி**



# தங்க மகனின் மீள் வருகை

(நியூயோர்க்)

அமெரிக்காவைச் சேர்ந்த புகழ்பெற்ற நீச்சல் வீரர் மைக்கல் பெல்ப்ஸ். ஒலிம்பிக் விளையாட்டில் நீச்சலில் 18 தங்கம் உட்பட 22 பதக்கங்கள் வென்று உலக சாதனை படைத்தவர். 2012ஆம் ஆண்டு லண்டன் ஒலிம்பிக்குடன் ஓய்வு பெறுவதாக அறிவித்தார்.

இந்த நிலையில் 2 ஆண்டுகள் இடைவெளிக்குப் பின்னர் 28 வயதான மைக்கல் பெல்ப்ஸ் தனது ஓய்வு முடிவில் இருந்து விடுபட்டுள்ளார். மீண்டும் நீச்சல் போட்டியில் அவர் பங்கேற்க இருப்பதாக அவரது நீண்ட கால பயிற்சியாளர் பொப் பவ்மன் அறிவித்திருக்கிறார்.

அமெரிக்காவின் மெசா நகரில் எதிர்வரும் 24ஆம் திகதி முதல் 26ஆம் திகதி வரை நடைபெறும் நீச்சல் போட்டியில் அவர் 50 மீற்றர் மற்றும் 100 மீற்றர் பிரீஸ்டைல், 100 மீற்றர் பட்டர்பிளை ஆகிய பிரிவுகளில் களமிறங்கவுள்ளார். இது 2016ஆம் ஆண்டு ரியோடி ஜெனீரோ ஒலிம்பிக்கில் அவர் பங்கேற்பதற்கான முதல் படிக்கட்டாக கருதப்படுகிறது.

நீச்சலில் தனது திறமையை அவர் பரிசோதிக்கிறார் என்று நினைக்கிறேன். இதில் அவரது செயற்பாடு எப்படி இருக்கிறது என்பதைப் பார்ப்போம். இதன் மூலம் மீண்டும் நீச்சல் வீரராக போட்டிகளில் அவர் தொடர்ந்து பங்கேற்பாரா? என்பதை என்னால் சொல்ல முடியாது என்றும் பொப் பவ்மன் தெரிவித்துள்ளார்.

# இயல்பான கப்டன்

இயல்பான கப்டன்களில் மும்பை இன்டியன்ஸ் கப்டன் ரோஹித் சர்மாவும் ஒருவர் என அந்த அணியின் பயிற்சியாளர் ஜோன் ரைட் தெரிவித்துள்ளார்.

கப்டன் பதவிக்குச் சென்று அதற்கு உறை போன்று பொருந்தியவர்களில் ரோஹித்தும் ஒருவர். சூழலுக்கு ஏற்றவாறு முடிவெடுக்கும் அவருடைய உத்திகள் அபூர்வமானவை. அது களத்திற்கு மிக முக்கியமான ஒன்றாகும். கப்டன் என்பவர் சிறப்பாகவும் விளையாட வேண்டும். ரோஹித் சர்மா முன்வரிசையில் நின்று அணியை வழிநடத்துகிறார். அவர் தனது பணியைத் திறம்பட செய்கிறார். அவரைக் குறைத்து மதிப்பிடக்கூடாது என கருதுகிறேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## அரையிறுதிக்கு முன்னேறுவோம்

(அபுதாபி)

ஏழாவது ஐ.பி.எல். தொடரில் சென்னை அணி குறைந்த பட்சம் அரையிறுதி வரை முன்னேறும் வாய்ப்பு பிரகாசமாகவுள்ளது என கப்டன் டோனி தெரிவித்துள்ளார்.

சென்னை, மும்பை, கொல்கத்தாவில் உள்ள தட்பவெப்ப நிலைக்கும் ஐக்கிய அரபு நாடுகளில் நிலவும் தட்பவெப்ப நிலைக்கும் நிறைய வேறுபாடு உண்டு. இதனால் வீரர்களுக்கு ஆரம்பத்தில் சற்று நெருக்கடி இருக்கும். இம்முறை சென்னை அணி குறைந்தபட்சம் அரையிறுதி வரை முன்னேறிவிடும் என்பதை உறுதியாகக் கூறலாம். அந்தளவுக்கு அணி வலுவாக உள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஹோலியின் பரபரப்பு



(அபுதாபி)

ஐ.பி.எல். கிரிக்கெட் விருந்தில் நடிகர் ஷாருக்கான் நடத்திய ஜாலியான சுயம் வரம் நிகழ்ச்சியில் நடிகை அனுஷ்கா சர்மாவை மனைவியாக தேர்வு செய்து விராட் ஹோலி பரபரப்பை ஏற்படுத்தினார்.

7ஆவது ஐ.பி.ல். கிரிக்கெட்டையொட்டி ஆரம்ப விழாவுக்கு பதிலாக இந்த முறை பிரமாண்டமான விருந்து நிகழ்ச்சி நடைபெற்றது. அபுதாபியில் உள்ள நட்சத்திர விடுதியில் நடைபெற்ற இந்த விருந்து கொண்டாட்டத்தில் 8 அணிகளின் கப்டன்களும் மேடையில் தோன்றி வழக்கம் போல் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.


கண்களுக்கு விருந்தளிக்கும் தடபுடலான நடனத்துக்கு மத்தியில் ஷாருக்கான் நடாத்திய வித்தியாசமான சுயம் வரம் தான் எல்லோரையும் வெகுவாக கவர்ந்தது. ஷாருக்கான், இந்திய நட்சத்திர கிரிக்கெட் வீரரும், பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணியின் கப்டனுமான ஹோலியை மேடைக்கு அழைத்து சுயம்வரம் நிகழ்ச்சியை நடத்தினார்.

அப்போது சமுக வலைதளங்கள் மூலம் ஹோலிக்கு, வந்த ஏராளமான காதல் அழைப்புகளில் இருந்து தெரிந்தெடுக்கப்பட்ட 8 பெண்களின் புகைப் படங்களை ஷாருக்கான் அவரிடம் காண்பித்தார்.

இவற்றில் உங்களுக்குப் பிடித்தமான மங்கையை வாழ்க்கைத் துணைவியாகத் தேர்வு செய்யும்படி ஷாருக்கான் ஹோலியிடம் கூறினார்.

இதையடுத்து ஹோலி என்ன செய்யப்போகிறார் என்ற ஆவல் எகிற, அவரோ சிறிதும் தயக்கமின்றி இந்தி நடிகை அனுஷ்கா சர்மாவின் படத்தை தேர்வு செய்தார்.

அந்த புகைப்படம் அவரது கழுத்தில் அணிவிக்கப்பட, அரங்கமே ஒரு கணம் ஆர்ப்பரித்தது. ஆனால் அது பற்றி அவர் எதுவும் பேசவில்லை.



# டெஸ்டில் மட்டும்

அவுஸ்ரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர் மிட்சல் ஜோன்சன், ஒருநாள் மற்றும் ருவென்ரி-20 போட்டிகளில் இருந்து ஓய்வு பெறத் திட்டமிட்டுள்ளார்.

ஜோன்சன் சமீபத்தில் பங்களாதேஷில் நிறைவடைந்த ருவென்ரி-20 உலகக் கிண்ணத்தில் கால் விரல் காயத்தால் பங்கேற்கவில்லை.

இந்நிலையில், டெஸ்டில் மட்டும் விளையாட முடிவு செய்துள்ள ஜோன்சன் இது குறித்து கருத்துத் தெரிவிக்கையில், டெஸ்ட் போட்டியில் தான் விளையாட விரும்புகிறேன், இதற்காக டெஸ்டில் மட்டும் கவனம் செலுத்த முடிவெடுத்துள்ளேன். 2015 இல் நடைபெறவுள்ள உலகக் கிண்ணத் தொடரைவிட இங்கிலாந்து மண்ணில் நடைபெறவிருக்கும் ஆஷஸ் டெஸ்ட் தொடரைத்தான் என் இலக்காக கொண்டுள்ளேன். எனவே ஒருநாள், ருவென்ரி-20 போட்டிகளிலிருந்து ஓய்வு பெற முடிவு செய்துள்ளேன் எனத் தெரிவித்துள்ளார்.

# பரிசுத்தொகை அதிகரிப்பு

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான பிரெஞ் ஓப்பன் தொடரின் இந்த ஆண்டுக்கான பரிசுத் தொகை 25 மில்லியன் யூரோக்களுக்கு மேல் (34.5 மில்லியன் டொலர்) அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி கடந்த ஆண்டை விடவும் இந்த ஆண்டு போட்டிகளில் 3 மில்லியன் யூரோ (4.1 மில்லியன் டொலர்) அதிகரிக்கப்பட்டுள்ளது. பிரெஞ் ஓப்பனில் ஆடவர் மற்றும் மகளிர் பிரிவுகளில் சம்பியன் பட்டம் வெல்பவருக்கு 1.65 மில்லியன் யூரோக்கள் பரிச[illegible]ங்கப்படும். இறுதிப் போட்டியில் தோல்வியடையும் வீர, வீராங்கனைக்கு [illegible] யூரோக்கள் பரிசு வழங்கப்படும்.

முன்னர் கடந்த 2013ஆம் ஆண்டு சம்பியன் பட்டம் வெல்பவருக்கு வழங்கப்பட்டதை விடவும் 150,000 யூரோக்கள் அதிகமாக இம்முறை போட்டியில் வழங்கப்படவுள்ளது. தவிர போட்டியில் இரண்டு, மூன்று மற்றும் நான்காவது இடங்களைப் பிடிக்கும் வீர,வீராங்கனைகளுக்கான பரிசுத்தொகையும் அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த ஆண்டுக்கான பிரெஞ் ஓப்பன் தொடர் எதிர்வரும் மே 25 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.


# தென்னாபிரிக்காவிற்கு ஹட்ரிக் பணப் பரிசு

டெஸ்ட் தரவரிசையில் முன்னணியில் இருக்கும் சர்வதேச அணிகளுக்கு ஐ.சி. சி. சார்பில் பரிசுத் தொகை வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் சர்வதேச கிரிக்கெட் சபை சார்பில், டெஸ்ட் மற்றும் ஒருநாள் தரவரிசையில் சிறந்து விளங்கும் அணிகளுக்கு பரிசுப் பணம் வழங்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் இந்த ஆண்டு ஏப்ரல் 1ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ள டெஸ்ட் தரவரிசையின் படி முதல் இடத்தில் தென்னாபிரிக்க அணியும், இரண்டாவது இடத்தில் அவுஸ்ரேலிய அணியும் உள்ளது. இந்திய அணி, நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை இழந்ததால் கடைசி நேரத்தில் மூன்றாவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது. நான்காவது இடத்தில் இங்கிலாந்து அணி உள்ளது. இதையடுத்து, முதலிடம் பெற்றுள்ள தென்னாபிரிக்காவுக்கு 475,000 டொலர் பரிசாக வழங்கப்பட்டது.

இரண்டாவது இடத்தில் உள்ள அவுஸ்ரேலியாவுக்கு 370,000 டொலரும், மூன்றாவது இடம் பெற்ற இந்திய அணிக்கு 265,000 டொலரும் வழங்கப்பட்டது. நான்காவதாக உள்ள இங்கிலாந்துக்கு 160,000 டொலர் கிடைத்தது. தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக தென்னாபிரிக்கா முதல் பரிசை தட்டிச் செல்வது மட்டுமில்லாமல் இதற்கான கிண்ணத்தையும் தக்கவைத்துக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மலிங்கவே கப்டன்



(கொழும்பு)

ருவென்ரி-20 உலகக் கிண்ணத்தை இலங்கைக்கு வென்று கொடுத்த மலிங்கவை கௌரவிக்கும் வகையில் அவருக்கு ருவென்ரி-20 அணியின் கப்டன் பதவியை வழங்க இலங்கை கிரிக்கெட் சபை ஆராய்ந்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அடுத்த மாதம் இங்கிலாந்துக்கு இலங்கை அணி சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ளது. இப்போட்டிக்கான ருவென்ரி-20 அணியின் கப்டனாக மலிங்கவை தேர்வு செய்வது குறித்து கிரிக்கெட் சபையின் உயர் அதிகாரிகளிடையே ஆராயப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

18 வருடங்களின் பின்னர் ஐ.சி.சி.யின் வெற்றிக் கிண்ணம் ஒன்றை மலிங்க தலைமையிலான இலங்கை அணி கைப்பற்றிக்கொண்டுள்ளது. இது மலிங்கவின் தலைமைத்துவமும், சிரேஷ்ட வீரர்களை அவர் சிறந்த முறையில் கையாண்டதுமே காரணம். எனவே, மலிங்கவை தொடர்ந்தும் கப்டன் பதவிக்கு தேர்வு செய்வதன் மூலம் சிறந்த பலன்களை இலங்கை அணி பெற்றுக்கொள்ளும் என்ற நம்பிக்கை தமக்கு இருப்பதாகவும், சிரேஷ்ட வீரர்களான மஹேல, சங்கக்கார ருவென்ரி-20 போட்டிகளில் ஓய்வுபெற்றுள்ள நிலையில் அணியை நெருக்கடியின்றி வழிநடத்தக்கூடிய திறன் மலிங்கவிடம் இருப்பதாகவும் இலங்கை கிரிக்கெட் சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# பரிசு மழை



உலக ருவென்ரி-20 கிரிக்கெட் சம்பியன்களான இலங்கை அணி வீரர்கள் ஒவ்வொருவருக்கும் 25 மில்லியன் ரூபா பரிசாக வழங்கப்படவுள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது. ஒரே தடவையில் மிக அதிக தொகையை இலங்கை அணி வீரர்கள் பெற்றுக்கொள்வது இலங்கை கிரிக்கெட் வரலாற்றில் இதுவே முதல் முறையென திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. இதேவேளை, ஐ.சி.சி. மற்றும் இலங்கை கிரிக்கெட் சபையால் வழங்கப்படவுள்ள பரிசுத் தொகையும் 15 வீரர்களுக்கும் சமமாகப் பகிர்ந்தளிக்கப்படவுள்ளது. இதன்படி, சம்பியன் அணி 2.8 மில்லியன் அமெரிக்க டொலர்களைப் பரிசாகப் பெற்றுக்கொள்ளவுள்ளது.

# இளைஞர் கழக விளையாட்டு விழா; சுழிபுரம் விக்டோரியா சம்பியன்

(சங்கானை)

சங்கானைப் பிரதேச இளைஞர் கழகங்களுக்கிடையிலான விளையாட்டு விழாவில் சுழிபுரம் விக்டோரியா இளைஞர் கழக அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக்கொண்டது.

சங்கானை பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான விளையாட்டு விழாவும் கடந்த செவ்வாய்க்கிழமை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.

இறுதி நாள் நிகழ்வின் போது கால்பந்தாட்டப் போட்டித் தொடரின் இறுதி ஆட்டம் மற்றும் தடகளப் போட்டிகள் நடைபெற்றது. கால்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டியில் சென். நியூஸ்ரார் இளைஞர் கழக அணியும் ஜேம்ஸ் இளைஞர் கழக அணியும் மோதின.

இரு அணிகளும் சமபலம் கொண்ட அணிகள் என்பதை நிரூபிக்கும் வகையில் முட்டி மோதிக் கொண்டன. இரு அணிகளும் மாறி மாறி பந்தை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தபோதும் கோலைப் பெற்றுக் கொள்ள கடும் பிரயத்தனம் செய்தன. இறுதி வரை இரு அணிகளாலும் கோல் எதனையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை. இதன் காரணமாக தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் சென். நியூஸ்ரார் இளைஞர் கழக அணி 4-3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

இதேவேளை, ஒட்டுமொத்த புள்ளிகள் அடிப்படையில் சுழிபுரம் விக்டோரியா இளைஞர் கழக அணி முதலாமிடத்தையும், அராலி மாவத்தை இளைஞர் கழக அணி இரண்டாமிடத்தையும், அராலி சென். நியூஸ்ரார் இளைஞர் கழக அணி மூன்றாமிடத்தையும் பிடித்துக் கொண்டன.

இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார்.

இந்நிகழ்வில் சங்கானைப் பிரதேச செயலர் சோதிநாதன், யாழ்.மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவி இயக்குநர் தபேந்திரன், மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி திருமதி வினோதினி சிறிமேனன், மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத் தலைவர் லக்சன், வலி.மேற்கு பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவரும், ஈ.பி.டி.பியின் வலிகாமம் பிரதேச இணைப்பாளருமான பாலகிருஸ்ணன் (ஜீவன்) உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

(48,93)



சுழிபுரம் விக்டோரியா



அராலி மாவத்தை



அராலி சென். நியூஸ்ரார்



## விளையாட்டு செய்திகள்

## இன்றைய ஆட்டங்கள்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான தடகளப் போட்டிகள் இன்றும் நாளையும் ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகளில் பங்குகொள்ளவுள்ள இளைஞர் கழக அணிகளை உரிய நேரத்திற்கு வருகை தந்து நேரவிரயத்தைத் தவிர்த்துக் கொள்ளுமாறும், இப்போட்டித் தொடரின் இறுதி நாள் போட்டிகள் நாளை மறுதினம் நடைபெற ஏற்பாடாகியுள்ளதாகவும் பிரதேச இளைஞர் சேவை மன்ற அதிகாரி தெரிவித்துள்ளார். (48)

(சுன்னாகம்)

தமிழ் - சிங்கள புத்தாண்டை முன்னிட்டு சுன்னாகம் பொலிஸ் நிலையமும், வலி. தெற்கு பிரதேச செயலகமும் இணைந்து நடாத்தும் பாரம்பரிய விளையாட்டு விழா இன்று மருதனார்மடம் இராமநாதன் மகளிர் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டி நிகழ்வில் ஆண், பெண்களுக்கான மரதன் ஓட்டம், கிறிஸ் மரம் ஏறுதல், தலையணைச் சண்டை, முட்டி உடைத்தல் போன்ற பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகளும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இப்போட்டி நிகழ்வில் இளைஞர், யுவதிகளை பங்குகொண்டு தமது திறனை வெளிப்படுத்துமாறு சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துஸ்மந்த தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இரவு 7.00 மணிக்கு கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளதாகவும், சிறப்பு நிகழ்வாக எஸ்.ஜி. சாந்தன் இசைக் குழுவினரின் இன்னிசை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (54)

# மாவட்ட பாடசாலை மட்ட கரப்பந்து நெல்லியடியில் இன்று அரையிறுதி, இறுதி

(நெல்லியடி)

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான மாவட்ட மட்ட கரப்பந்தாட்டத் தொடரின் அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டிகள் இன்றைய தினம் நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான மாவட்ட மட்ட கரப்பந்தாட்டப் போட்டி நேற்று முன்தினம் முதல் நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. இதில் 15,17,19 வயதுப் பிரிவு ஆண், பெண் அணிகள் மோதி வருகின்றன.

இதில் ஆண்களுக்கான அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்ற பாடசாலைகளின் விபரம் வருமாறு:

15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான முதலாவது அரையிறுதிப் போட்டியில் ஆவரங்கால் மகாஜன வித்தியாலய அணியும், அளவெட்டி அருணாசலம் வித்தியாலய அணியும் மோதவுள்ள அதேவேளை, இரண்டாவது அரையிறு திப் போட்டியில் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி அணியும், கோப்பாய் மகாவித்தியாலய அணியும் மோதவுள்ளன.

17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான முதலாவது அரையிறுதிப் போட்டியில் சுழிபுரம் விக்டோரியக் கல்லூரி அணியும், கோப்பாய் மகா வித்தியாலய அணியும் மோதவுள்ள அதேவேளை, இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் ஆவரங்கால் மகாஜன வித்தியாலய அணியும், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அணியும் மோதவுள்ளன.

19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான முதலாவது அரையிறுதிப் போட்டியில் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி அணியும், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அணியும் மோதவுள்ள அதேவேளை, இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணியும், அச்சுவேலி மத்திய கல்லூரி அணியும் மோதவுள்ளன.

இதேவேளை, பெண்களுக்கான காலிறுதிப் போட்டிகள் நேற்று நடைபெற்றதாகவும், இரு பிரிவுகளுக்குமான அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டி இன்றைய தினம் நடைபெறவுள்ளதாகவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (93)



வேரப்பிட்டி சிறி கணேசா வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் சிறப்புற நடைபெற்றது. பாடசாலை அதிபர் இளங்கோ தலைமையில் நடைபெற்ற இப்போட்டி நிகழ்வில் பிரதம விருந்தினராக ஈ.பி.டி.பீ.யின் காரைநகர் பிரதேச இணைப்பாளர் வீ. கண்ணன் மற்றும் கோட்டக்கல்விப் பணிப்பாளர் விக்கினேஸ்வரன், தீவக வலய ஆரம்ப கல்வி ஆலோசகர் கேசவன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## அரச அதிபர் வெற்றிக் கிண்ணம் ஏற்பாடுகள் பூர்த்தி

(யாழ்ப்பாணம்)

அரச அதிபர் வெற்றிக் கிண்ண விளையாட்டு நிகழ்வுகளின் இறுதிப் போட்டிகள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

யாழ். மாவட்ட செயலக ஊழியர் நலன்புரி சங்கம் மூன்றாவது ஆண்டாக வரும் பிரதேச செய்லக பணியாளர்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளை நடாத்தி வருகின்றது.

இறுதி நாள் போட்டிகள் கடந்த மாதம் இறுதிப் பகுதியில் நடைபெற ஏற்பாடாகியிருந்த நிலையில் பிற்போடப்பட்டது. இந்நிலையில் இப்போட்டிகள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (எஸ்.பி.)

முடியவில்லை.

அரசாங்கம் நிதி எதுவும் தரவில்லை அதனால் எதுவும் செய்ய முடியவில்லை என்று கூறப்படுகின்றது. கொழும்பு அரசாங்கம் ஒதுக்கிய

ஜெனிவாவில் நிறை வேறியதைத் தொடர்ந்து, இப்போது தென்னாபிரிக்கா இலங்கையின் நல்லிணக்க முயற்சிகளில் ஈடுபடுமானால், அதன் மூலம் இந்தியாவின்

ழுக்கச் செய்துவிடுமா? இந்தியா தொடர்பில் ஒரு விடயத்தைத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டியி ருக்கிறது. தனது பிராந்திய நலன்களைக் குறுக்கறுக்காத

சரியாகிவிடும் என்ற கனவு அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச நாடுகளுக்கு உண்டு.

ஜெனிவாத் தீர்மானத்தின் பின்னர் அமெரிக்கா வெளி

# ஆறு மாதங்களின் பிறகு இப்போது சொல்வதைத்தான் ஐந்து வருடங்கள் முடியவும் சொல்லப் போகின்றார்களா?



குரைக்கிற நாய் கடியாது என்பார்கள். அது உண்மையோ பொய்யோ நமது தமிழ்த் தேசிய அரசியலில் இப்போது குரைப்புத் தான் மிகுதி. வெகுகாலம் முன்னர் பார்த்த ஹொலிவுட் "டுமீல் டுமீல்" படம் ஒன்று நினைவுக்கு வருகிறது. படத்தின் பெயர் உட்பட, உண்மை யில் நினைவிலிருக்கும்படி அதில் ஒன்றும் விஷயம் இல்லை. ஆனால் ஒரு காட்சியில் வருகிற ஒரு சிறு உரையாடல் மட்டும் நினைவிலிருக்கிறது.

படத்தின் பிரதான பாத்திரம் என்று நினைக்கிறேன், எதிரியிடம் வசமாக மாட்டிக் கொள்கிறான். எதிரி துப்பாக்கியை நீட்டியபடி அகப்பட்டவனைத் தான் ஏன் கொல் லப்போகிறேன் என்று நீளமாக விளக்கிக்கொண்டு போகிறான். அவன் பேசிக்கொண்டிருக்கையில் அவனிடம் அகப்பட்டவன் தான் மறைத்து வைத்திருந்த துப்பாக் கியை எடுத்துச் சுட்டுவிடுகிறான். சுட்ட பின்பு, "சுடுவதானால் சுடு, சும்மா கதைத்துக் கொண்டிராதே!" என்று சொல்லியபடி நடையைக் கட்டுகிறான்.

நம்முடைய தலைமைகளிடம் துப்பாக்கிகளுமில்லை, சுடுகின்ற ஆற்றலுமில்லை. தங்கள் சார்பில் யாரோ சுடுவார்கள் என்று யார் யாரையோ காட்டி நீளமாகக் கதையளக்கிறார்கள். அந்தக் கதை களில் எடுபட்டு நாமெல்லோரும் ஆளுக்காள் உசுப்பேற்றி, ஊசிவெடி விஷயத்தையெல்லாம் ஆனைவெடி யாக்கிச் சிலசமயம் அணுகுண்டுப் பரிமாணத்துக்கு ஊதிப்பெருப்பித்து, முடிவில் ஊசிவெடி கூடத் திரி நனைந்து புகையாமலே போனபிறகு இன்னொரு வெடிக்கதைக்கு நம்மைத் ஆயத்தப்படுத்துகிறதைத் தான் இப்போது காணுகிறோம், இனியுங் காண்போம்.

**- கோகர்ணன்**

வடக்கு மாகாண சபை செயற்படத் தொடங்கி ஆறு மாதங்கள் ஆகி விட்டன. 89 இல் எங்களுக்குக் கிடைத்ததோ ஆறு மாதங்கள் மட்டும்தான் அதற்குப் பிறகு பிரபாகரனுக்கும் பிரேமதாசா வுக்கும் இடையே அரசியற் தந்தி ரோபாய தேன்நிலவு தொடங்கிய தால் அதற்கு மேல் எல்லாம் தடைப்படத் தொடங்கி விட்டன. அந்த ஓராண்டுகளில் நாம் செய் தவைகள் இன்றும் பேசப்படும் பொருளாக உள்ளன. நல்ல சந்தர்ப் பத்தை தவறவிட்டு விட்டதாக கவலைப்பட்டோரை இருபத்தைந்து ஆண்டுகளின் பின்னரும் கண்டிருக் கின்றேன் கேள்விப்பட்டிருக்கிறேன்.

ஆனால் இங்கே ஆறு மாதங்களில் இவ்வளவு தூரம் சமாதானமான பாதுகாப்பான சூழல் இருந்தும் வடக்கு மாகாணசபை இதுவரை நிறைவேற்றியிருப்பவை என்னென்ன என்ற கேள்வி எழுகின்றது. மாகாணசபையின் அதிகாரம் மற்றும் நிர்வாகத்துக்கு நேரடியாகச் சம்பந்தமில்லாத சில தீர்மானங்கள் மற்றும் 2013ஆம் ஆண்டுக்காக அரசு வழங்கிய நிதி யை ஆளுநர் செலவழிப்பதற்கான சட்ட அங்கீகாரம் வழங்கியது என்ப வற்றைத் தவிர வேறெதனையும் செய்ததாக என்னால் அறிய

1700 கோடி ரூபாயில் 500 கோடி ரூபா மூலதன செலவுகளுக்குரியது. ஒதுக்கி மூன்று மாதங்கள் ஆகிவிட்டன. எந்தெந்த திட்டங்களுக்காக அவை ஒதுக்கப்பட்டுள்ளன. அந்தத் திட்டங்களின் நிறைவேற்று நிலைகள் இப்போது என்ன நிலையில் உள்ளன என்பதற்கான திட்ட நிறை வேற்று மதிப்பு அறிக் கையை யாரும் பார்த்ததாக வும் என்னால் அறிய முடிய வில்லை. நான் தூர உள்ள வன் என்பதால் என்னால் அறிய முடியாமல் இருக்க வும் கூடும். மாகாண சபை யின் இணையத் தளமாவது அனைத்து தகவல்களையும் தாங்க வேண்டும்.

மாகாண அமைச்சர்கள் பதவியேற்றிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் அதிகார பூர்வமாக என்ன செய்கிறார் கள். ஒரு சாதாரண அரச சார்பற்ற தொண்டு நிறுவன அளவுக்காயினும் அவர்க ளால் ஏதாவது செய்யப்படு கின்றனவா? இவற்றிற்கும் பதில் ஆளுநர் எந்த அதி காரங்களையும் அமைச்சர் களுக்குத் தரவில்லை என்பதுவும் அரசாங்கம் அமைச்சுக்களுக்கு போதிய அளவு நிதி எதுவும் தர வில்லை என்பதுவும் மாகாணசபையின் செயலா ளர்களும் மற்றும் அதிகாரி களும் ஆளுநரின் சொற்படி மட்டுமே நடக்கிறார்கள் அமைச்சர்களின் கட்டளை களுக்குட்பட்டவர்களாக அவர்கள் செயற்படுகிறார்கள் இல்லை என்பவைதான் பதில்களா? ஐந்து வருடங் கள் முடிய இதைத்தான் மக்களுக்குச் சொல்லப் போகின்றார்களா?

**- முன்னாள் முதலமைச்சர் வரதராஜப்பெருமாள்**

இந்தியாவின் ஆதரவின் றியே அமெரிக்கப் பிரேரணை

முக்கியத்துவம் மேலும் கீழிறங்கும் என்பது சிலரது கணிப்பு. ஆனால் தென்னா பிரிக்காவும் அமெரிக்கப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்திருக்கவில்லை. இந்தியாவைப் போன்றே வாக்களிப்பைத் தவிர்த்திருந்தது.

சமீப காலமாக இலங்கை நல்லிணக்க முயற்சிகளில், தென்னாபிரிக்காவை ஈடுபடுத் தும் முனைப்புகளில், அரசு மற்றும் கூட்டமைப்பு ஆகிய இரு தரப்பினரும் ஈடுபாடு காட்டி வருகின்றனர். இதுபற்றி சில விமர்சனங்கள் வெளி யானபோதும், உண்மையி லேயே தென்னாபிரிக்காவின் பங்கு என்ன என்பது பற்றிய தகவல்கள் போதியளவு வெளியாகியிருக்கவில்லை. கூட்டமைப்பு இதனை ஒரு மூடிய அறை விவகாரமாகவே கையாண்டு வருகிறது.

சிலர் குறிப்பிடுவது போன்று தென்னாபிரிக்கத் தலையீடு, இந்தியாவின் முக்கியத்துவத்தை வலுவி

எந்தவொரு விடயத்திலும் இந்தியா தலையீடு செய்யப் போவதில்லை. நிச்சயமாக தென்னாபிரிக்காவின் தலை யீடு இந்தியாவின் பிராந்திய முக்கியத்துவத்திற்கு எந்த வகையிலும் சவாலாக அமையாது. எனவே இந்தியா அதுகுறித்து அலட்டிக்கொள்ளப் போவதில்லை.

ஆனால் தென்னாபிரிக்கா என்னதான் விடயங்களைக் கையாள முற்பட்டாலும், இந்தியாவின் ஆசீர்வாதம் இன்றி எந்தவொரு முயற் சியிலும் ஈடுபடாது. எந்த வொரு நாடும் தங்களுடைய நலன்களை நிறுத்துப் பார்த்துத்தான் வெளிவி வகாரங்களில் தலையீடு செய்ய முற்படும். அவ்வாறு நிறுத்துப் பார்க்கும்போது, எப்போதுமே இந்தியாவின் ஆதரவு அத்தியாவசியமான ஒன்றாகவே இருக்கும். இலங்கை விவகாரங்களில் ஈடுபடும் எவரும் பிராந்திய சக்தியான இந்தியாவைப் பகைத்துக்கொண்டு அல்லது ஓரம்கட்டி, இலங்கை விவ காரத்தைக் கையிலெடுக்கப் போவதில்லை. அவ்வாறு எடுக்க வேண்டிய அவசியமும் இல்லை.

எனவே இலங்கை விவகாரத்தில், இந்தியா எந்நேரத்திலும் தலையீடு செய்யக்கூடிய ஏதுநிலை- யைக் கொண்டிருக்கின்றது. இது ஒரு அரசியல் யதார்த் தம். இந்த யதார்த்தத்தைப் புறம்தள்ளி செயலாற்றலாம் என்று தமிழர் தரப்பு எண்ணுமாயின், அதன் விளைவுகள் பாரதூரமான தாகவே அமையும்.

**- யதீந்திரா**

தற்போது பதவியில் உள்ள மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் மாறி ஐக்கிய தேசியக்கட்சி தலைமையி லான அரசாங்கம் அல்லது கூட்டு அரசாங்கம் ஒன்று பதவிக்கு வந்தால் எல்லாம்

யிட்ட அறிக்கை ஒன்றில் கூட, தற்போதைய அரசாங் கம்தான் இவ்வளவு பிரச் சினைக்கும் காரணம் என்பது போல கூறப்பட்டிருந்தது. இனப்பிரச்சினையின் வரலாற்றை சுருக்குவதன் மூலம் அல்லது மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்துடன் மட்டுப்படுத்துவதன் ஊடாக அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச நாடுகள் தங்கள் அரசியல்-பொருளாதார நலன்களுக்கான விடைகளை தேடுகின்றனர் என்பதையே இங்கு அறியக்கூடியதாக உள்ளது.

மகிந்த ராஜபக்ஷ அர சாங்கத்தை பதவி கவிழ்த்து புதிய அரசாங்கம் ஒன்றை உருவாக்கினால் இலங்கை யில் அமைதி ஏற்படும் எனக் கூறுவதை, அல்லது அந்த எதிர்பார்ப்புடன் செயற்படுவது ஏற்புடையதல்ல. எந்தக் கட்சி ஆட்சி அமைத்தாலும் வடக்கு கிழக்கில் தற்போது உள்ள இராணுவ நிலைமை களில் மாற்றம் ஏற்படாது என்பதை பிரதான அரசியல் கட்சிகள் வெளிப்படுத் தியுள்ளன.

வடபகுதியில் இருந்து இராணுவ முகாம்களை அகற்ற முடியாது என ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த உறுப்பினர் சஜித் பிரேமதாச தேர்தல் பிரசாரம் ஒன்றில் கூறியிருந்தார். ஜே.வி.பி. யும் அவ்வாறான கருத்தையே கொண்டிருக் கின்றது. படைகளை சர்வதேச அரங்கில் காட்டிக் கொடுக்க மாட்டோம் என்று பிரதான கட்சிகள் கூறுகின்றன.

ஆகவே, ஆட்சிமாற்றம் என்பது அமெரிக்கா உள் ளிட்ட சர்வதேச நாடுகளுக்கு அரசியல் பொருளாதார நலன்களை ஏற்படுத்தலாம். சிங்கள மக்களுக்கு ஒரு மாற்றத்தைக் கொடுக்கலாம். ஆனால் தமிழ் மக்களுக்கு அதனால் ஒன்றுமில்லை.

**- அ. நிக்ஸன்**

## துபாயில் பனிப் பூங்கா!



பனிச்சறுக்கு விளையாட்டு, பனிப் பூங்கா... அதுவும் துபாயில் என்றால் யாருமே நம்பமாட்டார்கள். கொளுத்தும் பாலை வெயிலில் பனியாவது, சறுக்காவது என்றுதான் கேட்பார்கள்.

ஆனால், உண்மை. துபாயில் ஒரு பெரிய்ய... விற்பனை மையம் உள்ளது. பெயர்: Mall of the Emirates. அங்குதான் இந்தப் பனிச்சறுக்குப் பூங்கா உள்ளது. இந்தப் பூங்காவின் உயரம் 280 அடி. அதாவது 25 மாடிக்கட்டடம் ஒன்றின் உயரம். பரப்பளவு 22 ஆயிரத்து 500 சதுர அடி. இங்கு 5 பனிச்சறுக்குகள் உள்ளன. 60 அடி உயரத்திலிருந்து 40 மீற்றர் வரை சறுக்கிக் கொண்டே செல்லலாம்.

வெப்ப பூமியான துபாயில் பனிச்சறுக்குப் பூங்கா அமைத்திருப்பதுதான் ஆச்சரியம்!

இந்த 22,500 ச.அடி பரப்பளவு உள்ள இடம் முழுக்க... -08 பாகை செல்சியஸ் வெப்பநிலை இருக்கும்படி, ஆண்டு முழுவதும்... இரவு, பகல் எந்நேரமும் இருக்கும்படி பார்த்துக் கொள்கிறார்கள்.

மின்வெட்டு ஏற்பட்டால் பனிச்சறுக்குப் பூங்கா, நீச்சல் குளமாக மாறிவிடாதா? என்று கேட்காதீர்கள்.



# உலகம் சுற்றும் வாலிபன்

தமிழ்த் திரைப்பட உலகில், வரலாறு படைத்த திரைப்படங்களில் ஒன்று, உலகம் சுற்றும் வாலிபன். நடிகர், இயக்குநர், தயாரிப்பாளர் என முப்பெரும் பரிமாணங்களில் எம்.ஜி.ஆரால் உருவாக்கப்பட்ட படம்.

சுமார், 40 ஆண்டுகளுக்கு முன், ஜப்பான் தலைநகர் டோக்கியோ, பாங்கொக் மற்றும் சிங்கப்பூர் என, தென் கிழக்காசிய நாடுகளில் நடந்த உலகம் சுற்றும் வாலிபன் படப்பிடிப்பு அனுபவங்களை, “திரை கடலோடித் திரைப்படம் எடுத்தோம்” எனும் தலைப்பில் “பொம்மை” இதழில், எம்.ஜி.ஆர். தொடராக எழுதியிருந்தார். அதிலிருந்து ஒரு பகுதி....

“உலகம் சுற்றும் வாலிபன் படத்துக்காக, ஜப்பானுக்கு பயணமான அன்று, விமான நிலையத்தில் அன்புத் தோழர்களின் நெரிசல் இருக்கும் என்று நினைத்து, வீட்டிலேயே வழியனுப்ப வந்திருந்த நண்பர்களிடம், மாலை, மரியாதையை ஏற்று, ஆசி பெற்றுக் கொண்டேன்.

எந்த வித தொழில் தொடர்பு இல்லாவிடினும், என் மீது உடன்பிறப்பு போன்ற பாச உணர்வு காட்டி, எப்போதும் தனித்தன்மை வாய்ந்த அன்புணர்வோடு பழகும் என்.டி.ராமராவ், என் வீட்டிற்கு வந்து மாலை அணிவித்து வாழ்த்தினார்.

இயக்குநர்கள் கிருஷ்ணன், பஞ்சு, இருவரும் மாலைகளை அணிவித்து, வாழ்த்தினர். கிருஷ்ணன் அதிகமாகப் பேச மாட்டார். அப்படி ஏதாவது பேசினால், அது, ஊக்கம் தருவதாக இருக்கும். “கொஞ்சங் கூடப் பயப்படாதீங்க. ரொம்ப நல்லாப் படம் எடுத்துக்கிட்டு வருவீங்க...” என்று கூறினார் கிருஷ்ணன். வீட்டிற்கே வந்து வாழ்த்தினார் இயக்குனர் பந்துலு.

நாகேஷ்“ம் வீட்டிற்கே வந்து விட்டார். அவரோடு, அவருடைய நெருங்கிய நண்பர், நடிகர், ஸ்ரீகாந்த்தும் வந்திருந்தார்.

ஸ்ரீகாந்த் தனியாக என்னிடம், என் கையைப் பிடித்து கண் கலங்கியவாறு, “நாகேஷை உங்க கிட்டே ஒப்படைக்கிறேன். நீங்க தான் உங்க தம்பி போலப் பாத்துக்கணும்...” என்றவர், “அவன் நல்ல நடிகன் ஆனா, ஒண்ணும் தெரியாதவன், நல்லவன்...” என்றார்.

இதை அவர் சொல்வதற்குள்ளே, என் மனதில் ஓடிய எண்ணங்கள் தான் எத்தனை, எத்தனை! நான் வயது முதிர்ந்த பின்பும் கூட, என் தாயார், பிறரிடம் என்னைச் சிறு குழந்தையாக பாவித்து, ஒப்படைப்பார்.

அந்த அன்புத் தாயுள்ளத்திற்கும், இந்த நண்பரின் அன்புள்ளத்திற்கும் வித்தியாசம் காண முடியவில்லை! இதைப்பற்றி நினைத்தவாறே, அவர் தொடர்வதற்கு வாய்ப்புக் கொடுக்காமல், “கொஞ்சங்கூடக் கவலைப்படாதீங்க, நான் இருக்கேன் பாத்துக்குறேன்...” என்று கூறினேன்.

இப்படி உணர்ச்சி குவியலாக இருந்த நாங்கள், விமான நிலையத்துக்கு புறப்பட்டோம்.

விமான நிலையத்திற்குச் செல்லும் பாதையில், என் மீது பற்றும், பாசமும் கொண்ட பொதுமக்களும், அன்புத் தோழர்களும் கொடிகள், தோரணங்களைக் கட்டி, மாலைகளோடு காத்திருப்பதைக் கண்டேன்.

நாகேஷ், அசோகன், மூன்று கதா நாயகிகள் (சந்திரகலா, மஞ்சுளா, லதா), நான் உட்பட எல்லோருக்கும் எந்த வித்தியாசமும் இல்லாமல், வாழ்த்துடன், மாலைகளும் தந்தனர் மக்கள்.

விமான நிலையத்தில் கலையுலகப் பிரமுகர்களும், நண்பர் ஜெமினிகணேசன் முதலானவர்களும் மாலை அணிவித்தனர். அப்போது, கருணாநிதி வந்தார் மாலையை என் கழுத்தில் அணிவித்தார். நான் உணர்ச்சிவசப் பட்டிருந்தபோதே, அவர் அதிகாரிகளிடம், வண்டியை நேராக விமானத்திற்கு அருகில் கொண்டு செல்லும்படி கட்டளையிட்டார். வண்டி நகர்ந்தது.

விமானத்தின் உள்ளே சென்று, உட்கார்ந்தேன். திடீரென வெளியே இருந்து, பொலிஸ் அதிகாரிகள் சிலர், விமானத்திற்குள் வந்தனர். அவர்களின் பின்னால் மீண்டும் கருணாநிதி வந்தார். மறுபடியும், அவரது கரம், என் கழுத்தில், மாலையைச் சூட்டியது; என்னை ஆரத்தழுவினார்.

நான் ஏழு வயதுப் பையனாக இருக்கும்போது, என் தாயிடமிருந்து முதன் முதலாகப் பிரிந்து, நாடகக் கம்பனியில் சேருவதற்காகப் புறப்பட்ட நாளன்று, வாயிற்படி வரை, நாங்கள் (நானும் என் சகோதரரும்) வருவதும், உடனே ஓடி, கூடத்தில் அழுதபடி உட்கார்ந்திருந்த தாயைக் கட்டி அணைத்து அழுவதும், எங்களைப் பெரியவர்கள் ஆறுதல் கூறி அழைத்துச் செல்வதும், வாயிற்படியைத் தாண்டும் போது, மீண்டும் ஓடி, தாயை கட்டிக்கொண்டு, “ஓ”வெனக் கதறியழுவதுமாயிருந்த அந்தக் காட்சியை, இது, இப்போது நினைவுறுத்தியது.

மனதிலிருந்த பெரும் பாரம் இறக்கி வைக்கப்பட்டது போன்ற உணர்வு; ஒரு பெருமூச்சு! அது, எத்தனை பேர் என்னைக் கவனிக்குமாறு செய்து விட்டது.

## அவன் அப்பாவின் கனவும் அதுதான்!

- யுவகிருஷ்ணா -



2006 டிசம்பர்.விராத் கோஹ்லி டில்லி அணிக்காக ரஞ்சி கோப்பையில் விளையாட முதன்முறையாக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். முந்தைய நாள் ஆட்டத்தின் கடைசியில் நைட் பேட்ஸ்மனாக களமிறங்கியிருந்தார். ஹோட்டல் அறைக்கு அதிகாலை மூன்று மணிக்கு போன் வருகிறது. படுத்த படுக்கையாய் இருந்த அப்பா பிரேம் கோஹ்லி மரணம்.

மறுநாள் களத்தில் மட்டையை பிடிப்பதா அல்லது அப்பாவின் இறுதிச்சடங்குகளுக்காக ஊருக்குப் போவதா என்று குழப்பம். ஆஸ்திரேலியாவில் இருந்த தன்னுடைய பயிற்சியாளரை தொடர்பு கொள்கிறார்.

‘முதன்முறையாக தேசிய அளவில் விளையாடுகிறாய். இங்கே எப்படி விளையாடுகிறாய் என்பதைப் பொறுத்துத் தான் விளையாட்டில் உன் எதிர்காலம். ஆனாலும் நீ என்ன செய்யவேண்டும் என்பதை நீதான் முடிவெடுக்க வேண்டும்’ என்கிறார்.

மறுநாள் ஊருக்குப் போகாமல் விளையாடுகிறார் கோஹ்லி. தொண்ணூறு ஓட்டங்கள். கோஹ்லி எடுத்த ஓட்டங்கள் காரணமாகத்தான் டில்லி அணி அன்று / பாலோ–ஆனை தவிர்த்தது. ஒரு விளையாட்டு வீரனாக தன்னுடைய கடமையைச் செய்து முடித்துவிட்டு, குடும்பக் கடமையை செய்ய விரைந்தார். அப்போது விராத் கோஹ்லியின் வயது பதினெட்டுதான்.

விராத்தின் அம்மா சொல்கிறார்.

‘அன்றிலிருந்து அவன் மொத்தமாக மாறிவிட்டான். அதுவரை குழந்தையாக இருந்தவன் ரொம்ப பெரிய மனுஷத்தனமாக யோசிக்கத் தொடங்கினான். ஒவ்வொரு போட்டியையும் மறக்க முடியாத அந்த ரஞ்சி போட்டியாக நினைத்துத்தான் விளையாடுகிறான். என்றாலும் அவனிடம் விளையாட்டுத்தனம் கொஞ்சமும் இல்லை. களத்தில் இறங்காமல் பந்து பொறுக்கிப் போடுவதோ, கூல்டிரிங்ஸ் எடுத்துக் கொண்டு ஓடுவதோ அவனுக்கு கொஞ்சமும் பிடிக்காத வேலை. அப்போதிலிருந்து கிரிக்கெட் மட்டும்தான் அவனது உலகம். அவனுடைய கனவுகளை நோக்கி சலிக்காமல், ஓய்வெடுக்காமல் ஓடிக்கொண்டே இருக்கிறான். அவனுடைய அப்பாவின் கனவும் அதுதான் என்பதால்’


ஒவ்வொரு மகத்தான வெற்றியாளருக்குப் பின்னாலும் இம்மாதிரி உணர்வுபூர்வமான நிஜக்கதை கட்டாயம் இருக்கிறது.

# அறிவியலும் பழந்தமிழ்ப் பாடல்களும்

– பி.ஏ.கிருஷ்ணன் – (1)

கலிலியோ கோபுரம் ஒன்றில் மேலிருந்து வெவ்வேறு எடைகள் கொண்ட பொருட்களை ஒரே நேரத்தில் கீழே போட்டு அவை ஒரே சமயத்தில் தரையை வந்தடைகின்றன என்பதை நிறுவிய சம்பவம் அனைவரும் அறிந்ததே. கலிலியோவின் கூற்று உடனடியாக எல்லோராலும் ஒப்புக் கொள்ளப் படவில்லை. அவரது கூற்று தவறு அரிஸ்டோட்டில்தான் சரி என்பதை நிறுவுவதற்காக பேராசிரியர் ஒருவர் பைசா கோபுரத்தின் உச்சியிலிருந்து வெவ்வேறு எடைகள் உள்ள பொருட்களை கீழே போட்டார். அவை கிட்டத்தட்ட ஒரே சமயத்தில் தரையை வந்தடைந்தன என்றாலும் எடை குறைவான பொருள் தரையைச் சேர்வதற்கு ஓரிரு தருணங்கள் அதிகம் தேவைப்பட்டது (பின்னால் இதற்குக் காரணம் காற்றினால் ஏற்படும் உராய்வினால் என்பது தெரிந்தது). பேராசிரியர், கலிலியோ பெருந்தவறு செய்து விட்டார், அரிஸ்டோட்டில்தான் சரி என்று வாதிட்டார். இதற்கு கலிலியோ அளித்த பதில் புகழ் பெற்றது. க்ரிபின் தனது புத்தகத்தில் அதைக் குறிப்பிடுகிறார்:

“அரிஸ்ரோட்டில் நூறு இறாத்தல் எடையுள்ள பொருள் நூறு க்யூபிட் (ஒரு க்யூபிட் = 45.72 சென்ரிமீற்றர்) உயரத்திலிருந்து தரையை அடையும் போது ஒரு இறாத்தல் எடையுள்ள பொருள் ஒரு க்யூபிட்டைத்தான் தாண்டியிருக்கும் என்று சொல்கிறார். நான் இரண்டும் ஒரே சமயத்தில் தரையை அடையும் என்று சொல்கிறேன். நீங்கள் சோதனை செய்து ஒரு இறாத்தல் எடையுள்ள பொருள் இரண்டு அங்குலங்கள் பின்னால் இருக்கிறது என்று கண்டுபிடித்திருக்கிறீர்கள். இந்த இரண்டு அங்குலங்களுக்குப் பின்னால் அரிஸ்ரோட்டிலின் தொண்ணூற்று ஒன்பது க்யூபிட்களை மறைத்து, என்னுடைய சிறிய தவறைப் பற்றிப்பேசி அரிஸ்ரோட்டிலின் பெரிய தவறைக் குறித்து மௌனம் காக்கிறீர்கள்.”



A. Galileo's Leaning Tower of Pisa Experiment

இந்தச் சம்பவம் முக்கியமான ஒன்றை உணர்த்துகிறது. எந்தக் கூற்றும், யார் சொன்னதாக இருந்தாலும், சோதனைக்கு உள்ளாக்கப்பட வேண்டும். சோதனையின் முடிவை - அது நாம் எதிர்பார்த்ததற்கு எதிர்மாறாக இருந்தாலும் - ஏற்றுக் கொள்ள வேண்டும். இந்த எளிய கோட்பாடு மனித குலத்திற்குப் பிடிபடுவதற்கு பல நூற்றாண்டுகள் எடுத்தன.

நமது நக்கீரர் கதையை எடுத்துக் கொள்ளுங்கள். அவர் சொன்னதுதான் சரி. கூந்தலுக்கு இயற்கை மணம் கிடையாது. ஆனால் நக்கீரரால் சோதனை செய்து பார்த்து விடலாம் என்று சொல்லத் தோன்றவில்லை. ஏனென்றால் சோதனைகள் செய்து கூற்றுகளை நிறுவ முடியும் என்பது அவருக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

எனவேதான் அறிவியல் என்று நாம் இன்று சொல்வது கலிலியோ காலத்தில் இருந்து பிறந்தது என்கிறோம்.

அறிவியல் என்பது கோட்பாடு சோதனை, கண்டறிதல் இம்மூன்றையும் உள்ளடக்கிய செயற்பாடாக உருவாகி வந்துள்ளது. இந்தச் செயற்பாட்டில் ஒரு சுழற்சி முறையுள்ளது. இது முடிவுறாச் சுழற்படிக்கட்டுகளைப் போல, இயற்கையைப் பற்றித் தெளிவான புரிதல்களை நோக்கிச் சென்று கொண்டே இருக்கும். படிகளில் பயணம் செல்லும் போது எதிர்பாராத திருப்பங்களும் இடர்களும் ஏற்படலாம்.

அறிவியலின் வரலாறு பல பொய்யான கோட்பாடுகளையும், தவறான கோட்பாடுகளையும் பிழையான கண்டறிதல்களையும் பார்த்திருக்கிறது. இதை ஒப்புக்கொள்பவர்களில் முதலாவதாக விஞ்ஞானிகள் இருப்பார்கள். அறிவியலால் எல்லாப் பதில்களையும் சொல்ல முடியாது என்பதில் அவர்கள் தெளிவாக இருப்பார்கள். மாறாக படிகளில் ஏற, ஏற புதிய கேள்விகள் எழும் என்பதையும் அவர்கள் அறிந்திருப்பார்கள்.

ஆக அறிவியல் என்பது என்ன?

ஓர் அறிவியல் கோட்பாடு தனது அடிப்படைத் துணிபுகளை தெளிவாக முன் வைக்க வேண்டும். இந்தத் துணிபுகள் அன்றைய அறிவியல் ஆதாரங்களோடு ஒத்துப் போவதாக அமைய வேண்டும். இவற்றை அடிப்படையாகக் கொண்டே தர்க்க பூர்வமான வாதங்களை முன் வைக்க வேண்டும். இந்தக் கோட்பாடு ஏற்கனவே சொன்னவற்றை வேறு வார்த்தைகளில் கூறுவதாகவோ. ஒவ்வொரு நிரூபணத்தின் போதும் தனது அடிப்படைக் கொள்கைகளை மாற்றிக் கொள்வதாகவும் இருக்கக் கூடாது. அதன் துணிபுகள் தனித்துவம் வாய்ந்ததாக இருக்க வேண்டும்.


(தொடரும்)



# கரவெட்டி விக்னேஸ்வராக்கல்லூரியும் அதன் தனிப்பெரும் சிறப்பும்


தென்மராட்சி மணியகாரராக செயலாற்றிய கரவெட்டி பெருங்குடி மகனான இராசவாசல் முதலியார் உயர்திரு வீரவாகு சிற்றம்பலத்தினால் 1917ஆம் ஆண்டு இக்கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டது. அன்றைய சூழ்நிலையில் ஆங்கிலஅறிவு மிகவும் அவசியமாகத் தேவைப்பட்டது. கரவெட்டியிலும் அதனை அடுத்துள்ள கிராமங்களிலும் ஆங்கிலம் போதிக்கும் பாடசாலைகள் எதுவும் இல்லாமையினால் அம்முக்கிய தேவையை நிறைவேற்றுவதற்கு சின்னத்தம்பி முதலியார் பெருமனதுடன் முன்வந்தார்.மாணிக்கவாசகர் வித்தியாலயத்தில் இருந்து சில மாணவர்களையும் மூன்று ஆசிரியர்களையும் கொண்டு கரவெட்டி மேற்கு, நெல்லியடி வெல்லன்கிராய் வீதியில் நுகவில் வயலுக்கு கிழக்குப் பக்கத்தில் கிடுகுக் கொட்டகையுடன் பாடசாலை ஆரம்பமானது. கதிரித்தம்பி கிருஸ்ணபிள்ளை அதிபராகவும், வல்லிபுரம் மயில்வாகனம் முகாமையாளராகவும் நியமனம் பெற்றனர். இவ்வாறாக ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை 1917.10.06இல் மூன்று வகுப்பறைகளைக்கொண்ட நிரந்தரக்கட்டடத்தைக் கொண்டதாக மாற்றம் பெற்றது.

1960இல் ஆய்வுகூடவசதிகள் போதாமை காரணமாக க.பொ.த. உயர்தரம் (விஞ்ஞானம்) வகுப்புகளை நடாத்த முடியாத நிலை ஏற்பட்டது. 1964இல் தகுதி வாய்ந்த ஆசிரியர் பற்றாக்குறை


2014 இல்ல மெய்வல்லுனர் திறனாய்வு நிகழ்வு.

ஏற்பட்டதனால் க.பொ.த.உயர்தரம் (கலை) வகுப்புகளை நடாத்த முடியாத நிலை ஏற்பட்டது. 1972இல் அதிபர் பொன் கணேசனின் முயற்சியினால் அருகாமையிலுள்ள கரவெட்டி மேற்கு றோமன் கத்தோலிக்க பாடசாலை இக்கல்லூரியுடன் இணைக்கப்பட்டு அப்பாடசாலையின் ஆசிரியர்களும் மாணவர்களும் விக்னேஸ்வராக் கல்லூரியின் ஆசிரியர்களும் மாணவர்களுமாயினர். பாலர்பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. 1977இல் அதிபர் எஸ்.நமசிவாயம், பாடசாலை அபிவிருத்திச்சபை, பழைய மாணவரும் வெளிநாட்டு உதவித்திணைக்கள கணக்காளருமான எஸ்.வேலாயுதம் ஆகியோரின் பெருமுயற்சியினால் க.பொ.த.உயர்தர கலை, வர்த்தக, விஞ்ஞான வகுப்புகள் மீளவும் கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்டன.

1980இல் க.சிவபாதசுந்தரம் அதிபராகக் கடமையேற்ற பின் கல்லூரி சகல துறைகளிலும் துரித முன்னேற்றம் கண்டது. புல்கலைக்கழகத்திற்கு விஞ்ஞானபீடம், கலைப்பீடம், வர்த்தகபீடம் ஆகியவற்றிற்கு மாணவர்கள் ஒவ்வொரு வருடமும் தெரிவாகினர். இவர் சகல விளையாட்டுத் துறைகளின் நுட்பங்களையும் நன்கு


பரிசளிப்பு விழா நிகழ்வில்...

கற்றுத்தேர்ந்தவராகவும், ஆர்வமுடையவராகவும், இருந்தபடியால் கல்லூரியில் மாணவர்களிடையே விளையாட்டுத்துறையில் மிகுந்த ஆர்வத்தையும் புகுத்தினார். இவர் தனது அதிபருக்குரிய பொறுப்புக்களோடு கல்லூரியில் முழுநேர ஆசிரியராக விலங்கியலையும், ஆங்கிலத்தையும் திறமையாகக் கற்பித்தவர். இவர் காலத்தில் மாணவர் ஆசிரியர் எண்ணிக்கை இருமடங்காக அதிகரித்ததோடு, கட்டட வளர்ச்சித்துறையிலும் மற்றும் தேவைகளைப் பூர்த்தி செய்வதிலும் நிறைவு கண்டு கல்லூரி துரித வளர்ச்சியை எய்தியது, தொடர்ந்து அதிபர்கள் வரிசையில் வி.செல்வராஜா, க.அம்பலவாணார், வே.சிவசிதம்பரம் போன்ற அதிபர்கள் தமது நிர்வாகத்திறனாலும் அயரா உழைப்பினாலும் கல்லூரியின் தரத்தையும் புகழையும் மேலும் ஓங்கச் செய்து இன்று இந்தக் கல்லூரி வடமராட்சிப் பகுதியில் ஒரு சிறந்த 1AB பாடசாலையாக விளங்க வழிவகுத்துள்ளார்கள்.

மேலும் இன்றைய அதிபர் வே.சிவசிதம்பரத்தின் காலத்தில் இசுறு பாடசாலைத்திட்டத்தின் கீழ் உள்வாங்கபட்டது ஒரு முக்கிய மாற்றமாகும். இதன் பயனாக பாடசாலைக் கட்டமைப்பிலும் பௌதீக வள விருத்தியிலும் துரித மாற்றங்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. பாடசாலைக் கட்டமைப்பைப் பொறுத்தவரை ஆரம்பப்பிரிவு வேறாக்கப்பட்டு தனியான நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டு யா/விக்னேஸ்வரா ஆரம்ப பாடசாலை என்ற பெயரில் இயங்க வழிவகுக்கப்பட்டுள்ளது.

**பௌதீக வளங்கள்**


ஆரம்பகாலத்தில் கிடுகுக்கொட்டகையுடன் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை இன்று பல மாடிக் கட்டடங்களைக் கொண்டதாய் நிமிர்ந்து நிற்கின்றது. இவ்வளர்ச்சிக்கு காரணகர்த்தாக்களாய் இருந்தவர்கள் பலர். பழையமாணவர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், கல்வித்திணைக்களத்தினர், அரசசார்பற்ற நிறுவன அமைப்புக்கள் எனக் கூறிக் கொண்டே போகலாம்.


ஆசிரியர் தின விழாவின் விருந்தினர்கள் வரவேற்பு...


பரிசளிப்பு விழாவின் போது பான்ட் வாத்திய அணியினர்


ஆசிரியர் தின விழாவின் விருந்தினர்கள் வரவேற்பு...


பாடசாலை நிர்வாகம்சார் ஆளணிகள்


பரிசளிப்பு விழா நிகழ்வில்...

# ஊடகவியலாளர் மீதான தாக்குதலை கண்டிக்கிறோம்

## வவுனியா தமிழ் ஊடகவியலாளர் சங்கம்

(வவுனியா)

இலங்கையின் வடபுலத்தில் பல்வேறான இடர்பாடுகளுக்கு மத்தியில் இருந்து அயராமல் உழைக்கும் ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்களை வன்மையாகக் கண்டிப்பதாக வவுனியா தமிழ் ஊடகவியலாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

ஊடகவியலாளர் சிவஞானம் செல்வதீபன் மீதான தாக்குதலைக் கண்டித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யுத்தத்திற்கு பின்னரான காலத்தில் இலங்கையில் இடம்பெற்று வரும் பல்வேறான சமூகத்திற்கு மாறான செயற்பாடுகளை வெளியுலகிற்கு துணிவுடன் வெளிக்கொணர்ந்தும் அதற்கான தீர்வுகளை பெறுவதற்கு தளமாகவுமுள்ள ஊடகவியலாளாகள் பல்வேறு சந்தர்ப்பங்களில் தாக்கப்பட்டு வருவதனை ஏற்றுக்கொள்ளமுடியாது.

ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்களின் பின்னணியில் உள்ளவகள் நீதியின் முன் நிறுத்தப்படுவது என்பது எட்டாக்கனியாகவே இருக்கின்றது. இந்த நிலையில் தொடர்ச்சியாக ஊடகவியலாளர்களின் மீதான தாக்குதல்கள் நடாத்தப்பட்டு வருகின்றமை ஜனநாயகத்தின் மீதான ஐயப்பாடுடைய கேள்விக்கு வலுச்சேர்க்கின்றது.

சித்திரைப் புத்தாண்டு தினத்தன்று யாழ். வடமராட்சியில் வைத்து தாக்கப்பட்ட எமது சக ஊடகவியலாளன் சிவஞானம் செல்வதீபன் மீதான தாக்குதலுக்கு காரணமானவர்கள் உடன் கண்டுபிடிக்கப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்படவேண்டும். அத்துடன் இலங்கையில் உள்ள ஊடகவியலாளர்கள் தமது தொழிலை தங்கு தடையின்றி மேற்கொள்ளக் கூடிய சூழல் உருவாக்கப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்த விரும்புகிறோம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தேங்கிக் கிடக்கும் குப்பைகள் சுகாதாரத்திற்கு பங்கம்



(கரணவாய்)

கரவெட்டி தெற்கு மேற்கு பிரதேச சபையின் பொதுச் சந்தையில் வெற்றிலைக் கடைகளை சூழவுள்ள பகுதி சுகாதாரத்துக்கு ஒவ்வாத நிலையில் காணப்படுவதாக நுகர்வோரால் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

இக்கடைகளைச் சூழவுள்ள பகுதியில் குப்பைகள் நிறைந்து காணப்படுவதுடன் துர்நாற்றமும் வீசுவதாகவும் இதனால் கடைகளுக்கு வரும் நுகர்வோர் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை தேங்கி கிடக்கும் குப்பைகளால் இலையான்களின் பெருக்கமும் அதிகரித்துள்ளதாகவும் இவை தொற்று நோய ஏற்படுவதற்கு வாய்ப்பாக அமைவதாகவும் இதனால் இங்கு வியாபாரத்தை மேற்கொள்ளும் வியாபாரிகளும் மற்றும் பொது மக்களும் அசௌகரியங்களுக்கு உள்ளாவதாக தெரிவிக்கின்றனர். எனவே இதனை அகற்றுவதற்கு பிரதேச சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என நுகர்வோரும் வியாபாரிகளும் கோரிக்கை விடுக்கின்றனர். (18)

வெள்ளி நற்சிந்தனை...

# குறியீட்டினால் காட்டும் நிலை

ஏதேனும்ஒன்றினை நேரடியாக அன்றி, மறைமுகமாகவும் வேறொரு ஊடு பொருள் வாயிலாகவும் குறிப்பிடும் வெளியீட்டு முறையைக் குறியீட்டியல் என விளக்கலாம்.

நம்முடைய தேவார முதலிகளும் சில காரணங்களுக்காக குறியீடுகளை அமைத்துள்ளனர். திருஞானசம்பந்தப்பெருமானின் தேவாரங்களில் குறியீடுகள் அதிகளவில் காணப்படுகின்றன.

இல்லறத்தின் வழி இறைவனை அடையலாம் என்பதனை உமையொருபாகன் என்று குறியீடு செய்துள்ளார். இவ்வாறு இறைவனின் பேராற்றலை உணர்த்துவதற்கு புலித்தோலாடை அணிதல், யானை உரிமைப் போர்வையாகப் போர்த்தல், பாம்பினை அணிகலனாக அணிதல் என்பவற்றைக் குறிப்பிடலாம். இறைவனின் அருளை விளக்குவதற்கு தேவர்களைக் காக்க நஞ்சுண்ணுதல், தன்னிடம் அடைக்கலம் புகுந்த சந்திரனைக் காத்தல் என்பதனையும் வாழ்க்கையின் நிலையாமையினை உயிர்களுக்கு உணர்தித் தன்னை அடைய வழிவகுத்தலை வெண்ணீறணிந்த கோலத்தனாக இருத்தல், சுடுகாட்டில் ஆடுதல் போன்றவற்றை குறியீடாகக் காட்டிச் செல்கிறார்.

சைவர்கள் இல்லறத்தின் வழி இறைவனை அடைதலையே தம் சமய நெறியாகக் கொண்டனர். இல்லறத்தை வெறுத்து துறவறத்தைப் போற்றியவர்களை வீழ்த்த துறவறத்திற்கு எதிராக இல்லறத்தைச் சிறப்பிக்க வேண்டும் அதனால் இறைவியோடு கூடிய இறைவனை உமையொருபாகத்தினன் எனக் குறியீடாக்கி விளக்குகிறார்.

இறைவனின் அருள் குறியீடுகளால் விளக்கப்படுகின்றன. தேவர்கள் திருப்பாற் கடலைக் கடைந்த போது அமுதத்திற்கு முன் ஆலகாலவிடம் தோன்றியது. இதைக்கண்டு அஞ்சிய தேவர்கள், இறைவனிடம் அடைக்கலம் புக அவன் அதனை வாரியுண்டான். அருகிலிருந்த அம்மை அஞ்சி, அவன் கழுத்தைப் பிடிக்க, நஞ்சு அங்கேயே தங்கியது. அவனுடைய கழுத்து நீலநிறமானதால் "நீலகண்டன்" ஆயினான் இறைவனின் அருள்த்தன்மையைக் குறிக்க நீலகண்டன் குறியீடாக அமைகிறது.

தன்னுடைய சாபத்தால் சந்திரன் நாளுக்கு நாள் தேய்ந்து வந்தான். மூன்றாம் பிறையாக இருந்த போது இறைவனிடம் அடைக்கலம் புகுந்தான். "இத்தனை யிஞ்சடையார்" என்னும் பகுதி மதி முடிவாகிய இறைவனின் அருளைக் குறிக்கும்.

வாழ்க்கையின் நிலையாமையினை உயிர்களுக்கு உணர்த்தி, இறைவனை அடையச் செய்த அருட் செயல்கள் குறியீடாக்கப்படுகின்றன. சுடுகாட்டில் நர்த்தனமாடி, இறந்த உடல்களின் சாம்பலை வெண்ணீறாக அணிந்து, ஒவ்வொரு வருக்கும் முடிவு ஒருபிடி சாம்பல் என்பதனைக் காட்டியுள்ளார்.

பரம்பொருளின் செயல்களை குறியீட்டினால் காட்டும் உத்தி சைவசமயத்தின் சிறந்த முறையாகும்.

**சொல்லின் செல்வர்**
**இரா.செல்வவடிவேல்**

# பதிவிறக்கப் பெட்டகம்

**எஸ்எம்எஸ் வடிவில் உலாவரும் சில துணுக்குகள்:**

கலிலியோ சிறு விளக்கில் படித்தார்...
கிரகாஹம்பெல் மெழுகுவர்த்தி வெளிச்சத்தில் படித்தார்...
ஷேக்ஸ்பியர் தெரு விளக்குகள் ஒளியில் படித்தார்...
ஒன்று மட்டும் எனக்குப் புரியவேயில்லை...
பகல்ல படிச்சா...
படிப்பு வராதா?

அவசர பொலிஸ் 100
தீயணைப்பு 101
அம்புலன்ஸ் 108
அவசர கடன் உதவி
நண்பா...
உன் செல் நம்பர

உடலைக் கெடுப்பது புகை
உறவைக் கெடுப்பது பகை
இரும்பைக் கவரும் காந்தம்
எப்போதும் வேண்டும் சாந்தம்
பெண்ணுக்கு அழகு கூந்தல்
பெருமைக்கு உரியவன் ஏந்தல்
மாட்டுக்குத் தேவை லாடம்
மனிதருக்குத் தேவை பாடம்
கடவுளுக்கு உடைப்பது தேங்காய்
கர்ப்பிணிக்குப் பிடித்தது மாங்காய்

மழை பெய்ஞ்ச
மண்ணையும்
லவ் பண்ணும் பெண்ணையும்
நம்பவே கூடாது.
ஏனென்றால்,
இரண்டுமே எப்ப
வேணுமானாலும்
வழுக்கிவிடும்.

எல்லாப் பெண்களையும் விசிலடித்துத்
திரும்பிப் பார்க்க வைத்தாலும்,
செருப்படி வாங்காத
ஒரே ஜீவன்...
குக்கர்தான்.

லூசுத்தனமாக எதையாவது அனுப்புறது உங்களுடைய
பொலிஸி ஆனால், எதையாவது ஒரு லூசுக்கு
அனுப்புறது, என்னுடைய பொலிஸி!

வேகமாக பெல் அடித்தபடி
போகிற Fire Service
வண்டி பின்னால்
கொஞ்ச தூரம்
ஓடிய குட்டிப் பையன்
சொன்னான்:
"இப்படி வேகமாப் போனால்
உங்களிட்ட யார் ஐஸ்பழம் வாங்க முடியும்?"

ஹோட்டல்லே
காசு கொடுக்கேல்ல
என்றால்
மாவாட்டச் சொல்வாங்க...
பஸ்ஸிலே காசு
கொடுக்கேல்ல என்றால்
பஸ் ஓட்டச் சொல்வாங்களா?

மா விற்கப் போனால் காத்து அடிக்குது.
உப்பு விற்கப் போனால் மழை பெய்யுது என்று
புலம்பிக்கொண்டே இருந்தால் பிரயோசனம் இல்லை.
பொலித்தீன் பையிலே போட்டு பாதுகாப்பா பிஸினஸ்
பண்ணுற வழியைப் பார்.

கண் தெரியாதவரிடம் கமெரா
காது கேட்காதவரிடம் ரேடியோ
பேச முடியாதவரிடம் மைக்
எஸ்எம்எஸ் அனுப்பத் தெரியாத
உன்னிடம் செல்போன்...
என்ன கொடுமை இது?

நண்பன் அருகில் இருந்தும்
பேச முடியவில்லை
உரிமை இருந்தும்
கேட்க முடியவில்லை
ஏனென்றால்
அது பரீட்சை மண்டபம்...
என்ன கொடுமை இது?

மொழியை உடைய நாடு – "இந்தி"யா
பாக்கி தர வேண்டிய நாடு – "பாக்கி"ஸ்தான்
வலுவான நாடு –"ஜிம்"பாப்வே
மின்சார நாடு – "சுவிட்ச்"சர்லாந்து
செய்தி வாசிக்கும் நாடு – "நியூஸ்"லாந்து
பாசமான நாடு – "தாய்"லாந்து
பசுமையான நாடு – "கிரீன்"லாந்து

தூங்குகிற சிங்கத்தை நாம தட்டி எழுப்பினாலும்
தூங்குகிற் நம்மை சிங்கம் தட்டி எழுப்பினாலும்
சங்கு நமக்குத்தான்.

பதவிக்கு வந்தால் போர்க் குதிரைகள் கூட
பொதி சுமக்கும் கழுதைகளாக மாறிவிடுகின்றன

வாழ்க்கை என்பது கால்பந்து விளையாட்டுப் போல...
ஒரு கோல் போட
10 பேர் உதவினாலும்
11 பேர் அதை
எதிர்க்கத்தான்
செய்வார்கள்.

உனக்கு என்னால் வந்த
எல்லாத் துன்பங்களுக்கும்
மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்.
இனி உன் வாழ்வில் வரவே மாட்டேன்.
இனி எல்லாம் சுகமாக அமைய
என் வாழ்த்துகள்!
இப்படிக்கு,
2013

ஆயிரம்தான் இருந்தாலும்
ஆயிரத்தொன்றுதான் பெரிசு.

## கர்ப்பிணி மனைவியை தாக்கிய கணவன், மாமி விளக்கமறியலில்

(கொடிகாமம்)

கொடிகாமம் பாலாவி பகுதியில் நிறைமாதக் கர்ப்பிணிப் பெண்ணைத் தாக்கிய அவரது கணவன் மற்றும் மாமியாரை எதிர் வரும் 21 ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் செ.கணபதிப்பிள்ளை உத்தரவிட்டார்.

மேற்படி இரு நபர்களையும் கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்த கொடிகாமம் பொலிஸார் நேற்று முன்தினம் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்திய போதே நீதவான் மேற்படி உத்தரவினைப் பிறப்பித்தார்.

குறித்த பெண் கடந்த திங்கட்கிழமை மேற்படி இருவரின் தாக்குதலுக்கு உள்ளான நிலையில் காயங்களுடன் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்நிலையில் இது தொடர்பில் வைத்தியசாலை பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் குறித்த தாக்குதல் சம்பவத்துடன், தொடர்புடைய பெண்ணின் கணவனும் மாமியாரும் கொடிகாமம் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் குறித்த பெண்ணிற்கு உறவுகள் யாரும் இல்லாத நிலையில் தனது பிரசவத்திற்காக தனது கணவர் மற்றும் மாமியாரினை பிணையில் விடுதலை செய்வதற்கு உதவி புரியும்படி வைத்தியசாலை நிர்வாகத்தினரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

## பயங்கரவாத பொதுபலசேனாவை தடை செய்ய வேண்டும் அரசாங்கம்

### கோரிக்கை விடுக்கும் அமைச்சர் வாசு



(கொழும்பு)

பொது பல சேனா அமைப்பை உடனடியாக அரசாங்கம் தடை செய்ய வேண்டும் என கோரிக்கை விடுக்கும் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, சிங்கள பௌத்தர்கள் என்ற போர்வையில் இயங்கும் பயங்கரவாத அமைப்பே பொதுபலசேனா என்றும் தெரிவித்தார்.

இது தொடர்பாக சமூக ஒருமைப்பாடு மற்றும் தேசிய மொழிகள் தொடர்பான அமைச்சர் வாசுதேவ நாணயக்கார மேலும தெரிவிக்கையில்,

சிங்கள பௌத்தர்களை பாதுகாக்கின்றோம் என்ற போர்வையில் வெளிநாடுகளிடம் பணத்தை வாங்கிக் கொண்டு ஏனைய முஸ்லிம் இந்துக்கள் கிறிஸ்தவர்களுக்கு எதிராக பயங்கரவாதத்தை இவ் அமைப்பு கட்டவிழ்த்துவிட்டுள்ளது.

அத்தோடு தமக்கு அரசதரப்பு ஆதரவு உள்ளதாக வெளிக்காட்டிக் கொண்டே அரசாங்கத்திற்கு எதிராக சதி செய்யும் நாடுகளிடம் பணத்தை வாங்கிக் கொண்டு சிறுபான்மை இன மக்களுக்கு எதிரான பயங்கரவாதத்தை கட்டவிழ்த்து விடுகின்றது.

இதனால் சர்வதேச ரீதியில் அரசாங்கம் பாரிய நெருக்கடிகளை சந்திக்க நேரிடுகினறது.

இவ் அமைப்பை பயங்கரவாத பட்டியலில் சேர்த்த TRAC அமைப்பை பற்றி எனக்கு எதுவும் தெரியாது.

ஆனால் என்னைப் பொறுத்தவரை பொதுபல சேனா ஒரு பயங்கரவாத அமைப்பாகும்.

எனவே இதனை உடனடியாக தடை செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றார் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார.

## ஊடகவியலாளருக்கு பாதுகாப்பின்மை நான்காவது இடத்தில் இலங்கை




ஊடகவியலாளர்களுக்கு எதிரான தாக்குதல்களுக்குத் தண்டனை விதிக்கப்படாத நாடுகளின பட்டியலில், இலங்கை நான்காவது இடத்தை வகிப்பதாக, சிபிஜே என்று அழைக்கப்படும் நியுயோர்க்கை தளமாகக் கொண்ட ஊடகவியலாளர்களைப் பாதுகாப்பதற்கான குழு தெரிவித்துள்ளது.

ஆண்டுதோறும் வெளியிடப்படும் இந்தப் பட்டியல், கடந்த செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, கடந்த பத்தாண்டுகளில் 100 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்ட போதும், அத்தகைய கொலைகளுக்கு காரணமானவர்கள் எவரையும் தண்டிக்க நடவடிக்கை எடுக்காத ஈராக், இந்தப் பட்டியலில் முதலிடத்தை. வகிக்கிறது.

இரண்டாவது இடத்தை சோமாலியாவும், மூன்றாவது இடத்தை பிலிப்பைன்சும் வகிக்கின்றன.

கடந்த பத்தாண்டுகளில் 9 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ள போதிலும், அவர்களில் ஒருவருடைய மரணத்துக்கும் காரணமானவர்களைத் தண்டிக்க நடவடிக்கை எடுக்காத இலங்கை இந்தப்பட்டியலில் நான்காவது இடத்தை பிடித்துள்ளது.

ஊடகவியலாளர்கள் வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்ந்ததற்கு இந்தத் தண்டனை விலக்களிப்பே காரணம் என்றும் சிபிஜே தெரிவித்துள்ளது.

## புத்தாண்டு தினத்தில் நகை, பணம் கொள்ளை

(கொடிகாமம்)



கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் புத்தாண்டு தினத்தன்று மட்டும் 82 பவுண் நகைகள் மற்றும் 1,07,000 ரூபா பணம் என்பன கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக கொடிகாமம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.கே.எதிரிசிங்க தெரிவித்தார்.

மிருசுவில் வடக்குப் பகுதியிலுள்ள வீடொன்றில் 35 பவுண் நகைகளும் 1,00,000 ரூபா பணமும், மீசாலைப் பகுதியிலுள்ள வீடொன்றில் 40 பவுண் நகைகளும், கொடிகாமம் பகுதியிலுள்ள வீடொன்றில் 7 பவுண் நகை மற்றும் 7,000 ரூபா பணம் என்பன புத்தாண்டு தினத்தன்று கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இது தொடர்பான முழுமையான விசாரணைகளினை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருவதாகவும் பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்தார்.

## பாலியல் சேவை வழங்க 14 வயது மகளை விற்ற தாய்

14 வயதான மகளை காமுகர்களுக்கு விற்று பணம் சம்பாதித்த தாய் ஒருவர் தலைமறைவாகியுள்ளார்.

கொட்டாவ பிரதேசத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

செல்வந்த வர்த்தகர்களுக்கு பாலியல் சேவை வழங்குவதற்காக சொந்த மகளை குறித்த தாய் பெருமளவு பணத்திற்கு விற்பனை செய்துள்ளார்.

நட்சத்திர ஹோட்டல்களுக்கு சிறுமியை அழைத்துச் சென்று காம இச்சைகளை பூர்த்தி செய்து கொள்வதற்காக குறித்த வர்த்தகர்கள் பெருந்தொகை பணத்தை தாய்க்கு வழங்கியுள்ளனர்.


குறித்த பெண்ணும் பாலியல் தொழிலில் ஈடுபட்டதாகவும், தாயும் மகளும் பாலியல் தொழில் மூலம் நாள் ஒன்றுக்கு 60,000 ரூபா முதல் 90,000 ரூபா வரையில் பணம் சம்பாதித்துள்ளதாகவும் பொலிஸ் விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

சம்பாதித்த பணத்தை மகளுக்கு வழங்காமையினால், முரண்பட்ட மகள் இது குறித்த தகவல்களை அம்பலப்படுத்தியுள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடைய 35 வயதான பெண் தலைமறைவாகியுள்ளார். அவரைத் தேடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## விலைகள் குறைவடைந்ததால் கால்நடை உணவாக தக்காளி

(யாழ்ப்பாணம்)



யாழ்.மாவட்ட சந்தைகளில் தக்காளிகளின் விலைகள் குறைவடைந்திருப்பதினாலும், சந்தையில் அதிகளவு நிரம்பல் காணப்படுவதினாலும் சுன்னாகம் பகுதியில் தக்காளி உற்பத்தி செய்த விவசாயிகள் அவற்றினை தங்கள் கால்நடைகளுக்கு உணவாகக்கியுள்ளனர்.

சந்தையில் தக்காளி 25 ரூபா தொடக்கம் 35 வரையிலும் விற்பனை செய்யப்படுகின்றது. இருந்தும் யாழ்ப்பாணத்தில் உற்பத்தி செய்யப்படும் மற்றும் தம்புள்ளலிருந்து கொண்டுவரப்படும் தக்காளிகள் சந்தையில் அதிகளவில் இருப்பதால் அதிகளவான நிரம்பல் ஏற்பட்டுள்ளது. இதனால் உற்பத்தியாளர்கள் தங்கள் உற்பத்திகளை விற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அத்துடன், யாழ்.மாவட்டத்தில் இருக்கும் ஜாம் மற்றும் கோடியல் யூஸ் என்பவற்றினை உற்பத்தி செய்யும் நிறுவனங்களும் சரிவர இயங்காமையினால் அங்கும் தங்கள் உற்பத்திகளை விவசாயிகளினால் விற்க முடியவில்லை.

இந்நிலையில் வறட்சியினால் உணவின்றித் தவிக்கும் தமது கால்நடைகளுக்கு உற்பத்தி செய்யும் தக்காளிகளை உணவாக்கிவருகின்றனர்.

## எலியால் வீடு எரிந்தது புதுவருடத்தன்று சம்பவம்

வரணி முள்ளாவெளிப்பகுதியில் புதுவருடப்பிறப்பன்று தனது வீட்டு சாமிப்படத்திற்காக ஏற்றிய விளக்குத்திரியை எலி தூக்கிச் சென்ற வேளை வீட்டுக் கூரையில் தீ பற்றி எரிந்து நாசமாகியது.

படத்திற்கு விளக்கு ஏற்றிவிட்டு உரிமையாளர் சமையல் வேலையில் ஈடுபட்ட வேளை திடீரென வீட்டின் ஒருபகுதி எரிந்துகொண்டிருந்தது. உடனடியாக வீட்டு உரிமையாளர் அவலக்குரல் எழுப்பியதால் அயல் வீட்டுக்காரர்கள் உதவியுடன் தீயை ஓரளவேனும் கட்டுப்படுத்த முடிந்தது இச்சம்பவத்தில் வீட்டில் உள்ள பெறுமதி மிக்க உடுபிடவைகள் தீயுடன் சங்கமித்தது. இச்சமயம் சித்திரைப் புதுவருடத்தன்று இடம்பெற்றமை அப்பகுதி மக்களிடையே சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (150)

## சிறுவர் மீதான துஷ்பிரயோகம் இணைய வழி மூலம் அதிகரிப்பு

(கொழும்பு)

இணைய வழி ஊடான சிறுவர் துஷ்பிரயோகம் அதிகரித்துச் செல்வதாக சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

சமூக வலைத்தளங்கள் மூலம் சிறுவர் துஷ்பிரயோகம் இடம்பெற்று வருவதாக சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் அனோமா திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

புதிய தொழிநுட்ப வளர்ச்சியால் மாணவர்கள் இணைய புழக்கத்தில் அதிக நாட்டம் காட்டுவதாகவும் இதனைப் பயன்படுத்தி சிலர் சூட்சுமமான முறையில் சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டு வருவதாகவும் அனோமா திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

இதனால் பிள்ளைகளின் செயற்பாடுகள் குறித்து பெற்றோர் அதிக கவனம் செலுத்த வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

முகநூல் (facebook) மூலம் சிறுவர் துஷ்பிரயோகம் அதிகரித்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.


இது தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டை அடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஆக்கப்பொருட் கண்காட்சி

தொண்டைமானாறு வளர்மதி முன்பள்ளி மாணவர்களின் ஆக்கப்பொருட்காட்சி முன்பள்ளி மண்டபத்தில் தொண்டைமானாறு நற்பணிமன்றத் தலைவர் என்.இராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது.

தொண்டமானாறு வீரகத்திப் பிள்ளை மகாவித்தியாலய அதிபர் ஆர்.ஸ்ரீநடராஜா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பொருட்காட்சியை திறந்து வைத்தார்.

விநாயகர் சனசமூக நிலையத் தலைவர் ரீ.இராஜசிங்கம் சமாதான நீதவான் வி.அரியராசா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். (01)



# க.பொ.த. (சா/த) மாணவர்களுக்கான தமிழ் இலக்கணம் - புணரியல்

### புணர்ச்சி பற்றிய விளக்கம்

இலக்கணத்தில் புணர்ச்சி என்பது சொற்கள் அல்லது சொல்லின் உறுப்புகள் பொருள்தரும் வகையில் ஒன்றுடன் ஒன்று இணைந்து வருவதைக் குறிக்கும்.

நாங்கள் மரத்தை வெட்டினோம் ஆகிய மூன்று சொற்களும் ஒன்றை அடுத்து மற்றது இணைந்து வந்து பொருள்தரும் வாக்கியமாகின்றன.நாங்கள் என்ற சொல்லில் நாம், கள் ஆகிய இரண்டு உறுப்புக்கள் ஒன்றோடு ஒன்று இணைந்து வந்து பொருள் தருகின்றன. மரத்தை என்ற சொல்லின் மரம், அத்து, ஐ ஆகிய மூன்று உறுப்புக்கள் ஒன்றோடு ஒன்று இணைந்து வந்து பொருள் தருகின்றன வெட்டினோம் என்ற சொல்லில், வெட்டு, இன், ஓம், ஆகிய மூன்று உறுப்புக்கள் இணைந்து வந்து பொருள் தருகின்றன.இதனைப் பின்வருமாறு விளக்கலாம்:-

நாம் + கள் + மரம் + அத்து + ஐ + வெட்டு + இன் + ஓம்

நாங்கள் + மரத்தை + வெட்டினோம்

நாங்கள் மரத்தை வெட்டினோம்

இவ்வாற சொல்லின் உறுப்புக்கள் அல்லது சொற்கள் பொருள் தரும் வகையில் ஒன்றோடு ஒன்று இணைந்து வருவதே புணர்ச்சி எனப்படும்.

### புணர்ச்சி வகைகள்

#### அகப்புணர்ச்ச

ஒரு சொல்லின் உறுப்புக்கள் சேர்ந்து ஒரு சொல்லாக அமைவது அகப்புணர்ச்சி எனப்படும்.

நாம் + கள் → நாங்கள் மரம் + அத்து + ஐ → மரத்தை

வெட்டு + இன் + ஓம் → வெட்டினோம்

இவ்வாறு இரண்டு அல்லது பல சொல் உறுப்புக்கள் சேர்ந்து ஒரு சொல்லாக அமைவது அகப்புணர்ச்சியாகும். நாங்கள் என்ற சொல்லில் நாம் கள் என்னும் இரண்டு உறுப்புகள் உள்ளன. மரத்தை என்ற சொல்லில் மரம் அத்து ஐ ஆகி மூன்று உறுப்புக்கள் உள்ளன. அவ்வாறே, வெட்டினோம் என்ற சொல்லிலும் வெட்டு இன் ஓம் ஆகிய மூன்று உறுப்புகள் உள்ளன.

#### புறப்புணர்ச்சி

இரண்டு அல்லது பல சொற்கள் ஒன்றோடு ஒன்று இணைந்து சொற்தொடர் ளாகவோ, வாக்கியமாகவோ வருவது புறப்புணர்ச்சி எனப்படும்.

**நாங்கள் மரத்தை வெட்டினோம் அவன் ஓடிப் போனான்**

**நான் அந்தப் பக்கம் சென்றேன் எங்கள் ஊரில் ஓர் அறிஞர் இருக்கிறார்.**

மேல் உள்ள 4 வாக்கியங்களிலும் சொற்கள் அடுத்து நிற்கின்றன சொற்களுக்கு இடையே உள்ள இடைவெளி ஒரு சொல்லை பிறிதொரு சொல்லில் இருந்து பிரித்துக் காட்டப் பயன்படுகின்றது.

சொற்களுக்கு இடையில் இடைவெளிவிட்டு எழுதும் வழக்கம் பழங்காலத்தில் இருக்கவில்லை சொல் உறுப்புகளை ஒன்றோடு ஒன்று நெருக்கமாக இணைப்பது போல் சொற்களையும் நெருக்கமாக இணைத்து புணர்ச்சி விகாரங்களுடன் எழுதினார்கள். அவ்வாறு எழுதும் போது தனித்தனிச் சொற்களின் வடிவம் அடையாளம் காண முடியாதவாறு மாற்றம் அடையும். உதாரணமாக மேலுள்ள நாலாவது வாக்கியத்தை அவ்வாறு எழுதினால் அது பின்வருமாறு அமையும்:

எங்களூரிலோரறிஞரிருக்கிறார்.

இந்த வாக்கியத்தை எளிதாக நாம் புரிந்துகொள்ள முடியாது. இதனைப் புணர்சசி. விகாரங்களுடன் சொற்களுக்கு இடையில் இடைவெளிவிட்டு வேறு ஒரு விதமாக முடிந்த அளவு புணர்ச்சி விகாரங்கள் இன்றி, பிரித்து எழுதுவதே தற்கால வழக்கு.

அகப்புணர்ச்சியில் சொல் உறுப்புகளுக்கு இடையில் இடைவெளி இல்லாமல் புணர்ச்சி விகாரங்களுடன் அவற்றை இணைத்து எழுதுகின்றோம். அவற்றை இடைவெளிவிட்டுப் பிரித்து எழுதினால் நமக்கு எளிதில் புரியாது. உதாரணமாக மேல் தரப்பட்ட முதலாவது வாக்கியத்தை அவ்வாறு எழுதினால் அது பின்வரு மாறு அமையும்: ◆ **நாம் கள் மரம் அத்து ஐ வெட்டு இன் ஓம்** இந்த வாக்கியத்தை நாம் எளிதாகப் புரிந்துகொள்ளமுடியாது.

நாங்கள் மரத்தை வெட்டினோம் என்று சொல் உறுப்புகளை இடைவெளி இன்றி புணர்ச்சி விகாரங்களுடன் இணைத்து எழுதும் பொழுதே எளிதில் புரிகின்றது அவ்வகையில்,

◆ அகப்புணர்ச்சியில் சொல் உறுப்புகள் இடைவெளி இன்றி புணர்ச்சி விகாரங்கள் இன்றி பிரித்து எழுதப்படுகின்றன.

◆ புறப்புணர்ச்சியில அவசியமான இடத்து மட்டும் புணர்ச்சி விகாரங்கள் பேணப்படும் புறப்புணர்ச்சியில் புணர்ச்சி விகாரங்கள் எங்கு அவசியம், எங்கு அவசியமில்லை என்பது பின்னர் விளக்கப்படும்.

### பயிற்சி

(அ) பின்வரும் சொல் உறுப்புக்களை புணர்த்தி எழுதுக

பல் + கள் + ஐ + படி + கிறு + ஆர் சொல் + கள் + ஆள்

காண் + ட் + ஏன்

வா + கிறு + ஏன் போ + ன் + ஆன் தா + ந்த் +ஆன் நான் +ஐ

(ஆ) பின்வரும் வாக்கியங்களில் உள்ள சொற்களைத் தற்கால வழக்குப்படி பிரித்து எழுதுக

**எனக் கெல்லோரு முதலி செய்கிறார்கள் படித்த விளைஞர் மன்றம்**

**வானமும் கடலுஞ் சந்திக்கு மிடம் அரிசி யங்கில்லை**

### இயல்புப் புணர்ச்சி

புணர்ச்சியில் குறைந்த பட்சம் இரண்டு சொற்கள் அல்லது சொல் உறுப்புகள் சம்பந்தப்படுகின்றன.

மாடு + கள் → மாடுகள் கடல் + நீர் → கடல்நீர்

முதல் உதாரணத்தில் மாடு என்ற சொல்லும் - கள் என்ற பன்மை விதியும் சேர்ந்து மாடுகள் எனப் புணர்ந்துள்ளன. இரண்டாவது உதாரணத்தில் கடல், நீர் ஆகிய இரண்டு சொற்கள் சேர்ந்து கடல்நீர் எனப் புணர்ந்துள்ளன. இச் சொற்களில் முதலில் நிற்கும் மாடு, கடல்நீர் எனப் புணர்ந்துள்ளன. இச்சொற்களில் முதலில் நிற்கும் மாடு, கடல் ஆகியவற்றை **நிலைமொழி** எனறும் அவற்றுடன் வந்து புணரும் கள், நீர் ஆகியவற்றை **வருமொழி** என்றும் சொல்வர்.

மேலே தரப்பட்ட உதாரணங்களில் நிலை மொழியும் வருமொழியும் புணரும்போது அவற்றின் வடிவங்களில் எவவித மாற்றமும் ஏற்படவில்லை இவ்வாறு தம்வடிவங்களில் எவ்வித மாற்றமும் இன்றி சொற்கள் அல்லது சொல் உறுப்புகள் புணர்வதை இயல்புப் புணர்ச்சி என்பர். பின்வரும் உதார ணங்களைப் பார்ப்போம்:

அவர் + ஐ → அவரை, அவர் + ஆல் அவரால், அவர் + உக்கு அவருக்கு இங்கு நிலைமொழி இறுதியில் உள்ள ர கர மெய்யுடன் வருமொழி முதலில் உள்ள ஐ, ஆ, உ ஆகிய உயிர்கள் சேர்ந்து முறையே *ரை, ரா, ரு* என உயிர்மெய் எழுத்துக்களாக மாறி உள்ளன. இந்த மாற்றத்தைத் தவிர் நிலை மொழியிலோ வருமொழியிலோ உள்ள எழுத்துக்கள் எவையும் கெடவில்லை: புதிதாக எழுத்துக்கள் எவையும் தோன்றவில்லை இருக்கும் ஓர் எழுத்து திரிந்து பிறிதொரு எழுத்தாக மாறவும் இல்லை. நிலைமொழி இறுதி மெய்யும் வருமொழி முதல் உயிரும் மாற்றமின்றி அவ்வாறே இருக்க அவை இரண்டும் இணைந்து ஒரு புதிய வரிவடிவம் வருமொழி முதலில் உள்ள உயிரும் இணைந்து உயிர் மெய் வடிவம் பெறுவதும் இயல்புப் புணர்ச்சியாகும்.

### விகாரப்புணர்ச்சி

சொற்கள் அல்லது சொல் உறுப்புகள் புணரும்போது நிலைமொழியிலோ வருமொழியிலோ ஏதாவது மாற்றம் ஏற்படின் அது விகாரப் புண்ர்ச்சி எனப்படும் விகாரம் என்பதற்கு வேறுபாடு, மாற்றம் என்பது பொருள்.பின்வரும் உதாரணங்களை நோக்குக.

மரம் + கள் → மரங்கள் பூ + கள் → பூக்கள்

முதலாவது உதாரணத்தில் மரம் என்ற நிலைமொழியுடன் கள் என்ற வருமொழி புணரும் போது நிலைமொழி இறுதியில் உள்ள ம், ங், ஆகத் திரிந்துள்ளது..

அவ்வகையில் மரம் என்பது மரங் என்ற வடிவம் மாறியுள்ளது. இரண்டாவது உதாரணத்தில் பூ என்ற நிலைமொழியுடன் - **கள்** என்ற வருமொழி புணரும்போது க் என்ற ஒரு புதிய எழுத்துத் தோன்றியுள்ளது. அதனால் - **கள்** என்ற வருமொழி புணரும்போது க் என்ற ஒரு புதிய எழுத்துத் தோன்றியுள்ளது. அதனால் - **கள** என்ற வருமொழி - **கள** என்று வடிவம் மாறியுள்ளது.

**விகாரப் புணர்ச்சி மூன்று வகைப்படும்.**

**1. தோன்றல் 2. கெடுதல் 3. திரிதல்**

தோன்றல் நிலைமொழியும் வருமொழியும் புணரும்போது இடையில் ஓர் எழுத்துத் தோன்றுதல் விகாரம் எனப்படும்.

| | | | | |
|---|---|---|---|---|
| பூனை +ஐ | → | பூனை +ய் + ஐ | → | பூனையை |
| பலா + இல் | → | பலா +வ் + இல் | → | பலாவில் |
| கல் + ஆல் | → | கல் +ல் +ஆல் | → | கல்லால் |
| ஓடி + போ | → | ஓடி +ப் + போ | → | ஓடிப் போ |
| அந்த + காலம் | → | அந்த+க் +காலம் | → | அந்தக் காலம் |

மேல் உள்ள உதாரணங்களில் நிலைமொழி, வருமொழி ஆகியவற்றுக் கிடையே ய், வ், ப், க், ஆகிய எழுத்துக்கள் புதிதாகத் தோன்றியுள்ளன. இது தோன்றல் விகாரம் எனப்படும்.

நிலைமொழியில் வருமொழியும் புணரும் போது அவற்றில் உள்ள ஏதாவது ஒரு எழுத்து இல்லாமல் போதல் கெடுதல் எனப்படும்.

| | | | |
|---|---|---|---|
| நாக்கு + ஐ | நாக்க் + ஐ | → | நாக்கை |
| கதவு + ஆல் | கதவ் + ஆல் | → | கதவால் |
| இருமு + அல் | இரும் + அல் | → | இருமல் |

மேல் உள்ள உதாரணங்களில் நிலைமொழி இறுதி உகாரம் கெட்டது.

மரம் வேர் மர வேர் மனம் வேதனை மனவேதனை

மேல் உள்ள உதாரணங்களில் நிலைமொழி இறுதியில் உள்ள மகரம் கெட்டது. இது கெடுதல் விகாரம் எனப்படும்.

**திரிதல்**

நிலைமொழியும் வருமொழியும் புணரும்போது அவற்றில் உள்ள ஓர் எழுத்து பிறிதொரு எழுத்தாக மாறுதல் திரிதல் எனப்படும்.

| | | | |
|---|---|---|---|
| மரம் + கள் | மரங் + கள் | → | மரங்கள் |
| கல் + கள் | கற் +கள் | → | கற்கள் |
| கொள் ட் ஏன் | கொண் ட் ஏன் | | கொண்டான் |

மேல் உள்ள உதாரணங்களில் நிலைமொழி இறுதியில உள்ள ம், ல், ள், என்பன முறையே ங், ற் எனத் திரிந்துள்ளன.

| | | |
|---|---|---|
| வா நந் ஆன் | வ நந் ஆன் | வந்தான் |
| சா த்த் ஆன் | செ த்த் ஆன் | செத்தான் |

மேல் உள்ள உதாரணங்களில் வா, சா ஆகிய வினைச்சொற்கள் வ, செ, எனத் திரிந்துள்ளன. இது திரிதல் விகாரம் எனப்படும்.

**வேற்றுமைப் புணர்ச்சியும் அல்வழிப் புணர்ச்சியும்**

தமிழ் இலக்கணக்காரர் புணர்ச்சியை வேற்றுமைப் புண்ர்ச்சி, அல்வழிப் புணர்ச்சி என இரண்டு வகைப்படுத்துவர்.

எழுவாய் வேற்றுமையும், விளி வேற்றுமையும் தவிர்ந்த ஏனைய ஐ, ஆல், கு, இன், அது, கண் முதலிய வேற்றுமை உருபுகள் வெளிப்பட்டும், மறைந்தும் வர சொற்கள் புண்ர்வது வேற்றுமைப் புணர்ச்சி எனப்படும். வேற்றுமைப் புணர்ச்சி தவிர்ந்த ஏனைய எல்லாவகைப் புணர்ச்சிகளும் அவ்வழிப் புணர்ச்சி. எனப்படும். ஒரேவிதமான சொற்கள் வேற்றுமையில் ஒரு விதமாகவும் அவ்வழியில் வேறுவித மாகவும் புணர்வதால் இந்தப் பாகுபாடு அவசியமாகும்.

உதாரணமாக : குருவி கூடு, ஆடு குட்டி ஆகியவை பின்வரும் வாங்கியங்களில் இரு வேறுவிதமாகப் புணர்ந்துள்ளமையைக் காணலாம்.

| | |
|---|---|
| குருவி கூடி கட்டியது | ஆடு குட்டி போட்டது |
| குருவிக்கூடு கீழே விழுந்தது | ஆட்டுக்குட்டி துள்ளி விளையாடியது |

முதல் இரு வாக்கியங்களிலும் குருவீ கூடு, ஆடு குட்டி என்பன இயல் பாகப் புணர்ந்துள்ளன. அடுத்த இரு வாக்கியங்களிலும் அவை விகாரப்பட்டுப் புணர்ந்துள்ளன. முதல் இரு வாக்கியங்களிலும் குருவி, ஆடு ஆகியவை முதலாம் வேற்றுமைப் பொருளில் எழுவாய்ச் சொற்களாகப் புணர்ந்துள்ளன. எழுவாய்ப் பொருளில் சொற்கள் புணர்வது அவ்வழிப் புணர்ச்சியாகும். அடுத்த இரு வாக்கி யங்களிலும் குருவிக்கூடு, ஆட்டுக்குட்டி என்பன குருவியினது கூடு, ஆட்டினது குட்டி என உடைமை வேற்றுமைப் பொருளில் ஒரே சொல்லாகப் புணர்ந்துள்ளன. இது வேற்றுமைப் புண்ர்ச்சியாகும். வேற்றுமையில் வல்லினம் மிகுந்தும், அல்வழி யில் இயல்பாகவும் புணர்ந்துள்ளன.

**சில சொற்கள் வேற்றுமை உருபு ஏற்கும்போது வடிவம் மாறுகின்றன.**

1) தன்மை, முன்னிலைப் பெயர்கள் இவ்வாறு வடிவம் மாறும்

| | | | |
|---|---|---|---|
| நான் + ஐ | என் + ஐ | → | என்னை |
| நாம் + ஐ | நம் + ஐ | → | நம்மை |
| நாங்கள் + ஐ | எங்கள் + ஐ | → | எங்களை |
| நீ + ஐ + | உன் + ஐ | → | உன்னை |
| நீங்கள் + ஐ | உங்கள் + ஐ | → | உங்களை |

2) தான், தாம், தாங்கள் ஆகிய படர்க்கைப் பெயர்கள் வேற்றுமை உருபு ஏற்கும்போது வடிவம் மாறும்

| | | | |
|---|---|---|---|
| தான் + ஐ | தன் + ஐ | → | தன்னை |
| தாம் + ஐ | தம் + ஐ | → | தம்மை |
| தாங்கள் + ஐ | தங்கள் + ஐ | → | தங்களை |

3) காடு, வீடு, மாடு, பயறு, குருடு, கிணறு போன்ற அமைப்புடைய சொற்கள் வேற்றுமை உருபு ஏற்கும்போது உகரம் கெட்டு ஈற்று மெய் இரட்டிக்கும்.

| | | | |
|---|---|---|---|
| காடு + ஐ | காட்ட் + ஐ | → | காட்டை |
| வீடு + உக்கு | வீட்ட் + உக்கு | → | வீட்டுக்கு |
| ஆடு + ஆல் | ஆட்ட் + ஆல் | → | ஆட்டால் |
| மாடு + ஐ | மாட்ட் + ஐ | → | மாட்டை |
| பயறு + ஐ | பயற்ற் + ஐ | → | பயற்றை |

4) ஆறு என்ற சொல் 6 என்னும் எண்ணுப் பெயரைக் குறிக்கும்போது இயல்பாகவும் நதியைக் குறிக்கும்போது விகாரப்பட்டும் வேற்றமை உருபு ஏற்கும்.

| | | | | |
|---|---|---|---|---|
| ஆறு + ஐ | → | ஆறை | | ஆறை இரண்டால் பெருக்கு |
| ஆறு + உடன் | → | ஆறுடன் | | ஆறுடன் மூன்றைக் கூட்டு |
| ஆறு + ழு | → | ஆற்ற்+ ஐ | → | ஆற்றை ஆற்றைக் கடந்து சென்றேன் |
| ஆறு + உக்கு | → | ஆற்ற் + உக்கு | → | ஆற்றுக்குக் குளிக்கச் சென்றேன் |

**உயிர் ஈற்றுப் புணர்ச்சி**

நிலைமொழி ஈற்றெழுத்து உயிராகவும் வருமொழி முதல் எழுத்து உயிர் அல்லது மெய்யாகவும் அமைய சொற்கள் புணர்வது உயிர் ஈற்றுப் புணர்ச்சி எனப்படும். இது உயிர் உயிர், உயிர் மெய் என இரு வகையாக அமையும்.

**உயிர் முன் உயிர் புணர்தல்**

நிலைமொழி இறுதியில் உயிரும் வருமொழி முதலில் உயிரும் வந்தால் இடையில ய கரமெய் அல்லது வ கர மெய் தோன்றிப் புணரும். இவ்வாறு தோன்றும் மெய்யை உடம்படுமெய் என்பர்.

யகர மெய் தோன்றுதல்

நிலை மொழி இறுதியில் இ, ஈ, ஐ உயிர்களுள் ஏதாவது ஒன்று வந்தால் வருமொழி முதலில் எந்த உயிர் வந்தாலும் ய கர மெய் உடம்படு மெய்யாகத் தோன்றும்.

| | | | | |
|---|---|---|---|---|
| கிளி + ஐ | → | கிளி + ய் + ஐ | → | கிளியை |
| தீ + ஐ | → | தீ + ய் + ஐ | → | தீயை |
| பனை + ஐ | → | பனை + ய் + ஐ | → | பனையை |
| எலி + ஆல் | | எலி ய் ஆல் | | எலியால் |
| ஈ ஆல் | | ஈ ய் ஆல் | | ஈயால் |
| பூனை ஆல் | | பூனை ய் ஆல் | | பூனையால் |

மேற்காட்டிய உதாரணங்கள் எல்லாம் அகப்புணர்ச்சியாகும். அகப்புணர்ச்சியில் உடம்படு மெய் கட்டாயம் தோன்றும். ஆனால் புறப்பீணர்ச்சியில் உடம்படு மெய் தோன்றுவது கட்டாயமல்ல. புறப்புணர்ச்சியில் உடம்படு மெய் இல்லாமல் பிரித்து எழுதும்போதுதான் பொருள் இலகுவாகப் புரிகின்றது. தற்காலத்தில் இவ்வாறு பிரித்து எழுதுவதே பொது வழக்கு. பின்வரும் உதாரணங்களை நோக்குக.

| | |
|---|---|
| அரிசியில்லை | அரிசி இல்லை |
| தீயை யணைத்தார்கள் | தீயை அணைத்தார்கள் |
| என்னை யழைத்துள்ளனர் | என்னை அழைத்துள்ளனர் |
| நீ யொருவரை யழைத்துவா | நீ ஒருவரை அழைத்துவா |

**வகர மெய் தோன்றுதல்**

இ, ஈ, ஐ மூன்றும் தவிர மொழி இறுதியில் வரும் உயிர் எழுத்துக்களுள் ஏதாவது ஒன்று நிலைமொழி இறுதியில் வந்தால், வருமொழி முதலில் எந்த உயிர் வந்தாலும் வகர மெய் உடன்படு மெய்யாகத் தோன்றும்.

| | | |
|---|---|---|
| பலா ஐ | பலா வ் ஐ | பலாவை |
| பசு ஐ | பசு வ் ஐ | பசுவை |
| பூ ஐ | பூ வ் ஐ | பூவை |
| பலா ஆல் | பலா வ் ஆல் | பலாவால் |
| பசு ஆல் | பசு வ் ஆல் | பசுவால் |
| பூ ஆல் | பூ வ் ஆல் | பூவால் |

புறப்புணர்ச்சியில் வகர உடம்படு மெய் தோன்றாமல் பிரித்து எழுதுவதுதான் தற்காலத்தில் பெருவழக்காக உள்ளது. அப்பா வந்த வறையிலிருக்கிறார் என்று தற்காலத்தில் யாரும் எழுதுவதில்லை. அப்பா அந்த அறையில் இருக்கிறார் என்றே இன்று எல்லாரும் எழுதுவர்.

புணர்ச்சியில் உடம்படு மெய் சேர்ந்து எழுதவேண்டிய இடங்கள்

1) அகப்புணர்ச்சியில் உடம்படு மெய் சேர்த்து எழுதுக.

2) தொகைச் சொற்கள் அல்லது கூட்டுப் பெயர்கள் அகப்புணர்ச்சிக்குரியவை. ஆகையால், அங்கும் உடம்படு மெய் சேர்த்து எழுதுக. உதாரணம்

மாவிலை, பனையோலை, கோயில் / கோவில்

3) உடன், ஓடு ஆகிய சொல் உருபுகள் வரும்போது உடம்படு மெய் சேர்த்து எழுதுக.

| | | | | |
|---|---|---|---|---|
| அப்பா | உடன் | அப்பாவுடன் | அப்பா ஓடு | அப்பாவோடு |
| தந்தை | உடன் | தந்தையுடன் | தந்தை ஓடு | தந்தையோடு |

4) செய்த என்னும் வாய்ப்பாட்டு வினை எச்சத்துடன் உடன் என்னும் இடைச்சொல் புணரும்போது உடன்படு மெய் சேர்த்து எழுதுக. உம் செய்தவுடன், வந்தவுடன், நின்றவுடன், கண்டவுடன், பார்த்தவுடன், கேட்டவுடன்.

5) செய்ய என்னும் வாய்ப்பாட்டு வினை எச்சத்துடன் இல்லை என்னும் எதிர்மறை வினை புணரும்போது உடம்படு மெய் சேர்த்து எழுதுக. உம் செய்யவில்லை, போகவில்லை, வரவில்லை, பார்க்கவில்லை, கேட்கவில்லை...

6) புறப்புணர்ச்சியில் உடம்படு மெய்யைத் தவிர்த்து சொற்களைப் பிரித்து எழுதுக.

**குற்றியலுகரப் புணர்ச்சி**

குற்றியலுகர ஈற்றுச் சொற்களுக்கு முன் வருமொழி முதலில் உயர் எழுத்து வந்தால், குற்றியலுகரம் கெட்டுப் புணரும், தற்காலத் தமிழில் சொல் இறுதியில் வரும் எல்லா உகரமும் பெரிதும் குற்றியலுகரமாகவே ஒலித்தாலும் புணர்ச்சியில் மொழி இறுதியில் வரும் உகரங்கள் எல்லாம் கெடுவதில்லை. புணர்ச்சியில் கெடும் ஈற்று உகரங்களைப் பின்வருமாறு வகைப்படுத்திக் கூறுவர்.

**கெடுதல்**

நிலைமொழியும், வருமொழியும் புணரும்போது அவற்றில் உள்ள ஏதாவது ஒரு எழுத்து இல்லாமல் போதல் கெடுதல் எனப்படும்.

| | | | |
|---|---|---|---|
| நாக்கு + ஐ | நாக்க் + ஐ | → | நாக்கை |
| கதவு + ஐ | கதவ் + ஆல் | → | கதவால் |
| இருமு + ஆல் | இரும் + அல் | → | இருமல் |

மேல் உள்ள உதாரணங்களில் நிலைமொழி இறுதி உகாரம் கெட்டது.

மரம் வேர் மரவேர் மனம் வேதனை மனவேதனை

மேல் உள்ள உதாரணங்களில் நிலைமொழி இறுதியில் உள்ள மகரம் கெட்டது. இது கெடுதல் விகாரம் எனப்படும்.

**திரிதல்**

நிலைமொழியும் வருமொழியும் புணரும்போது அவற்றில் உள்ள ஓர் எழுத்து பிறிதொரு எழுத்தாக மாறுதல் திரிதல் எனப்படும்.

| | | |
|---|---|---|
| மரம் கள் | மரங் கள் | மரங்கள் |
| கல் கள் | கள் கள் | கற்கள் |
| கொள் ட் ஏன் | கொண் ட் ஏன் | கொண்டேன் |

மேல் உள்ள உதாரணங்களில் நிலைமொழி இறுதியில் உள்ள ம், ல், ள் என்பன முறையே ங், ற், ண் எனத் திரிந்துள்ளன.

(சனிக்கிழமை தொடரும்...)

# சமுர்த்தி வங்கிக்கான புதிய கட்டடத்தை அமைப்பதிலுள்ள இடர் குறித்து ஆராய்வு



(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் சமுர்த்தி வங்கிக்கான புதிய கட்டடத்தை நிர்மாணிப்பதில் எதிர்நோக்கி வரும் இடர்பாடுகள் தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் விசேட கலந்துரையாடலொன்று இடம்பெற்றுள்ளது.

தென்மராட்சி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் மேற்படி விடயம் தொடர்பிலான கலந்துரையாடலொன்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது தென்மராட்சிப் பகுதியில் சமுர்த்தி வங்கிக்காக நகரசபைக்கு அண்மையாகவுள்ள காணியில் புதிய கட்டடமொன்றை அமைப்பதற்கு நகரசபை தொடர்ச்சியாக மறுத்து வருகின்றது.

பிரதேச மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தீர்மானத்திற்கு அமைவாக குறித்த காணியில் வங்கியை நிர்மாணிப்பதற்கான அனுமதி வழங்கப்பட்ட போதிலும் அது தொடர்பில் தொடர்ந்தும் இழுபறி நிலையே காணப்படுகின்றது.

இந்நிலையில் வங்கிக்கான கட்டுமானப் பணிகளை முன்னெடுக்க முடியாதவாறு நிலவரம் தொடர்பான வழக்கு நீதிமன்றில் இருக்கின்ற காரணத்தினால் நீதிமன்ற முடிவுகள் எட்டப்படும் வரையில் குறித்த காணி பிரதேச செயலகத்திற்கு உரித்தானது என அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

குறித்த காணியின் உரிமம் தொடர்பில் பிரதேச சபை தவிசாளர் தேவசகாயம்பிள்ளை, மாகாண காணி ஆணையாளர் தயானந்தன் உள்ளிட்டோருடன் அமைச்சர் கேட்டறிந்து கொண்டார்.

இதன்போது, மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அஞ்சலிதேவி சாந்தசீலன் மாவட்ட சமுர்த்தி ஆணையாளர் மகேஸ்வரன், மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஜெகூ, உதவி ஆணையாளர் வத்சலன், ஈ.பி.டி.பியின் தென்மராட்சி இணைப்பாளர் அலெக்ஸான்டர் சாள்ஸ் உள்ளிட்ட துறைசார்ந்த பலரும் கலந்து கொண்டனர்.

# பெண்ணின் சங்கிலி சாதுரியமாக அறுப்பு

(அச்சுவேலி)

புத்தூர் பகுதியில் வீதியால் சென்று கொண்டிருந்த பெண் ஒருவரின் 2 பவுண் தங்கச் சங்கிலியை மோட்டார் சைக்கிளில் வந்த மூவர் அறுத்துச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மேற்படி சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

மேற்குறிப்பிட்ட பெண் தனது சொந்த விடயம் தொடர்பாக பெருந்தில் பயணம் செய்து விட்டு வந்து புத்தூர் சந்தியூடாக தனது வீடு நோக்கிச் சென்ற கொண்டிருந்த வேளையில் அவரைப் பின் தொடர்ந்து மோட்டார் சைக்கிளில் வந்த மூன்று பேர் அவர் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை அறுத்துச் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் பின்புறத்தால் வந்து சங்கிலியை அறுத்துச் சென்றதால் பதற்றமுற்றுப் பெண் சங்கிலி, சங்கிலி எனக் கூச்சலிட்டதால் அந்த இடத்துக்கு விரைந்த இனம் தெரியாத மூவரையும் பிடிக்க முற்பட்டவேளை அவர்கள் அவ்விடத்தைவிட்டு தப்பிச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (85)

# கட்டுரைப் போட்டி

(சாவகச்சேரி)

விளைவேலி மருதடி வீரகத்தி விநாயகர் ஆலய மஹோற்சவப் பெருவிழாவை முன்னிட்டு அறநெறிப் பாடசாலை மாணவர்களிடையே பிரதி வெள்ளிக்கிழமை தோறும் இந்து சமயப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

அதன்படி இன்று பிற்பகல் 4.30 மணிக்கு தரம் 3, 7, 8, 11 ஆகிய வகுப்பு மாணவர்களுக்கு கட்டுரைப் போட்டி நடைபெறவுள்ளது.

இந்து போட்டியின்போது வழங்கப்படும் தலைப்பிற்கேற்ப கவிதையை இயற்றி வாசிக்க வேண்டும் என அறநெறிப் பாடசாலையின் காப்பாளர் கலாநிதி பா.நிமலதாசன் அறிவித்துள்ளார். (இ)

# குற்றச் செயல்களைத் தடுப்பதற்கு பொதுமக்கள் ஒன்றுபட வேண்டும்

## சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவிப்பு

களவு, கொள்ளை, துஷ்பிரயோகங்கள் அதிகரித்துக் காணப்படும் இன்றைய சூழலில் அவை வருமுன் காப்பதற்காக கிராமங்கள் தோறும் மக்கள் ஒன்றுபட வேண்டும் என சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துஷ்மந்த வேண்டுகோள் விடுத்தார்.

கடந்த வாரம் இணுவில் கலாஜோதி சனசமூக நிலையத்தில் நடைபெற்ற கிராம மட்ட சிவில் பாதுகாப்புக்குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

பொலிஸார் யுத்த வீரர்கள் அல்ல, அவர்கள் மக்கள் பணியாளர்கள், வெளிநாடுகளில் பொலிஸாரும் மக்களும் ஒன்றிணைந்து செயற்படுகிறார்கள். இங்கு பாரிய இடைவெளியைக் காணக்கூடியதாக உள்ளது.

விபத்துக்களின்போதும், சில தேவைகளின் போதும் பொலிஸாரின் பிரசன்னத்தை ஏற்றுக் கொள்ளும் மக்கள் ஏனைய சந்தர்ப்பங்களிலும் அவர்களுடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்ள முன்வரவேண்டும். அப்போதே நாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை வருமுன் காக்க முடியும் என்றார். (120)

# உதவிப்பண மீளாய்வு

(வரணி)

வரணிப்பிரதேசத்தில் நலிவுற்ற விதவைகளுக்கான மாதாந்த உதவிப்பண மீளாய்வு நடைபெறவுள்ளது.

இதில் ஜே/343 கிராம அலுவலர் பிரிவில் 25 ஆம் திகதியும், ஜே/338 கிராம அலுவலர் பிரிவில் 28 ஆம் திகதியும் மீளாய்வு நடவடிக்கை அந்தந்தப் பிரதேச கிராம அலுவலர் பிரிவில் நடைபெறும்.

மீளாய்வுக்கு பணம் பெறும் அத்தாட்சிப் பத்திரம் குடும்ப அட்டை, அடையாள அட்டை என பவற்றை உரியவர்கள் எடுத்து வருமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (150)

# ஞானச்சுடர் வெளியீடு

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலய சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் 196 ஆவது ஞானச்சுடர் வெளியீட்டு விழா ஆச்சிரம மண்டபத்தில் எதிர்வரும் 25 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

டாக்டர் விபாலகிருஷ்ணன் வெளியீட்டுரையையும் இளைப்பாறிய அதிபர் திருமதி ரீ.சுரேந்திரநாதன் மதிப்பீட்டுரையையும் நிகழ்த்துவர். (01)

# தொடர்ச்சியான திருட்டைத் தடுக்க ஆலயத்தில் கமராபொருத்த ஏற்பாடு

(வடமராட்சி)

பொலிகண்டி மருதாம்புலம் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் அண்மைக்காலமாக இடம்பெற்று வரும் திருட்டுச் சம்பவங்களைத் தடுக்கும் முகமாக ஆலயத்தில் இரகசிய கமராக்கள் பொருத்தப்படவுள்ளதாக பரிபாலன சபை உபதலைவர் ந.பாஸ்கரசோதி தெரிவித்துள்ளார்.


இவ்வாலயம் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளதுடன் பெறுமதியான ஆலய உடமைகள் ஆலயத்தின் உள்வீதியில் வைக்கப்படுகிறது.

இந்நிலையில் அண்மைக் காலமாக இவ்வாறு வைக்கப்படும் உடமைகள் இரவு பகலாக திருடப்பட்டுள்ளன.

குறிப்பாக அண்மையில் ஆலய உண்டியலை உடைத்துக் கொண்டிருந்த திருடன் கையும் மெய்யுமாக பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டான்.


இதேவேளை 12 ஆயிரம் ரூபா பெறுமதியான பித்தளை விளக்குகள் களவாடப்பட்டதுடன், இது தொடர்பாக பொலிஸாரிடம் தெரிவித்தும் அதற்கான எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இவ்வாறு தொடர்ச்சியாக இடம்பெறும் திருட்டு நடவடிக்கையை தடைசெய்யவே ஆலயத்தின் நாற்திசையும் கமரா பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (116)



காரைநகர் வாரிவளவு ஸ்ரீ கற்பகவிநாயகர் ஆலய இரதோற்சவம் அண்மையில் இடம்பெற்றது. இதில் விநாயகப் பெருமான் தேரில் ஆரோகணிப்பதைக் காணலாம். (50)



காரைநகர் கல்விக் கோட்டத்திலுள்ள 10 பாடசாலைகளின் தரம் 5 மாணவர்கள் ஒன்றிணைந்த சுற்றாடல் சார் செயற்பாட்டு முகாம் அண்மையில் இடம்பெற்றபோது... (50)

# தென்கொரியாவில் இடம்பெற்ற கப்பல் விபத்தில்

# 5பேர் பலி, 300 பேரைக்காணவில்லை



தென்கொரியாவில் நடுக்கடலில் பயணிகள் கப்பல் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதில் மூன்று பேர் பலியானதுடன், சுமார் 300 பேர் காணாமற போயியுள்ளதாக அந்நாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன.

தென்கொரியாவில் செவோல் என்ற பயணிகள் கப்பல் 477 பயணிகளுடன் இன்செயான் துறைமுகத்தில் இருந்து ஜெஜு என்ற சுற்றுலாத் தீவுக்கு கடந்த செவ்வாய்க்கிழமை புறப்பட்டது.

இந்தக்கப்பலில் பயணம் செய்தவர்களில் பெரும்பான்மையானவர்கள், சியோல் புறநகர் அன்சானில் உள்ள டான்வோன் உயர் நிலைப்பாடசாலை மாணவர்களும், ஆசிரியர்களும் ஆவார்கள்.

இவர்கள் 4 நாடகள் சுற்றுலாப பயணமாக சென்றார்கள்.

இந்தக்கப்பல் தனது பயணத்தின் நடுவழியில் நேற்று முன்தினம் சற்றும் எதிர்பாராத வகையில் மூழ்கத் தொடங்கியது. கப்பலில் இருந்தவர்கள் தவித்தனர். இதுதொடர்பாக உடனடியாக தென்கொரிய கடலோரக் காவல் படைக்கு தகவல் அனுப்பப்பட்டது.

தகவல் கிடைத்ததும் கடலோரக் காவல்படை மற்றும் கடற்படையின் 100 கப்பல்களும், படகுகளும், 18 ஹெலிகொப்டர்களும் சம்பவ இடத்துக்கு விரைந்தன. ஆனால் அந்தக்கப்பல் ஒரு பக்கமாக சாயத்தொடங்கியதுமே, அது மூழ்கி விடும் எனக் கருதி பல மாணவர்கள் உயிர் பிழைக்கும் ஆவலில் கடலில் குதித்தனர்.

மீட்பு படையினர் விரைந்த போதே, கிட்டத்தட்ட அந்தக்கப்பல் முழுமையாக மூழ்கும் நிலையில் இருந்தது. கப்பலில் இருந்து 368 பேர் பத்திரமாக மீட்கப்பட்டு விட்டதாகவும், கப்பலின் பெண் சிப்பந்தி ஒருவர், மீட்கப்பட்ட மாணவர் ஒருவர் உட்பட 3 பேர் உயிரிழந்து விட்டதாகவும் தென்கொரிய பாதுகாப்பு மற்றும் பொது நிர்வாகத்துறை அமைச்சக தகவல்கள் தெரிவித்தன. ஆனால் கணக்கிட்டதில் தவறு ஏற்பட்டு விட்டதாகவும், 164 பேர் மட்டுமே மீட்கப்பட்டுள்ளதாகவும், அவர்களில் 55 பேர் படுகாயம் அடைந்துள்ளதாகவும், சுமார் 300 பேர் காணாமற் போய் விட்டதாகவும் பின்னர் கூறப்பட்டது.

போர்க்கப்பல்களும், வணிகக் கப்பல்களும் மீட்பு பணியில் ஈடுபட்டுள்ள நிலையில், இப்பணியில் உதவுவதற்காக அமெரிக்கா, போர்க்கப்பல் ஒன்றை அனுப்ப உள்ளதாகவும் கூறப்படுகிறது. 160 நீச்சல் வீரர்களும் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். மூழ்கிய கப்பல் ஜப்பானில் கட்டப்பட்டது, 900 பேரை ஏற்றிச்செல்லும் வசதி கொண்டது, கார்களையும், லொரிகளையும் சுமந்து செல்லும் வசதியையும் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## லொத்தர் சீட்டை குப்பையில் போட்டதால் 7.5 கோடி ரூபாவை இழந்தார் அமெரிக்கர்


(நியூயோர்க்)

லொத்தர் சீட்டை வாங்கியபின் அலட்சியமாக கிழித்து எறிந்த அமெரிக்கர், 7.5 கோடி ரூபா பரிசை தவறவிட்டார்.

அமெரிக்காவின், நியூயோர்க், சவுத் குயின் தெருவில் உள்ள ஒரு கடையில், கடந்த ஆண்டு, மார்ச் மாதம், ஒரே மாதிரியான எண்களைக் கொண்ட, 25 லொத்தர் சீட்டுகளை, 6,000 ரூபாய்க்கு, அமெரிக்கர் ஒருவர் வாங்கினார். லொத்தர் சீட்டின் குலுக்கல் முடிந்தவுடன், தன்னிடம் இருந்த சீட்டுக்களின் எண்களை தவறாக புரிந்து கொண்டு, இந்த சீட்டுகளுக்கு பரிசு விழவில்லை என்ற கோபத்தில், அவற்றை, குப்பையில் போட்டு விட்டார். லொத்தர் குலுக்கல் முடிவு குறித்து அவரிடம், கடை பணிப்பெண் கேட்ட போது, அவற்றை குப்பையில் போட்டு விட்டதாகக் கூறினார். ஓராண்டு ஆனதால், பென்சில்வேனியாவில் உள்ள, லொத்தர் சீட்டு நிர்வாக அலுவலகம், கடந்த, பெப்ரவரியில் ஓர் அறிவிப்பை வெளியிட்டது. அந்த அறிவிப்பில், குறிப்பிட்ட எண்களைக் கொண்ட, 25 லொத்தர் சீட்டுகளுக்கு தலா, 30 இலட்சம் வீதம மொத்தம், 7.5 கோடி ரூபாய் பரிசு விழுந்துள்ளது என்றும், லொத்தர் சீட்டுகளை வாங்கியவர்கள், மார்ச் மாதம் 13ஆம் திகதிக்குள், உடனடியாக அலுவலகத்திற்கு வந்து, பரிசுப் பணத்தை பெற்றுக்கொள்ளும்படி கூறியிருந்தது. அந்த அறிவிப்பை கண்ட கடை பணிப்பெண், தங்களுடைய கடையில் லொத்தர் சீட்டுகளை வாங்கிய அமெரிக்கருக்கு தகவல் தெரிவித்தார். ஆனால், அந்த லொத்தர்சீட்டுகளை குப்பையில் போட்டு விட்டதால், அந்த நபரால் பரிசுப் பணத்தை பெற இயலவில்லை. இந நிலையில், பரிசை பெறுவதற்கான கால அவகாசம் முடிந்ததால், பரிசுப் பணம் முழுவதும், லொத்தர் நிதியத்திடம் ஒப்படைக்கப் பட்டு விட்டது

# குற்றம் செய்தால் தூக்கில் போடுங்கள் ஒருபோதும் மன்னிப்புக் கேட்கமாட்டேன்

## மோடி தெரிவிப்பு



குற்றம் செய்திருந்தால் என்னை தூக்கில் போடுங்கள்-மன்னிப்பு கேட்க மாட்டேன் என குஜராத் முதல் மந்திரியும், பா.ஜ.க.வின் பிரதமர் வேட்பாளருமான நரேந்திர மோடி தனியார் தொலைக் காட்சிக்கு நேற்று முன்தினம் நோகாணல் ஒன்றை வழங்கிய போது தெரிவித்தார்.

குஜராத் கலவரத்துக்கு நீங்கள் பொறுப்பேற்று மன்னிப்பு கேட்க வேண்டும் என்று எதிர்க் கட்சியினர் கூறி வருகிறார்களே..? என்ற நிருபரின் கேள்விக்கு பதில் அளிக்கும் முகமாகவே மோடி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மன்னிப்பு கேட்பதும், மன்னிப்பதும் என்ன நடைமுறை? மன்னிப்பு கேட்பதுஎன்பது இருக்கக் கூடாது. மோடி மன்னிக்கப்படவும் கூடாது. இதைப் போன்ற குற்றச்சாட்டுகளுக்கு மன்னிப்பு கேட்பது மட்டுமே தீர்வாகி விட முடியாது.

இந்தக் குற்றச்சாட்டில் ஒரு தானிய அளவுக்கு உண்மை இருந்தாலும், இந்தியாவின் ஒளிமயமான எதிர்காலத்தையும் பாரம்பரியத்தையும் காக்கும் வகையில், நான்கு தெருக்கள் சந்திக்கும் இடத்தில் மோடி தூக்கிலிடப்பட வேண்டும் என்பதில் நான் உறுதியாக இருக்கிறேன் என்றார்.

உலகச் செய்திகள்

## இலங்கை!

அதற்கு ஜே.ஆர் அவர்கள் 'வடக்கும் கிழக்கும் இணைந்திருப்பதா இல்லையா என்பது பற்றி சர்வசன வாக்கெடுப்பு நடக்கவிருக்கின்றது. அதன் முடிவு என்னவாக இருக்குமோ தெரியாது நீங்கள் ஏன் யாழ்ப்பாணத்திலோ அல்லது மட்டக்களப்பிலோ மாகாண சபைக்கான மைய நிர்வாக அமைப்பை ஏற்படுத்தி செயற்படக் கூடாது என்றார்' மேலும் அவர் 'அப்படி நீங்கள் செய்வதனால் நான் தமிழர் ஒருவரை ஆளுநராக நியமிக்கிறேன்' என்றார். அன்று நான் அறிவும் அனுபவமும் குறைந்த முப்பத்தி ஐந்து வயதுடைய 'இளைஞனாகவே' இருந்த போதிலும் எனக்கு உடனடியாக ஜே.ஆர். என்ன சாதிக்க முயலுகிறார் என்ற வெளிச்சம் பற்றிக் கொண்டது.

நான் அவருக்கு மிகவும் பக்குவமாக 'ஐயா! ஆளுநர் என்பவர் உங்களின் பிரதிநிதி அவர் யாராக இருக்க வேண்டும் என்று நான் உங்களைக் கேட்பது சரியல்ல. அது முழுக்க முழுக்க உங்கள் முடிவாகவே இருக்க வேண்டும். நாங்கள் திருகோணமலையை மையமாகக் கொண்டு செயற்பட விரும்புவதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. ஒன்று நீண்ட நிலப் பரப்பைக் கொண்ட வடக்கு கிழக்கு மாகாணத்துக்கு திருகோணமலையே மையமான இடம். றது திருகோணமலையிலேயே மூன்று இனங்களும் கணிசமான விகிதாசாரத்தில் வாழ்கின்றனர். அப்படிப்பட்ட ஒரு இடத்தில் இருந்து எங்களால் சமாதானமாக ஆட்சி செய்ய முடியவில்லை என்றால் இந்த நாட்டில் மூன்று இன மக்களும் ஒன்றாக வாழ முடியாது என்றே அர்த்தமாகும். எனவே அந்தப் பரிசோதனை அவசியம் என்று கருதுகிறோம்' என்றேன்.

நான் இப்படிச் சொன்னதும் ஜேஆர் என்ன நினைத்தாரோ தெரியவில்லை ஆனால் ஒரு நமட்டுச் சிரிப்பை உதட்டுக்குள் உதிர்த்து விட்டு எனது கோரிக்கைக்கு ஒத்துக் கொண்டார். இறுதியாக அவர் உனக்கு நான்தான் சத்தியப் பிரமாணம் செய்து வைக்க விரும்புகிறேன் என்றார். நானும் அதனை மகிழ்வோடு ஏற்றுக் கொண்டேன்.

இங்கு நான் இவற்றைச் சொல்வதன் மூலம் எழுப்பும் கேள்வி என்னவென்றால், வடக்கு மாகாண சபையின் ஆளுநர் யார் என்பது பற்றிய விவகாரத்தை இவ்வளவு தூரம் அரசுடனான அரசியல் முரண்பாடாக மாற்றியிருக்க வேண்டுமா? என்பதுதான். அத்துடன் முதலமைச்சர் ஜனாதிபதியின் முன்னால் சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொள்ளும் விடயத்திலும் மாகாண சபை உறுப்பினர்களும் மற்றைய அமைச்சர்களும் ஆளுநர் முன்னால் சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொள்ளும் விடயத்தையும் இவ்வளவு தூரம் தமிழர்களின் தன்மானப் பிரச்சினையாக்கி தமது கூட்டுக்குள்ளேயே குழப்பங்கள் உருவாக வழி வகுத்தது அவசியம் தானா?

ஏனென்றால் இவையெல்லாம் முடிந்து போன விடயங்கள் அல்ல. சில சம்பிரதாயப் பிரச்சினைகள் எதிர்காலத்திலும் தமிழர்கள் மத்தியில் குழப்பங்களுக்கும் குளறுபடிகளுக்கும் வழி வகுக்கும் என்பதை எவரும் புரிந்து கொள்ளத் தவறக் கூடாது. இந்த விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் இவ்வளவு குழப்பங்கள் நேர்ந்ததற்கு அது ஒரு சந்தர்ப்பவாத அரசியற் கதம்பம் என்பதனாலா அல்லது இந்தக் கூட்டமைப்பு கட்டியெழுப்பப்பட்டுள்ள தமிழின உணர்ச்சி அரசியலில் உள்ள அடிப்படைக் குறைபாட்டின் வெளிப்பாடா? என்பவையே இந்த இடத்தில் எனது கேள்வி.

## உக்ரேனின் நெருக்கடியை தணிக்க ஜெனிவாவில் பேச்சுவார்த்தை



உக்ரேன் கிழக்குப் பிராந்தியத்தில் ஏற்பட்ட பதற்றத்தைத் தணிக்கும் முகமாக ரஷ்யா, அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் உக்ரேன் நாடுகளின் பிரதிநிதிகளுக்கு இடையில் ஜெனிவாவில் பேச்சுவார்த்தை ஒன்று நடைபெறவுள்ளது.

தற்போது உக்ரேனின் காணப்படுகின்ற பிரச்சினைகளுக்கு ராஜதந்திர ரீதியான தீர்வு ஒன்றைக் காணும் நோக்கில் இந்தப் பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அங்குள்ள இராணுவ நிலையத்தை ரஷ்ய ஆதரவாளர்கள் கைப்பற்றியுள்ளதால் உக்ரேன் பாதுகாப்பு படையினர் அவர்கள் மீது தாக்குதல் நடாத்தி 63பேரை கைது செய்துள்ளனர். இதனால் அரச அலுவலகங்களை முற்றுகையிட்ட ரஷ்ய ஆதரவாளர்களை விரட்டியடிக்கும் முகமாக இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் 3பேர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அரச அலுவலகங்களை ஆக்கிரமித்திருந்த ரஷ்ய ஆதரவாளர்களை அகற்ற முற்பட்டபோது அவர்களுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் ஏற்பட்ட மோதலின்போதே இந்தச்சம்பவம் இடம் பெற்றுள்ளதாக உக்ரேன் உள்நாட்டு அமைச்சின் தகவல்கள் தெரிவித்துள்ளன. இதேவேளை அந்தப் பகுதிக்கு உக்ரேன் அரசு ஹெலிக்கொப்டர்களை அனுப்பி வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# வடக்கின் பொருளாதார அபிவிருத்திக்கு சூரிய சக்திப்பயன்பாடு வலுச்சேர்க்கும்

(யாழ்ப்பாணம்)

இங்குள்ள சூரிய சக்தியைப் பெற்று அதன்மூலம் ஒரு பொருளாதார அபிவிருத்தியைக் கொண்டு வருவதன் மூலம் இன்றைய சூழலில் யாழ்ப்பாணத்தை பொருளாதார அபிவிருத்தியடையச் செய்ய முடியும் - என்று யாழ்.பல்கலைக்கழக ஆய்வு மாநாட்டில் பங்கெடுப்பதற்காக யாழ்.வந்திருக்கும் அமெரிக்காவின் மாற்றத்திற்கான சாதனையாளர் பேராசிரியர் சிவானந்தன் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ். கிறீன்கிராஸ் விடுதியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும தெரிவிக்கையில்,

சூரிய சக்தியை எடுத்து அதன் மூலம் ஒரு பொருளாதார அபிவிருத்தியைக் கொண்டுவந்தால் இங்குள்ள உள்ள் எல்லோருக்கும் சமமான பங்கீடு கிடைக்கும் நான் இங்குதான் படித்தேன். சாவகச்சேரி மட்டுவில் கிழக்கில் இருந்து படித்து சாவகச்சேரி றிபேக்கல்லூரி யாழ். இந்துக் கல்லூரியில் படித்துத்தான் இவ்வளவும் செய்ய முடிந்தது. அதே தளத்தில் இங்குள்ளவர்களுக்கு வழிகாட்டி வெற்றிகரமாக வியாபாரம் தொடங்க ஒரு வழிகாட்டிக்கொடுத்தால் இங்குள்ள பொருளாதார அபிவிருத்தி உறுதியாக வரலாம் என்று தெரிவித்த அவர் இப்படிபொருளாதார அபிவிருத்தி இருந்தால் பொருளாதாரத்தை திட்டமிட்டுக் கொடுக்க வேண்டியதில்லை முப்பது வருட யுத்தத்திற்குப்பின்னரும் 32 வருடங்களுக்குப்பின்னர் இங்குவந்திருக்கின்றேன்.

இங்குள்ளவர்களைச் சென்று பார்த்தபோது அவர்களது மன உறுதி உடைந்திருக்குமா என்று நினைத்தபோதும் உறுதியாகவே இருக்கின்றனர். அவர்களுக்கென ஒரு வழிமுறையைக் கண்டு பிடித்து முன்னே வைத்தால், அதன் மூலம் கிடைக்கும் பொருளாதாரம் உறுதியாக இருக்கும் அத்துடன் சிங்கப்பூரிலும் தென் கொரியாவிலும் விட சிறப்பாக வரலாம் என்று தெரிவித்தார். சூரிய சக்தி முதன்மைப் படுத்தப்படுகின்றதென்றால் ஒவ்வொருவருடமும் இரண்டு மடங்கு தேவை அதிகரித்துச் செல்கிறது.

அந்த நிலையில் இங்குள்ளவர்களுக்கு கற்பித்தால் இந்த இயந்திரங்கள் பொருத்துவதற்குப்படிக்கப்பட்டால் இங்கிருந்தே அயல்நாடுகளுக்கு சந்தைப்படுத்தமுடியும் எல்லா இடங்களிலும் 'சேவிஸ் ஸ்ரேசனை' வைத்திருந்தால் செலவு அதிகம் அதனால் இலங்கையில் அதனை வைத்திருந்தால் யாழ்ப்பானத்தில் உள்ளவர்களை இதற்குப் பயிற்றுவித்து மேற்கொள்ள



முடியும் என்றார். மேலும் சூரியக் கலம் சம்மந்தமான நிபுணர்களுடனனேயே வந்திருக்கின்றேன்

எடுத்த எடுப்பிலேயே இது முடியாத காரியம் என்று ஒதுங்கி விடாது, முடியும் என்றுமுயற்சித்தால் முடியும் என்றும் தெரிவித்துள்ளார். (பா)

# மீசாலை விபத்தில் இருவர் காயம்

(கொடிகாமம்)

மீசாலை இராமாவில் கைநாட்டிச் சந்திப் பகுதியில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் இரண்டுபேர் காயமடைந்துள்ளது வாகனங்களும் பலத்த சேதத்திற்குள்ளானதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்று நணபகல் 11.30 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது,

யாழ்ப்பாணத்திலிருந்து கண்டி நோக்கி சென்று கொண்டிருந்த உல்லாசப் பயணிகளின் டொல்பின் வாகனமும் சாவகச்சேரியிலிருந்து வவுனியா நோக்கிச்சென்று கொண்டிருந்த பிறிதொரு டொல்பின் வாகனமும் வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவத்தில் தர்க்கா நகர் பிரதான வீதியைச் சேர்ந்த நத்தனல் பாத்திமா, மற்றும் வாகன சாரதியான கொழும்பு கிரிபத் கொடவைச் சேர்ந்த நவீல் சுரேந்திரசிங் வயது -31 ஆகிய இருவருமே சிறுகாயங்களுக்குள்ளானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் கண்டி நோக்கி செல்ல இருந்த வாகனத்தின் முன் (றைபோல்) உடைந்து தலைகீழாக தடம்புரண்டதாகவும் இதில் இருவாகனங்களும் பாரிய சேதத்திற்குள்ளானதாகத் தெரிவிக்கப்படுகிறது. (130)

# ஐ.நா. விசாரணையில் சாட்சியமளிக்க படையதிகாரிகள் சிலர் விருப்பம்

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்தினால் இலங்கைக்கு எதிராக முன்னெடுக்கப்படவுள்ள மனித உரிமை மீறல் மற்றும் யுத்தக் குற்ற விசாரணையின் போது பிரதான சாட்சியங்கள் தமிழர் தரப்பிலிருந்து மட்டுமல்லாமல், படைத் தரப்பிலிருந்தும் முன்வைக்கப்படவுள்ளன என்ற தகவல் வெளியாகியுள்ளது.

யுத்த காலத்தில் படைகளில் மிக உயர்ந்த தரத்தில் பணியாற்றிய அதிகாரிகள் சிலர் யுத்தம் முடிவுற்ற காலத்தில் அரசுத் தலைமையுடன் ஏற்பட்ட கசப்புணர்வுகளை அடுத்து நாட்டை விட்டு வெளியேறி, பிறநாடுகளில் நிரந்தரமாகத் தங்கிவிட்டனர்.

அவர்களில் குறைந்தது மூன்று அதிகாரிகளின் சாட்சியங்களை மேற்கு நாடுகள் சில ஏற்கனவே பதிந்து வைத்திருக்கின்றன என்றும், மேற்கு நாடுகளின் தொழில்நுட்ப சான்றுகள், புள்ளி விவரங்கள் மற்றும் தகவல்களுடன் அந்த சாட்சியங்கள் சர்வதேச விசாரணைப் பொறிமுறையின் முன்னால் வலுவான ஆதாரங்களாக முன்வைக்கப்படும் என்றும் இலங்கை அரசுத் தலைமைக்குத் தற்போது வந்திருக்கின்றது.

சாட்சியமளிக்கத் தயாராக இருப்பவர்களுள் ஒருவர் இராணுவத்தின் மிக உயர்ந்த தர நிலையில் பதவி வகித்த, பெரும்பான்மையினரின் மதமான பௌத்தத்தைச் சாராத பிற மதம் ஒன்றைச் சேர்ந்தவர் என்றும் கூறப்படுகின்றது.

யுத்தத்தில் பாதிக்கப்பட்ட தரப்புகளின் சாட்சியங்களுக்கு மேலும் வலுவூட்டும் விதத்தில் வைக்கப்படக்கூடிய படைத் தரப்பு சாட்சியங்கள் மிகப் பாரதூரமான விளைவுகளை சர்வதேச மட்டத்தில் ஏற்படுத்தும் என்றும் அதனால் அரசுக்கு சில சங்கடங்கள் காத்திருப்பதாகவும் தெரிகிறது.

இத்தகைய ஒரு நிலைமை ஏற்பட்டால், அவ்வாறான சாட்சியங்களை மறுத்துரைக்கும் விதத்தில் நேரடியாக அத்தகைய மன்றில் ஆஜராகி சாட்சியமளிக்க முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தயாராக இருக்கின்றார் என்ற தகவல் அவருக்கு நெருக்கமானவர்கள் மூலம தெரியவந்துள்ளது.

# இலங்கைக்கான பயண எச்சரிக்கை; மீண்டும் புதுப்பித்தது பிரித்தானியா

பயங்கரவாதத்துடன் தொடர்புடையவர்கள் எனக்கூறி 16 நிறுவனங்களையும் 424 தனியாட்களையும் அரசாங்கம் 2014 ஆம் ஆண்டு மார்ச் 21 ஆம் திகதி பெயர் குறிப்பிட்டதன் பினனர் பிரித்தான்யா நேற்று முதல் தன் இலங்கைக்கான பயண எச்சரிக்கையை புதுப்பித்தது.

பிரித்தானிய தமிழ் அரங்கம் மற்றும் உலக தமிழ் அரங்கம் ஆகியவை உட்பட 16 நிறுவனங்களையும் 424 தனியாட்களையும் பயங்கரவாதத்துடன் தொடர்புடையவை என இலங்கை அரசாங்கம் மார்ச் 21 இல் பட்டியலிட்டுள்ளது.

வடக்கு மாவட்டங்களை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மற்றும் வவுனியாவுக்கு போவதற்கு ஊடகக் குழுவினரைத் தவிர வெளிநாட்டுப் பிரஜைகள் இலங்கை பாதுகாப்பு அமைச்சின் அனுமதியை பெறவேண்டியதில்லை இராணுவ நடவடிக்கைகள் நடைபெறுகின்றன. நீங்கள் பாதுகாப்புப்படைகளின் கட்டளைக்கும் நிலக்கண்ணி பற்றிய எச்சரிக்கைகளுக்கும் பணிந்து நடக்க வேண்டும்.

அரசியல் கட்டங்கள் வன்முறையில் முடிந்துள்ளன. நீங்கள் அரசியல் கூட்டங்களை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

அனேகமான இலங்கைப் பயணிகள் பிரச்சினை இல்லாதவர்கள் ஆயினும் நீங்கள் கடன் அட்டை மோசடி, வீதிவிபத்துக்கள்,நீரில் மூழ்குதல், நுளம்பால் ...வும் டெங்கு என்பனதொடர்பாக எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

இலங்கை பெரும் புயல், பெரும் மழை ஆகிய கடுமையான வானிலையால் பாதிப்புக்குள்ளாகும். நீங்கள் பயணத்திற்கு முன்னர் அனைத்தையும் அடக்கிய பயண,மருத்துவ காப்புறுதியை பெற்றுக்கொள்ளுங்கள் என்றும் பிரித்தானியா தனது பிரஜைகளுக்கு பயண எச்சரிக்கை விடுத்துள்ளது.

# இன்னும் அகலவில்லை டெங்கு அபாயம்

## பிராந்திய சுகாதாரப்பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ். மாவட்டத்தில் 2014ஆம் ஆண்டின் முதல் காலாண்டுப் பகுதியில் 200 பேருக்கு டெங்கு நோய்க்கான அறிகுறிகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக யாழ். பிராந்திய சுகாதார பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் யாழ்ப்பாண பிரதேச செயலகத்தில் நேற்று நடைபெற்றது. இதன் போதே அவர் இதனைக் கூறினார்.

கடந்த மார்ச் மாதம் டெங்கு கட்டுப்பாட்டு வாரம் அனுஷ்டிக்கப்பட்டதுடன், டெங்கு நோய்க்கான கட்டுப்பாட்டு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

இந்நிலையில் கடந்த வருடத்தை விட, இவ்வருடத்தில் டெங்கு நோய்த் தாக்கம் குறைவடைந்துள்ளது. டெங்கு நோயினால் இவ்வருடம் இதுவரையில் யாரும் உயிரிழக்கவில்லை எனவும் அவர் கூறினார்.

இதேவேளை, விலங்கு விசர் நோய் தடுப்பு வாரம் அனுஷ்டிக்கப்பட்டதுடன், நாய்களுக்கு தடுப பூசிகளும் ஏற்றப்பட்டன. இந்நிலையில், விலங்கு விசர் நோய் கடிக்கு இலக்காகுபவர்களின் எண்ணிக்கையும் குறைவடைந்துள்ளது. இதுவரையில் ஒருவர் மட்டுமே விலங்கு விசர் நோயால உயிரிழந்துள்ளதாகவும் ஆ.கேதீஸவரன் தெரிவித்தார்.

### குருநகர்...

செயலகத்துக்கு அண்மையாக காட்டுக்கந்தோர் பகுதியில் உள்ள "அன்ட்ரோ லிகர் பார்" தொடர்பாக மக்களாலும் அரச உத்தியோகத்தர்களினாலும் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டதையடுத்து குறித்த விடயம் தொடர்பில் ஏற்கனவே தமது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதாகவும் அமைச்சர் சுட்டிக காட்டினார்.

இதனிடையே அண்மையில் குருநகர் பகுதியில் யுவதியொருவர் கிணற்றில் வீழ்ந்து மரணமடைந்தது தொடர்பில் தீவிர கவனம் செலுத்திய அமைச்சர் மரணம் தொடர்பாக ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்கு பணிப்புரை விடுததார்.

அத்துடன், எமது இளைய சமூகத்தை நல்வழிப்படுத்தக் கூடிய வகையிலான விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடாததுவதன் அவசியத்தையும் இதன் போது வலியுறுத்தினார்.

இதனிடையே பாடசாலை மாணவர்கள் மத்தியில் போதைப் பொருள் பாவனையால் எதிர் கொளளப்பட்டு வரும் அவலங்கள் குறித்து சுட்டிக்காட்டப்பட்ட போது, இவ்விடயம் தொடர்பில் துறைசார்ந்தோர் ஆராய்ந்து தமக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறும் அமைச்சர் கேட்டுக் கொணடார்.

யாழ்.மாவட்டம் மட்டுமல்லாது வடமாகாணத்தின் கல்வித்துறை தற்போது முன்னேற்றம் கண்டு வருவதாகவும் அதற்கு பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களது முயற்சி மட்டுமல்லாது பதற்றமில்லாத இன்றுள்ள அமைதியான சூழல் முக்கியமான காரணமாக அமைகின்றது.

எனவே, இவ்வாறான அமைதியான சூழலை பாதுகாத்து எமது மாணவர்கள் மட்டுமல்லாது மக்களும் மென்மேலும் முன்னேற்றம் காணவேண்டுமென்றும் அமைச்சர் தெரிவித்தார்.

### தேவாலயங்களில்..

பெண் துறவிகளையும் ஈடுபடுத்த வேண்டும். எனவும் இளவயதினரை ஈடுபடுத்துவதை தவிர்க்க வேண்டும். எனவும், அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர், குறித்த விடயம் தொடர்பாக நாம் யாழ் மறைமாவட்ட ஆயருக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தவுள்ளதாகவும் தெரிவித்தார்.

யாழ். குருநகர் சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கு பின்புறமாக உள்ள கிணற்றில் இருந்து கடந்த திங்கட்கிழமை சடலமாக மீட்கப்பட்ட யுவதியான ஜெரோமியின் மரணத்திற்கு காரணமான குருமார்களை கைது செய்யுமாறு யாழ். ஆயர் இல்லம் முன்பாக உறவினர்கள் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் நடத்தியிருந்தனர்.

இந்நிலையில் நேற்று இடம் பெற்ற யாழ். பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் மேற்படி கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### யாழ்.தேர்தல்...

ஏழாகக் குறைக்கப்படவுள்ளது. இதன்படி இரண்டு மாவட்டங்களினதும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை நான்கினால் குறைக்கப்பட உள்ளது.

இந்த எண்ணிக்கையானது ஏனைய நான்கு மாவட்டங்களில் அதிகரிக்கப்பட உள்ளது. நுவரெலியா மாவட்டம், மொனராகல, பதுளை மற்றும் இரத்தினபுரி அகிய மாவட்டங்களின் நாடாளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கை தலா ஒவ்வொன்றாக அதிகரிக்கப்படவுள்ளது.

மக்கள் சனத்தொகை மற்றும் 2013ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பு என்பனவற்றின் அடிப்படையில் நாடாளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கையில் மாறறம் செய்யப்பட்டுள்ளது.

### வடக்கில்...

விசாரணை நடத்தவும், இலங்கைப் போரில் இந்திய இராணுவத்தின் பங்கு குறித்து விசாரிக்கக் கோரியும் மனுத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. வழக்குரைஞர் ராம்சங்கரின் பொது நலன் மனுவை விசாரித்த நீதிபதிகள், மனு தாரரின் கோரிக்கை நீதிமன்ற வரம்புக்குள் வராது என்று கூறி மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

# குற்றச்சாட்டுகளுக்கு மறுப்பு; விசாரணைகளுக்கு ஒத்துழைப்போம்

## ஆயர் இல்லம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குருநகர்ப் பகுதியில் 22 வயதுடைய யுவதியான ஜெரோமி கொன்சலிட்ராவின் மரணம் தொடர்பான எழுந்துள்ள குற்றச்சாட்டுக்களை மறுப்பதுடன்,பொலிஸ் விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக யாழ்.ஆயர் இல்லம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக விடுத்துள்ளது.

யாழ். பேராலயத்தில் நவம்பர் 2013 பெப்ரவரி 2014 காலப் பகுதியில் மறையாசிரியராகக் கடமையாற்றிக் கடந்த 14.04.2014 அன்று மரணமடைந்த ஜெரோமி கொன்சலிட்டாவுக்கு எமது ஆழ்ந்த அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். அவரைப் பிரிந்து துயருறும் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

மேற்படி உதவிப் பங்குத் தந்தையர்களின் தவறான செயற்பாடுகளாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக மேற்படி பெண்ணின் மரணத்துக்கு முன்னதான காலப் பகுதியிலோ அல்லது பின்னதான காலப் பகுதியிலோ, பெற்றோராலோ அல்லது வேறு எந்தத் தரப்பாலோ, பேராலயப் பங்குத் தந்தையிடமோ அல்லது ஆயர் இல்லத்திலோ எந்தவித முறைப்பாடுகளும் செய்யப்படவில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

நாம் மேற்கொண்ட ஆரம்ப கட்ட விசாரணைகளின்படி, கடந்த ஒன்றரை மாதங்களுக்கு மேலாகக் குறிப்பிட்ட பெண் எவ்வித வெளித் தொடர்புகளுமற்ற நிலையில் வீட்டிற்குள்ளேயே வைக்கப்பட்டிருந்தார் என்பது தெரியவந்துள்ளது.

இந் நிலையில், மேற்படி குற்றச்சாட்டுக்கள் தொடர்பான உண்மைத் தன்மை பாரதூரத் தன்மை என்பவற்றை நாம் ஆய்ந்தறிவதற்கு உதவியாக தொடர்பானவர்கள் உரிய முறையில் எம்மோடு தொடர்பு கொண்டு ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தவறுகள் மறைக்கப்படக்கூடாது என்பதே எமதும் நிலைப்பாடாகும். எனினும், ஊடகங்களில் வெளிவரும் அனைத்துச் செய்திகளும் முற்றிலும் உண்மையானவை என்று ஏற்றுக் கொள்ள முடியாதுள்ளது. மிகைப்படுத்தலும் வெவ்வேறு தரப்புக்கள் தமக்குச் சார்பாக விடயங்களை திரிபுபடுத்தலும் இன்றைய சூழலின் யதார்த்தம் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்நிலையில், மேற்படி சம்பவம் தொடர்பாக வெளியான செய்திகளால் குழப்பமடையாது, உரிய விடயங்களைச் சீர்தூக்கிப் பார்த்து உண்மையை அறிய முயலவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம்.

மேற்படி சம்பவங்கள் தொடர்பான செய்திகளால் மன உளைச்சலுக்கு உள்ளாகிய அனைத்துக் கிறிஸ்தவ மற்றும் பிற மத சகோதரர்களுக்கும் எமது மனவருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். தொடர்ந்து குருக்களும், திருச்சபையும் கிறிஸ்தவ நன்நெறிவழி நின்று எமது பணியை முன்னெடுப்போம் என்று தெரிவித்துக் கொள்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 7 ஆவது ஐ.பி.எல்.

டில்லி 145/4


டுமினி - 67,

ரேய்லர் - 43

பங்களூர் 146/2

யுவராஜ் சிங் - 52

ஹோக்லி - 49



8 விக்கெட்டுக்களால் வென்றது பங்களூர்

## மத்தல விமான நிலையத்தில் ஐ.தே.க.குழு மீது தாக்குதல்

மத்தல விமான நிலையம் மற்றும் மாகம்புர துறைமுகத்தை பார்வையிடச் சென்ற ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிநிதிகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான அஜித் பி.பெரேரா, எரான் விக்ரமரட்ன மற்றும் ஆர். யோகராஜன் உள்ளிட்ட பிரதிநிதிகள் நேற்று மத்தல விமான நிலையம் மற்றும் மாகம்புர துறைமுகத்தை பார்வையிடச் சென்றனர்.

அதன்போது தமது வாகனங்களை நோக்கி கல் வீச்சுத் தாக்குதல் இடம்பெற்றதாகவும் பிரதேச அரசியல்வாதி ஒருவர் துப்பாக்கியுடன் வந்து அச்சுறுத்தியதாகவும் ஆர்.யோகராஜன் தெரிவித்தார்.

மத்தல விமான நிலையத்திற்கு சென்று வெளியில் வந்த போது அங்கு கூடியிருந்த 150 பேர்வரை எங்களை அச்சுறுத்தினர். எங்கள் பிரதேச அபிவிருத்தியை [illegible]டுக்க நீங்கள் முயற்சிக்க வேண்டாம். இதற்கு எதிராக கருத்து வெளியிட வேண்டாம் என கூறினர். நாம் நிலைமையை பார்வையிடவே வந்தோம் எனக் கூறியபோது அவர்கள் ஊ சத்தமிட்டு எங்களை திட்டினர். நாங்கள் சென்ற பஸ்ஸை நோக்கி கல் வீசினர்.

இதனையடுத்து அம்பாந்தோட்டை டி.ஐ.ஜி.யை (பிரதி பொலிஸ் மா அதிபர்) தொலைபேசியில் தொடர்பு கொண்டு அச்சுறுத்தல் குறித்து தெரிவித்தோம். துறைமுகத்திற்கு செல்லவுள்ளோம். அங்கும் என்ன நடக்கும் என்று தெரியவில்லை என அவரிடம் தெரிவித்தோம்.

பின் துறைமுகத்தி[illegible] சென்றபோது அங்கு கூடியிருந்த 50 பேர் வரை எமக்கு அச்சுறுத்தல் விடுத்து தாக்குதல் நடத்த வந்தனர். இந்த குழுவிற்கு அம்பாந்தோட்டை நகர சபைத் தலைவர் எராஜ் காவிந்த பெனாண்டோ தலைமை வகித்தார். அவரின் கையில் துப்பாக்கி இருந்தது என்றும் தெரிவிக்கப்பட்டது.

## காரணமின்றி வீதியில் தரிப்பு இளைஞர்கள் நால்வருக்கு தண்டம்

(வடமராட்சி)

யாழ்.வடமராட்சி அல்வாய் பகுதியில் நேற்று வியாழக்கிழமை அதிகாலை வீதியில் நின்றிருந்த நான்கு இளைஞர்களில் இருவரை சரீரப் பிணையிலும், ஏனைய இருவரையும் எட்டு நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்கவும் பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் கே.சுப்பிரமணியம் உத்தரவிட்டார்.

குறித்த நால்வரையும் நேற்று அதிகாலை கைது செய்த நெல்லியடிப் பொலிஸார் தொடர்ந்து பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர்ப்படுத்திய போதே பதில் நீதவான் மேற்படி உத்தரவினைப் பிறப்பித்தார்.

வீதி ரோந்தில் ஈடுபட்ட நெல்லியடிப் பொலிஸார் அல்வாய்ப் பகுதியில் நான்கு இளைஞர்கள் நிற்பதை அவதானித்து அவர்களைச் சோதனை செய்தனர். இதன்போது, அவர்களிடமிருந்து ஒரு நெஞ்சாக்கு மற்றும் கூரிய கத்தியொன்றையும் பொலிஸார் மீட்டதுடன், குறித்த நால்வரையும் கைது செய்தனர்.

## நீர்கொழும்பில் சூடு; நகைக்கடையில் கொள்ளை

(கொழும்பு)

நீர்கொழும்பு கிறின்சி வீதியில் உள்ள நகைக் கடையொன்றில் இனந்தெரியாத குழுவினரால் 15 இலட்சம் பெறுமதியான பணம் மற்றும் நகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது

நேற்று வியாழக்கிழமை இரவு 7.30 மணி அளவில் இந்த கொள்ளை இடம்பெற்றுள்ளது.

ஐவரடங்கிய ஆயுதக் குழு இந்தக் கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்டுள்ளதுடன், துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக நீர்கொழும்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## கைதிகள் தப்பியோட்டம்

(கொழும்பு)

கொழும்பு சிறைச்சாலையில் உள்ள வைத்தியசாலையில் இருந்து கைதி ஒருவரும் சந்தேக நபர் ஒருவரும் நேற்று அதிகாலை தப்பிச் சென்றுள்ளனர்.

மனநோயாளர் பிரிவில் இருந்த இருவரே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளதாக சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் ஜே.பீ.குலதுங்க தெரிவித்தார்.

தப்பிச் சென்றவர்களில் ஒருவர் கொலைச் சம்பவம் உள்ளிட்ட வழக்குகளில் குற்றம் சுமத்தப்பட்டிருந்தவர் என சிறைச்சாலைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

மற்றைய நபர் அ[illegible]தம் செலுத்தாமையினால் சி[illegible]யில் வைக்கப்பட்டிருந்தவர் எனவும் சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் ஜே.பீ.குலதுங்க தெரிவித்தார்.


## மரண அறிவித்தல்

### றோமன் பிலிப்பையா



(இளைப்பாறிய ஆசிரியரும், சமாதான நீதிவானும்)

பலாலியைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட றோமன் பிலிப்பையா 16.04.2014 ஆம் திகதி புதன்கிழமை அன்று கனடாவில் காலமானார். அன்னார் காலஞ் சென்றவர்களான றோமன், எலி செபெத் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அல்பிரெட், ஞானப்பு தம்பதிகளின் அன்பு மருமகனும், இராஜேந்திரம், காலஞ்சென்றவர்களான வேதநாயகம், ஹென்றி, இராசநாயகம் மற்றும் றூபி, லிற்னா ஜேம்ஸ், காலஞ்சென்ற சாள்ஸ் ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஞானமலரின் அன்புக் கணவரும், ஷேக்ஸ்பியர் (கனடா), பாபு (கனடா), சேகரன் (ஜேர்மனி), ஸ்ரான்லி ரஞ்சிதன் (தமிழ்ப் பிரிவு உதவி அதிபர். புனித அந்தோனியார் கல்லூரி, வத்தளை), சாந்தினி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், மஞ்சு, சித்திரா, பத்மா, சந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் **Chapel Ridge Funeral Home, 8911 Woodbine Avenue, Markham, Ontario, Canada** வில் வைக்கப்பட்டு 19.04.2014 ஆம் திகதி நாளை சனிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் :**

**பேறாமகன் : சி.என்.எச்.சாள்ஸ், ஆசிரியர், வலை. (0776913337)** (இ)

**நல்லூர்.**


## கடந்த ஆண்டு அபிவிருத்தி; யாழ்.மாவட்டத்துக்கு 17,026 மில்லியன்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் 2013 ஆம் ஆண்டில் 17, 026 மில்லியன் ரூபா அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்டது.

இதில் 7 ஆயிரத்து 168 மில்லியன் ரூபாவுக்குச் செலவு செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் அறிவித்துள்ளார்.

இறுதியாக நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் அறிக்கையிலேயே இவ்வாறு அறிவித்துள்ளார்.

நிதி ஒதுக்கீடுகள் யாவும் மாகாண சபை, முன்னிலை (நிரல்) அமைச்சுக்கள், விசேட திட்டங்களின் ஊடாக இது இடம்பெற்றதாகவும், இதில் அரைவாசித் தொகையை விடக் குறைந்தளவான நிதியே செலவு செய்யப்பட்டுள்ளது.

இவ் ஒதுக்கீடுகள் விவசாயம், மீன்பிடி, கைத்தொழில், வீடமைப்பு, மீள் குடியமர்வு, போக்குவரத்து, உட்கட்டமைப்பு மற்றும் நிர்வாக ரீதியான செலவு உட்பட 7 ஆயிரத்து 168 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, இவ்வருடம் ஒதுக்கப்பட்ட நிதி முழுவதும் செலவு செய்வதற்கு ஏற்ற ஒழுங்குகள் இணைத் தலைமை யூடாக முன்னெடுக்கப்படும் என திணைக்களத் தலைவர்கள் எதிர்பார்ப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ)

## படைவீரர்கள் 18பேர் படுகாயம்; வாகனம் விபத்தில் சிக்கியதால் விபரீதம்

முல்லைத்தீவு- திருமுறிகண்டிப் பகுதியில் இராணுவத்தினரின் டிரக் வண்டியொன்று நேற்று விபத்துக்குள்ளானதில் 18 இராணுவ வீரர்கள் காயமடைந்துள்ளனர்.

விபத்தில் காயமடைந்த இராணுவத்தினர் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர். கிளிநொச்சியில் இருந்து வவுனியா நோக்கிப் பயணித்த டிரக் வண்டியொன்று, முற்பகல் 11.00 மணியளவில் வீதியைவிட்டு விலகி, விபத்துக்குள்ளானதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

## மீன் சந்தை விவகாரம்; சுமூகத்தீர்வு விரைவில்

(யாழ்ப்பாணம்)

வலி.மேற்கு மக்கள் எதிர்பார்த்தபடி சங்கானை மீன் சந்தை வயல் காணியில் அமையும். இதற்கான அனுமதி எதிர்வரும் 21 ஆம் திகதி இடம்பெறும் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் இணைத் தலைவர்களால் அங்கீகரிக்கப்படும்.

வலி.மேற்கு பிரதேச சபையும், வலி.மேற்கு பிரதேச செயலகமும் மற்றும் திட்டத்துடன் சம்பந்தப்பட்ட ஏனைய திணைக்களத் தலைவர் களும் இதற்கு முன்னுரிமை அளித்துள்ளதாகவும், மாவட்ட ஒருங்கிணைப்பு அனுமதியைத் தொடர்ந்து மூன்று கோடியே 20 இலட்சத்திற்கான திட்டத்துக்கு அடிக்கல் நாட்டும் வைபவம் மே மாத நடுப் பகுதியில் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டது. (92)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 ஏப்ரல் 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.